# ஞானச்சுடர்




ஆவணி
புரட்டாதி

2022

296, 297ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு.**

**பொருள் :** உண்மைப் பொருளல்லாதவற்றை உண்மைப் பொருள் என்று அறியும் மயக்கத்தினால் சிறப்பில்லாத பிறவி உண்டாகும். (351)

**இருள் நீங்கி யின்பம் பயக்கும் மருள் நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு.**

**பொருள் :** மயக்கம் தெளிந்த மெய்யறிவுடையவருக்கு அம் மெய்யறிவு துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும். (352)

# நற்சிந்தனை

## *மறப்பேனோ குருநாதன் தன்னை*

## அன்னையொத்த செல்வன் அறி

**வெண்பா**



ஆசைக் கடலி லலைந்து திரிவார்கள்
ஆசை கடந்தவனை யாரறிவார் - மாசற்ற
மேகத்தைச் சந்திரனை மின்மினிதான் மூடுமோ
மோகத்தை யின்றே முனி. 07

உயர்ந்ததிருக் கோபுரமு மோங்கெயிலுங் கண்டு
வியந்து விழுந்தெழுந்து விம்மி - அயர்ந்துநிற்கும்
ஆடவரும் மங்கையரும் மற்றுள்ள அன்பர்களும்
பாடவரு வார்தினமும் பார். 08

எட்டு மிரண்டும் அறியாத வென்னையும்
நட்டஞ்செய் செல்லப்பன் நல்லூரில் - திட்டமுடன்
நீயேநா னென்று நினைந்துருக வைத்தனனே
தாயே யனையா னவன். 09

ஆதியந்த மில்லையென்று சொல்லாமற் சொன்னான்காண்
நீதி நெறிவிளங்கும் நல்லூரில் - வீதியிலே
என்னைத்தா னாக்கி எடுத்தாண்டான் யாரென்னின்
அன்னையொத்த செல்வன் அறி. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 296

| 2022 | பொருளடக்கம் | ஆவணி |
|---|---|---|


| | | |
|---|---|---|
| முடிவுகள் எடுக்க முந்திக்... | சி. நற்குணலிங்கம் | 01 - 03 |
| உழுதுண்டு வாழ்வாரே... | பு. கதிரித்தம்பி | 04 - 05 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 06 - 12 |
| ஆலயங்கள் ஆடம்பரமல்ல... | சாம் ரமேஸ்குமார் | 13 - 14 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 15 - 16 |
| போதும் என்ற மனமே... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 17 - 19 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 20 - 23 |
| காங்கேசன்துறைப் பிரதேசமும்... | ச. சஜீலன் | 24 - 30 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 31 - 33 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 34 - 37 |
| அச்சது பொடி செய்த அதிதீரா | ஆர்.வீ. கந்தசுவாமி | 38 - 39 |


| சுடர் - 297 | பொருளடக்கம் | புரட்டாதி |
|---|---|---|


| | | |
|---|---|---|
| வரலட்சுமி விரதமும் விரத... | கு. சோமசுந்தரம் | 40 - 43 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 44 - 47 |
| திருவாசகம் குட்டித்திருவாசகம் | முருகவே பரமநாதன் | 48 - 53 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 54 - 55 |
| மாமிச போசனம் தெய்வத்... | எஸ். ஜடா | 56 - 57 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 58 - 61 |
| சைவ சமயத்தின் அருமை... | பு. கதிரித்தம்பி | 62 - 63 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 64 - 67 |
| கோயில் இல்லா ஊரில்... | மு. செல்லத்தம்பி | 68 - 69 |
| இயற்கையை மதிக்கும்... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 70 - 71 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 72 - 74 |
| வெற்றியை நல்கும் விஜயதசமி | கே.எஸ் சிவஞானராஜா | 75 - 76 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனிதனின் உலக வாழ்வின் பக்கவேர்களில் ஒன்றாக விளங்குவது நம்பிக்கை ஆகும். ஒருவர் மற்றவர்மீது கொள்ளும் நம்பிக்கை அவர்களை ஏதோ ஒரு வகையில் பிணைக்கிறது. அப்பிணைப்பே பின்னர் நட்பாக மலர்கின்றது. அந்நட்பு வளர்வதற்கு நாணயமான நேர்மையான நம்பிக்கை அவசியம்.

ஒருவர்மீது முழு நம்பிக்கை வைத்துவிட்டால் அவனது நாணயத்தையும் விசுவாசத் தையும் சந்தேகிப்பதில்லை. அவன் தனக்கு கேடு விளைவிப்பான் என்று எள்ளளவும் நினைப்பதில்லை. இந்நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் நாணயமற்றதாக்கி நம்பியவனுக்குக் கெடுதல் செய்வது நம்பிக்கைத் துரோகமே. நண்பன் உதவுவான் நல்லதையே தனக்குச் செய்வான் என்று நம்பியிருப்பவனை ஏமாற்றுவது புத்திசாலித்தனம் அல்ல. அது அவனுக்கு நாம் செய்யும் துரோகமே. இவ்வாறு துரோகம் செய்பவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காகவே "நம்ப நட நம்பி நடவாதே" என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். ஒருவன்மீது நம்பிக்கை அதீதமாகி அவ்வாறு தன்னிடம் புகலிடம்பெற்ற, தஞ்சமடைந்த ஒருவனைக் கொல்வது மாபெரும் துரோகச்செயல் ஆகும். அது வீரம் அல்ல கோழைத்தனமே.

ஒருவன் போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்கும் எதிரியைக் கொல்வது அதர்மம் துரோகம் என்று அறம் கூறுகின்றது. அவ்வாறிருக்கையில் தன்னை நம்பி நாடியவனைக் கொல்வது அதர்மம், துரோகம் மட்டுமன்றி கொடிய சமூகவிரோதக் குற்றமுமாகும்.

"நம்பினவர்களை ஏமாற்றுவதில் சாமர்த்தியம் இல்லை. மடியில் படுத்து உறங்குபவர் களைக் கொல்வதில் வீரம் இல்லை". இவை இரண்டிலும் இருப்பவை "துரோகமே" என்று மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் இழைப்பவர்கள் மனிதர்களாகக் கணிக்கத் தகுதி இழந்தோராவார். இவ்வாறு அறம் வழுவுவோர் சமூகத்தில் இருந்து தூரத்தே ஒதுக்கப்பட வேண்டியவர்கள். ஆகையால் ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் மனித நேயத்தோடு மற்றவர்மீது நம்பிக்கை வைத்து அடுத்தவருக்குத் துரோகம் இழைக்காது நட்புணர்வுடன் அனைவருடனும் உறவுகளைப் பேணி இவ்வுலகில் மனித வாழ்வை வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் என்பது என்ன?

நம்மிடம் உள்ளதை நம்மால் முடிந்ததை செய்வது. மற்றவர்கள் நல்லாயிருக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்தவன் மட்டுமே புண்ணியத்தைச் செய்யவேண்டும் என்று நினைப்பான். அப்படிப்பட்ட நல்ல மனம் ஒன்றே போதும் புண்ணியம் செய்வதற்கு. ஆம் புண்ணியம் செய்ய மனம் வேண்டுமே தவிர பணம் தேவையில்லை. உங்கள் மனம் நல்லதையே நினைக்கட்டும். அதுவும் மற்றவர்களுக்காக இருக்கட்டும். இதுதான் புண்ணியம். மற்றவர்களின் துக்கங்களை உங்களது என்று எண்ணி வருந்துங்கள். உங்களுக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை மற்றவர்களுக்காவது கிடைக்கட்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள். அனைத்து உயிர்களுக்கும் உங்களுக்கும் தொடர்பு உண்டு என்று எண்ணிக்கொள்ளுங்கள். உங்களால் அனைவருக்கும் அன்பான ஆதரவான எண்ணங்களை அளிக்கமுடியும் என்று எண்ணுங்கள். உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும் என்று நம்புங்கள். இறைவனைத் துணைக்கு அழையுங்கள். மற்றவர்களுக்காக உதவ இறைவனிடம் வேண்டுங்கள். தன்னலமற்ற எண்ணத்தை இவ்வுலகில் பரவ விடுங்கள். அனைவரும் உங்களுக்கு அன்பானவர்களாக மாறிவிடுவார்கள். உங்கள் உள்ளம் மகிழ்ச்சியாகிவிடும். அனைவரும் நிம்மதியாக வாழ்வார்கள். அந்த மகா புண்ணியம் உங்களை மட்டுமே வந்துசேரும். இந்தப் புண்ணியச் செயலுக்கு நீங்கள் செலவு செய்தது என்ன? ஒன்றுமில்லையே. பைசாகூட செலவு செய்யவில்லை. எங்கும் அலையவில்லை. யாரிடமும் கோபம்கொள்ளவில்லை. பொய் கூறவில்லை. யாரிடமும் எதற்காகவும் கையேந்தவில்லை. யாரும் உங்களைக் குறைகூறப்போவதில்லை. எதையும் இழக்கவில்லை. எதையும் இழக்காமல் நீங்கள் புண்ணியத்தை மட்டுமே சம்பாதிக்கிறீர்கள்.

சரி, இதை எப்படிச் செயல் வடிவத்திற்குக் கொண்டுவருவது என்பதைப் பார்ப்போம். இதைச் செயல் வடிவத்திற்கு கொண்டுவருவது மிகஎளிது. தினமும் ஏதேனும் ஒரு நேரத்தில் யாராவது ஒருவர் நன்றாக இருக்கவேண்டும் என்று எண்ணுங்கள். இதற்காக நேரம் காலம் பார்க்கத்தேவையில்லை. எந்த நேரத்திலும் யாருக்காகவும் எண்ணிக்கொள்ளலாம். ஆரம்பத்தில் சொந்த பந்தங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். நாளடைவில் கண்ணில் படும் அனைவருக்காகவும் வேண்டிக்கொள்வீர்கள். நாட்கள் செல்லச் செல்ல, நீங்கள் கேள்விப்பட்டர்களுக்காகவும் அவர்கள் நல்ல முறையில் வாழ நீங்கள் எண்ணத் தொடங்குவீர்கள். நீங்கள் வேண்டிக்கொள்ளும் நபர்பற்றி கவலைப் படாதீர்கள். அவர் எவ்வளவு மோசமானவராக இருந்தாலும் அவர் நல்ல முறையில் வாழ நீங்கள் வேண்டிக் கொள்ளுங்கள். அம்புலன்ஸ் வண்டிச் சத்தம் கேட்கும் போதெல்லாம் அதில் பயணம் செய்பவர் நல்லமுறையில் குணம் அடைய இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள். யாரோ ஒருவர் விபத்தில் அடிபட்டுவிட்டார் என்று கேள்விப்பட்டால் அவர் உடல் நலம்பெற எண்ணிக்கொள்ளுங்கள். மனிதர்கள் மட்டுமல்ல அனைத்து உயிர்களிடமும் இந்தச் செயலைச் செய்யுங்கள். தெருவோரம் ஒரு மரம் வெட்டப்பட்டிருந்தால் அதற்காகவும் எண்ணிக்கொள்ளுங்கள் அந்த மரத்தை வெட்டியவர் மேலும் சில மரங்களை நடட்டும் என்று. வெட்டப்பட்ட மரம் மற்றவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவட்டும் என்று. உலகத்தில் உள்ள அனைவரும் நன்றாக இருக்கட்டும் என்று ஒற்றை வரியில் முடித்துக் கொள்ளாதீர்கள். ஒவ்வொருவரையும் நினைவில் வைத்து தனிப்பட்ட முறையில் அவர்களுக்காக அவர்கள் நன்மைக்காக வேண்டிக் கொள்ளுங்கள். மிகப் பெரிய புண்ணியம் உங்களை வந்துசேரும். இப்படியெல்லாம் செய்யமுடியுமா? என்றால் நிச்சயம் செய்யமுடியும். இந்த எண்ணங்களுக்காக நீங்கள் பணமாக செலவு செய்யவேண்டியது எதுவும் இல்லை. ஆனால் இதன்மூலம் கிடைப்பதோ மிகப்பெரிய புண்ணியம். எனவே புண்ணியம் செய்ய பணம் ஏதும் தேவையில்லை. நல்ல எண்ணங்களுடன் கூடிய மனம் இருந்தால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி நாயகி

ஆதிசிவன் பாதியாம் அன்னை சிவசக்தி
மேதினியில் மேன்மையுறச் செய்பவளை நாம்பாட
அன்னை தந்தை உலகென்று அன்புடனே வலம் வந்த
முன்னைப் பரம் பொருளே முன்நின்று காத்திடுவாய்.

மலையரன் மகளாம் மாதரசி உமையவளை
காதலுடன் நாம் கரம் கூப்பித் தொழுதிட்டால்
மலைபோலத் துன்பங்கள் பனிபோல விலகிவிடும்
ஆதவன் கண்ட தாமரைபோல் அன்பு மலர்ந்துவிடும்.

சுற்றியுள்ள பகையெல்லாம் துச்சமென எண்ணிடவே
அச்சமற்ற நிலையெனக்கு அன்னையே அருளிடுவாய்
வெற்றித் திருமகளே வீறுநடை போட்டுவந்து
நச்சுக் குணங்களெல்லாம் நாயகியே நசுக்கிடம்மா.

அரவணையில் துயிலும் அரவிந்தன் திருமார்பில்
அன்புடனே வீற்றிருக்கும் அலைமகளே அன்னையே
திருமகளே உந்தன் திருவருளை யாம் வேண்டி
இன்பமுடன் அழைக்கின்றோம் வந்திடுவாய் எமக்கருள.

மண்ணிற் கலைஞானம் மகிழ்ந்தளிக்கும் மாதாவே
விண்ணோர் புகழ்ந்தேத்தும் வேத வித்தகியே
கண்போன்ற கல்வியிலே கலைமகளே நாம்சிறக்க
நண்ணியே வந்து நலமருள்வாய் நாயகியே.

வாழை மரமாக வளர்ந்தவனை அழித்தவளே
வாழையடி வாழையாய் நமக்குள்ளே வளர்ந்து வரும்
ஆணவமலமதனை அகவிருளைப் போக்குதற்கு
வேண்டி விரதங்கள் விருப்புடனே நோற்றிடுவோம்.

இம்மைக்கும் மறுமைக்கும் அருள்வேண்டி நிற்கின்றோம்
அம்மையே உந்தன் அருளொளியை வீசிடம்மா
முப்பெரும் சக்திதனை முறையே நாம் பெற்றாலும்
இப்புவியில் இன்பமுடன் நாம் வாழப்
பணி வென்னும் குணமருள்வாய்
வாணி சரஸ்வதியே.

-திருமதி பரமேஸ்வரி நடராஜா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| A. ஆனந்தகுமார் | (லண்டன்) |
| உரிமையாளர் | (மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்) |
| Dr திருமதி பத்மராணி குகானந்தன் | (பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி) |
| S.S. றஜீந்திரன் | (நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்) |
| சி. சிவமூர்த்தி | (ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்) |
| அ. சிவகுமார் | (யாழ்ப்பாணம்) |
| A. நாகரெத்தினம் | (கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி) |
| இ. குமாரசாமி J.P. | (ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி) |
| பொ. குமாரசாமி | (சட்டத்தரணி, நவிண்டில்) |
| திருமதி கௌரி சுரேசன் | (ஆசிரியர், ஆவரங்கால்) |
| செ. கந்தசாமி | (வங்கியாளர், சண்டிலிப்பாய்) |
| நா. சிவசிதம்பரம் | (கோணாவளைலேன், கொக்குவில்) |
| இராசையா தங்கவேல் | (அச்சுவேலி) |
| S. அருளையா | (கொழும்பு) |
| ச. பத்மநாதன் | (தெற்குத் தோப்பு, புத்தூர்) |
| க. தெய்வேந்திரம் | (பண்டத்தரிப்பு) |
| தே. தேவராஜேந்திரன் | (திகிரி லேன், தும்பளை) |
| பொ. நாகலிங்கம் | (கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு) |
| முத்து கணேஷ் | (மஞ்சத்தடி, இணுவில்) |
| K. கஜமுகன் | (இராசவீதி, நீர்வேலி) |
| செ. சிவலிங்கம் | (மலர் வசந்தம், இணுவில்) |
| N. ஜெயரட்ணராசா | (பண்ணாகம், சுழிபுரம்) |
| சி.து. கலைச்செல்வம் | (பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைவர் | (வாழ்வகம், சுண்ணாகம்) |
| வை.ச. பரஞ்சோதி | (சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்) |
| ச. ஸ்ரீவிவேகானந்தராசா | (கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்) |
| சீ.சி. கந்தையா (பலாலி) | (ஆவரங்கால்) |
| சி. முருகதாஸ் | (சிறுப்பிட்டி தெற்கு) |
| T. தியாகலிங்கம் | (இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்) |
| S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார் | (மானிப்பாய் தெற்கு) |
| இ. தயாபரன் | (கோண்டாவில்) |
| S. சாம்பவி | (யாழ்ப்பாணம்) |
| செ. தர்மலிங்கம் | (சாவகச்சேரி) |
| திருமதி தி. பரமேஸ்வரி | (ஆனைக்கோட்டை) |
| S. பொன்னம்பலம் | (சுண்ணாகம்) |
| ப. திருக்குமரன் | (அமுதசுரபி, கட்டுடை) |
| சி. நவரெத்தினம் | (ஆனந்தா வீதி, மானிப்பாய்) |
| சி. சுப்பிரமணியம் | (சமரபாகு, உடுப்பிட்டி) |
| சிறீ மாதவன் | (கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) |
| ந. பொன்னுத்துரை | (தொம்பை வீதி, உடுவில்) |
| ச. திவாகரன் | (உரும்பராய் மேற்கு) |
| க. சச்சிதானந்தன் | (சந்தை வீதி, உடுப்பிட்டி) |
| நா. மகேந்திரராசா | (பிறேம மகால், வல்வெட்டி) |
| சு. சிவராசா | (கொக்குவில்) |
| வ. சிவலிங்கம் | (குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி) |
| கா. அருளானந்தன் | (அராலிவீதி, சங்கானை) |
| பத்மநாதன் குணசுந்தரி | (ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை) |
| ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம் | (அச்சுவேலி) |
| வே. இராஜேந்திரா | (ஆவரங்கால்) |
| ச. மார்க்கண்டு | (ஊரெழு மேற்கு) |
| திருமதி கமலஹாசன் மஞ்சுளா | (வல்வெட்டி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| **Dr. K. இராதாகிருஷ்ணன்** | (மெடிக்கல் சென்ரர், நெல்லியடி) |
| **இராசையா குகதாசன்** | (யாழ்ப்பாணம்) |
| **சி. கனகசபை** | (யாழ்ப்பாணம்) |
| **அ. மகேந்திரராசா** | (மல்லாகம்) |
| **சி. செல்லையா** | (கரவெட்டி) |
| **M.S.K. மகேஸ்வரன்** | (கொக்குவில்) |
| **சி. சிவநேசன்** | (கொக்குவில்) |
| **வ. கதிர்காமநாதன்** | (சுண்ணாகம்) |
| **S. மகாதேவன்** | (உரும்பராய்) |
| **க. காசிநாதர்** | (நீர்வேலி) |
| **K.S. கணபதிப்பிள்ளை** | (கைதடி) |
| **தி. கோபாலகிருஷ்ணன்** | (புத்தூர்) |
| **உரிமையாளர்** | (விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி) |
| **வே. தர்மராசா** | (பொதுமுகாமையாளர், சுண்ணாகம்) |
| **செ. புவனேந்திரராசா** | (மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி) |
| **செல்லையா சிவசம்பு** | (இளை.அதிபர், வளலாய்) |
| **த. சிவகுருநாதன்** | (துவாரகா வெதுப்பகம், நவிண்டில்) |
| **காரை. M.P அருளானந்தன்** | (ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்) |
| **ப. நடராசாக்குருக்கள்** | (ஆவரங்கால், புத்தூர்) |
| **இ. ராதாகிருஷ்ணன்** | (ஏழாலை மத்தி, ஏழாலை) |
| **க. ஸ்ரீஸ்கந்தராசா** | (இளை. அதிபர், அச்சுவேலி) |
| **சோ. தனராசா** | (வாணிமஹால், வட்டுக்கோட்டை) |
| **நாகேந்திரம் கண்ணம்மா** | (மானிப்பாய்) |
| **வ. கந்தசாமி** | (பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி) |
| **சி. சிவச்செல்வம்** | (இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி) |
| **கு. மதனமோகன்** | (சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **ஆ. திருநாவுக்கரசு** | (இணுவில் மேற்கு) |
| **நா. கனகலிங்கம்** | (தபால் வீதி, கொக்குவில்) |
| **B.R. ரஞ்சன்** | (சர்வதேச லயன்ஸ் கழக உறுப்பினர், யாழ்ப்பாணம்) |
| **சி. லிங்கேஸ்வரி** | (மதவடிலேன், சுதுமலை) |
| **சு.சண்முகசுந்தரம்** | (முருகமூர்த்தி வீதி, நெல்லியடி) |
| **க. தெய்வானைப்பிள்ளை** | (V.M. றோட், பருத்தித்துறை) |
| **பார்த்தசாரதி விஜயகுமார்** | (சுழிபுரம்) |
| **திருமதி. ப. தேவமனோகரன்** | (கந்தபுஷ்கரணி, நவாலி) |
| **அ. ஆறுமுகம்** | (உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை) |
| **கயிலைநாதன் மங்களகாந்தி** | (வேழலகம், ஆனைக்கோட்டை) |
| **இ. இந்திரலிங்கம்** | (இணுவில் கிழக்கு) |
| **இ. சர்வேஸ்வரன்** | (கலைவாணி வீதி, கோண்டாவில்) |
| **த. விசயகுமாரன்** | (பழம்றோட், கந்தர்மடம்) |
| **செல்வி.சு. பகீரதி** | (செட்டித்தெரு, நல்லூர்) |
| **கனகேஷ்வரன் பிரகாஷ்** | (கைதடி கிழக்கு) |
| **சி. செல்வரத்தினம்** | (நீர்வேலி) |
| **ஐ. ராமச்சந்திரா** | (லவ்லேன், உடுவில்) |
| **சி. சகுந்தலாதேவி** | (வங்களாலேன், மல்லாகம்) |
| **அ. ராஜ்சங்கர்** | (உரும்பராய்) |
| **ம. நாகேஸ்வரி** | (நவிண்டில்) |
| **த. லதாசந்திரிக்கா** | (மகாத்மா வீதி, நெல்லியடி) |
| **க. நற்குணராஜா** | (பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி) |
| **செ. இராஜேஸ்வரி** | (15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி) |
| **ஜெயா** | (உப அஞ்சல் அதிபர், நீர்வேலி) |
| **த. பூபாலன்** | (கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி) |
| **கா.ஆ. சச்சிதானந்தம்** | (சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி) |
| **தினேஸ் கவிதா** | (ஆவரங்கால்) |
| **க. சிவசுப்பிரமணியம்** | (கோப்பாய்) |
| **நா. கமலநாதன்** | (வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்) |
| **செ. சோதிப்பெருமாள்** | (சரஸ்வதி மஹால், இணுவில்) |
| **சி. வேலாயுதம்** | (இளை. அதிபர், வதிரி, கரவெட்டி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுகள் எடுக்க முந்திக்கொள்ளாதே

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

முடிவு என்பது ஆரம்பம் அல்ல. அது ஆரம்பத்தின் இறுதியே. வாழ்க்கையில் முடிவு எடுத்தல் என்பது மிக முக்கியமான ஒரு கட்டமாகும். இது சிலருக்கு ஒரு திருப்புமுனை யாகவும் அமைந்துவிடுகிறது. அதாவது சிலர் எடுக்கும் முடிவு சிலரை முடித்தும்விடுகிறது. முடிவுகள் நல்லவையாக அமைய முடிவுகள் எடுக்கும்போது அவசரப்பட்டு முந்திக்கொள் ளக்கூடாது. ஆனால் முந்துவோர் பலர். அதற் காக பிந்திக்கொள்ளலாமா என்றால் வேண் டாம். முடிவுகள் வாழ்வை சரிக்கக்கூடாது, நிமிர்த்த வேண்டும். முடிவு எடுப்பது மதிப்பீடு மற்றும் தேர்ந்தெடுக்கும் செயல்முறையாக புரிந்துகொள்ளப்படுகிறது. பகுத்தறிவு மற்றும் விருப்பத்தின்மூலம் ஒரு குறிப்பிட்ட சூழ் நிலையை தீர்க்கும் நோக்குடன் மேற்கொள் ளப்படுவது. முடிவெடுப்பது ஒரு சூழ்நிலை யின் தொடர்ச்சியான நிபந்தனைகள் மற்றும் மாறிகளின் மதிப்பீட்டை உள்ளடக்குகிறது.

நாம் உணர்ச்சிவசப்பட்டிருக்கும்போது நாம் எடுக்கும் முடிவுகள் எப்போதும் நன்மை யில் முடியாது. பல சந்தர்ப்பங்களில் அம் முடிவுகள் தவறானதாக இருக்கவே வாய்ப்பு கள் அதிகம். உணர்ச்சியை கட்டுப்படுத்தக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். கோபம், பதற்றம், மனஅழுத்தம் உள்ளபோது முடிவு கள் தவறானதாகவே இருக்கும். முடிவு நிதானமாக எடுக்கப்பட வேண்டும். தெளிவற்ற முடிவுகள் நிச்சயமற்ற முடிவுகளாகும். அவை பிரச்சனைகளுக்கு ஆதாரமாகும். ஒரு முடிவை எடுப்பதற்குமுன் அது குறித்து தெளி வாகத் திட்டமிட வேண்டும். மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்காமல் எடுக்கப்பட்ட தனிப்பட்ட முடிவு எப்போதும் நன்மையில் முடியுமென்று கூறமுடியாது. கருத்துக்களைக் கேட்டு ஆலோசனை நடாத்திய பின்பு முடிவு எடுப்பது சிறந்தது.

ஒரு கடினமான விஷயத்தில் முக்கிய மான முடிவெடுக்கும்போது தங்களது உள் உணர்வின்படி சென்றால் அந்த முடிவு சிறப் பாக இருக்காது. எந்த ஒரு முடிவையும் உரிய காலத்தில், நிதானம் தவறாது யோசித்து எடுக்கவேண்டும். சிறிது நேரத்துள் யோசித்து எடுக்கும் முடிவில் கவனம் வேண்டும். சரியாக வும், திட்டமிட்டும், மனத்தெளிவுடனும் முடி வெடுத்தவர்கள்தான் பின்னாளில் சாதனை யாளர்களாகவும் இருக்கிறார்கள். அவசரப் பட்டு எடுத்து வருத்தப்படக்கூடாது. பிரச்சனை அல்லது தடுமாற்றத்தை எதிர்கொள்ளும்போது அவை தொடர்பான பயனுள்ள தகவல்களை சேகரித்தல், முன்னுரிமைகளை அடையாளம் காணுதல், சாத்தியமான மாற்றுவழிகளை அடையாளம் காண்பதன்மூலம் முடிவை அணுகுவது நல்லது. எடுக்கும் முடிவுகள் நம் வாழ்க்கையில் வெற்றிக்கனியை பரிசாகத் தர வேண்டும்.

குறைந்தது இரண்டு வகையான முடிவுகளை வேறுபடுத்தி அறியலாம். திட்ட மிடப்பட்ட அல்லது கட்டமைக்கப்பட்ட முடிவு கள், திட்டமிடப்படாத அல்லது கட்டமைக்கப் படாத முடிவுகள். திட்டமிடப்பட்ட முடிவுகள் பிரச்சனையின் சிறப்பியல்புகளைக் கருத்தில் கொண்டு சரியான நேரத்தில் முன்னறிவிக்கப் பட்டவை. அதற்கான ஒழுங்குமுறைகள், விதி கள் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவாகும். திட்டமிடப்படாத முடிவுகள் ஒரு மோதல்

*ஒன்றை உன்னால் கனவுகாண முடியுமாயின் அதனை உன்னால் செய்யவும் முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது குழப்பமான சூழ்நிலை எதிர்பாராத விதமாக எழும்போது அல்லது அதன் அசா தாரண பண்புகள் ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் வடிவமைப்பு தேவைப்படும்போது அவசியமாக எடுக்கப்பட வேண்டியவை. ஒரு மோசமான முடிவும் ஒரு விளைவாகும். அது வாழ்க் கையை மேல்நோக்கிச் செலுத்தாது. குறுகிய மற்றும் நீண்டகால முடிவுகள் தெளிவான தாகவும், பயனுள்ளதாகவும், திறமையாகவும் இருக்கவேண்டும்.

முடிவெடுக்கும் திறமை என்பது எல்லோருக்கும், எல்லா நேரங்களிலும், எல் லாச் சூழ்நிலைகளிலும் சரியானதாக அமை யுமா என்பது சந்தேகமே. ஒருவர் அடையும் வெற்றி என்பது அவர்கள் எடுக்கும் முடிவு களைப் பொறுத்தே அமையும். வெற்றிப் படிக் கட்டுகளில் ஏறுவதாக இருந்தாலும் சரி, சரிவுப் பாதையில் செல்வதாக இருந்தாலும் சரி எடுக்கும் முடிவுகள் மட்டுமே காரணம். வேறு மாதிரியான முடிவுகளை எடுத்தால் எதிர் காலத்தில் ஆச்சரியங்கள்தான் காத்திருக்கும். எந்தவொரு பிரச்சினையையும் சரியான முறை யில் வடிவமைத்தால் அந்தச் செயல்முறை யிலேயே வெகுவான பிரச்சனைகள் தீர்க்கப் பட்டுவிடும். ஒருவரது அனுமானம், இலக்கு, அனுபவம் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவை பிரச்சனைகளைச் சரியான முறையில் வடி வமைக்க உதவும்.

தெளிவாக முடிவெடுக்கும் திறன் என்பது மாறுபட்ட கருத்துக்களை தெரிந்து எடுக்கும் பாங்காகும். தற்காலத்தில் மாறுபட்ட கருத்துக் குவியல்களிலிருந்து தெளிவான முடிவுகளை தேர்ந்தெடுக்க வேண்டும். முடி வெடுப்பதைக் காட்டிலும் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் கொண்டுசெல்வது முக்கியமானதாகும். எடுத்த முடிவுகள் எந்த அளவிற்கு சரியானது என்பதை அறிய மதிப்பீடு மேற்கொள்ளுதல் வேண்டும். அறிவு சார்ந்த முடிவுகளை எடுக்கவேண்டும். எடுத் தேன், கவிழ்த்தேன் என முடிவெடுப்பவர்கள் அல்லற்பட நேரிடும். முடிவெடுக்கும்போது அதன் பின்விளைவுகள் என்ன என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏனெனில் புதிய பிரச்சனைகள் தோன்றாதிருக்க உதவும். ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். இருக்கும் சூழலை ஆய்வுசெய்து பிரச்சனை களைத் தீர்க்கும் நோக்குடன் முடிவெடுப்பில் இறங்கவேண்டும். இம் முடிவு எதிர்காலத்தில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்திவிடக்கூடாது. தெளிவாக முடிவெடுத்தல் மூலம் மன அமைதி, குடும்பப் பிரச்சனைகள் எனப் பல பிரச்சனைகளிலிருந்து மக்கள் விடுபட முடியும். வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளில் முடிவெடுக்கும் திறன் என்பது முக்கிய அங் கம் வகிப்பதால் முடிவுகள் எடுக்க முந்திக் கொள்ளாதே.

தெளிந்த புத்தியோடு முடிவெடு. தெளிந்த புத்தியுடன் முடிவெடுத்தல் என்றால், நிதானமாக, நியாயமாக, விவேகமாக என எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து முடி வெடுத்தல் ஆகும். எடுக்கும் முடிவுகள் வாழ்க் கையை தீர்மானிக்கக்கூடியவை. முடிவெடுத் தல் என்பது வாழ்வில் ஒரு அங்கமாகிவிட்டது. முடிவெடுக்கும்போது பல விஷயங்களை ஆராய வேண்டும். இதை நாம் எதற்காகச் செய்கிறோம்? அவ்வாறு செய்தால் ஏற்படும் விளைவுகள் எவை? இது எனக்கு எந்த அளவுக்கு சரியானதாக அமையும்? எனப் பல வினாக்களைக் கேட்டு எடுத்த முடிவில் தெளிவு, முழுமையான நம்பிக்கை, எதையும் பார்த்துக்கொள்வேன் என்ற நம்பிக்கையுடன் இணைந்த துணிவு ஆகியன இன்றியமை யாதன. துணிந்து முடிவெடுத்து அதில் நம்பிக் கையை முதலீடு செய்யுங்கள். முடிவு

*செய்ய முடிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும்போது பிறர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்னும் எண்ணம், தோல்வியைக் கண்டு பயப்படவேண்டிவரும் என எண்ணுதல், சோம்பல் என்பன இருக்கக்கூடாது. தைரியமாக முடிவெடுத்தால் அது தெளிவானதாக இருக்கும். தெளிவாக யோசித்தாலே முடிவு தெளிவாக அமையும்.

ஆராய்வதன் முடிவு தெளிவு பெறும். தெளிவு பெற்றபின் முடிவெடுப்பின் அது தெளிந்த முடிவாகும். அரைகுறையாக முடிவெடுக்கக்கூடாது. அது தீயெச்சம்போல சுடும். உணர்ச்சிவசப்படாமல், நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவெடுப்பதென்பது ஒரு கலை என்பர் சிலர். இல்லை அது அறிவியல் சார்ந்தது, தர்க்க ரீதியானது என்பர் பலர். வரக்கூடிய துன்பங்களை முன்னதாக அறிந்து காக்காமல் அலட்சியப்படுத்துபவன் பின் வருந்துவான். நில், கவனி, முடிவுசெய், பதறாத காரியம் சிதறாது. பார்த்தல், உணர்தல், அறிதல், புரிதல், தெளிதல் இவை ஐந்தும் உண்மையின் பல பரிமாணங்கள். சரியான உண்மைகளை தெரிந்துகொண்டு திட்டவட்ட முடிவுக்கு வரக்கூடிய எண்ணத்திற்குப் பெயர் தெளிதல். தெளிவான எண்ணத்தோடு முடிவெடு. மற்றவர்களின் கருத்துக்களைக் கேள். மற்றவர்களை முடிவெடுக்கவிடாதே.

"குணம்நாடிக் குற்றமும்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்கக்கொளல்" நம் சமுதாயமும் மனிதரில் அதிக நற்குணங்கள் கொண்டவரை நல்லவன் என்றும், மாறாக தீயகுணங்களையே உடன்பிறப்புக்களாகக் கொண்டவர்களை தீயவரென்றும் முடிவெடுக்கின்றது. "மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனி உண்டோ" என்ற மகாகவியின் வரிகளை இனியும் உண்டோ என நொந்து எல்லோரும் இன்புற்று வாழ நம் முடிவுகளை எடுக்கவேண்டும். வாழ்க்கை ஒரு நிமிடத்தில் மாறுமா என்று தெரியவில்லை. ஆனால் ஒரு நிமிடத்தில் எடுக்கும் முடிவு நம் வாழ்க்கையை மாற்றிவிடும். சில நேரங்களில் எடுக்கும் பிழையான முடிவுகள் நம்மைச் சரியான பாதையில் பயணிக்கக் கற்றுக் கொடுக்கின்றது எனக் கூறுவோரும் உளர். பகுத்தறிவை பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்த மனிதனிடம் வாதிடுவது செத்துப்போன மனிதனுக்கு மருந்தூட்டுவதற்கு நிகராகும்.

எப்போதும் முடிவு பிரச்சனைக்கு அருகில்தான் இருக்கும். பிரச்சனையை ஊன்றிப் பார். முடிவுகள் எடுக்க முந்திக்கொள்ளாதே. முந்திக்கொள்ளும் முடிவுகள் தரம் குறைந்து காணப்படும். நம்மைத் தேடிவரும் பிரச்சனைகளை மகிழ்வுடன் எதிர்கொண்டு வழியனுப்பு. எதிலும் நிச்சயம் வெற்றிக்கான முடிவு இருக்கும். அதற்குள் பிரவேசித்துப்பார்.

## நாளும் புகழ் உரைத்திட அருள்வாய் முருகா

தேன் பாலொடு இளநீர் தினை
தினம் விரும்பிடும் முருகா
வீண் பேச் சொடு மனம் சோரா
நிலை தந்தெமை ஆள்வாய்
ஊன் சேர்ந்திடு உடல் சுமந்துணை
உணர் வால் பெறும் ஏற்றம்
நான் பாவினால் புனைவேன் கவி
நாளும் (புகழ்) உரைக்க அருள்வாயே

-சின்னப்பு கனபாலசிங்கம்-

*தேவைப்படுவதைப் பெறுவதற்கு தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டே இருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்று எல்லோரும் தொழுதுண்டு பின் செல்பவர்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

தெய்வீக ஔவைப்பாட்டி அன்று அருளிய முதுமொழி என்றும் எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது. அன்று உழவர் உழுது பயிர் செய்யாவிட்டால் உலகிலுள்ள எல்லா உயிர்களும் சிறப்பாக மானுடப்பிறவி அழிந்திருக்கும் என்பது உண்மையாகும். எனவேதான் உயிர்களைக் காப்பாற்றிய பெருமையும், உரிமையும் உழவர்களுக்கே உரியதாகும்.

ஆதிகாலத்தில் கீழைத்தேசங்களில், மாடுகளை கலப்பையில் பூட்டி உழவுத் தொழில் செய்தனர். மேலைத்தேசங்களில் குதிரைகளைப் பூட்டி உழவுத்தொழில் செய்தார்கள். கீழைத்தேசத்தவர் நெல், குரக்கன், சாமை, வரகு போன்ற தானியங்களை விதைத்து உழவுத் தொழில் செய்தார்கள். மேலைத்தேசத்தவர் கோதுமை, சோளம், இறுங்கு போன்ற தானியங்களை பயிரிட்டனர். உழவு ஆரம்பிக்கமுன் இறைவனை வேண்டி கற்பூரம் கொழுத்தி, தேங்காய் உடைத்து, பூமாதேவியை வழிபட்டனர். அன்று பயிர்கள் மழையை நம்பி, குளங்களில் நீர் நிரப்பி நீர்ப்பாசனம் செய்து பயிரை வளர்த்தனர். பயிர் வளர்ந்து கதிர் ஈன்று முற்றியதும்; பயிர்களை அறுவடை செய்து மாடுகளைக் கொண்டு மிதிப்பித்து, தானியங்களை பொதி செய்வார்கள். வயலின் அருகே நெற் குவியல்களை வைத்து இறைவனுக்குப் பொங்கல் செய்து, அமுதை வந்த எல்லோருக்கும் கொடுப்பார்கள். அதன் பின்தான் தானியங்கள் வண்டிகளில் ஏற்றி வீடுசென்று நெற் களஞ்சியத்தில் சேமித்து வைப்பார்கள்.

அன்று ஆட்சி செய்த அரசர்களும் நெற்செய்கைக்கு மக்களுக்கு வேண்டிய உதவி செய்தார்கள். அறுவடை செய்த தானியங்களில் ஒரு பகுதி அரசனுக்குத் திறையாக வழங்கி வந்தனர். அரசன் மக்களுக்கு குளங்களைக் கட்டி நீர்ப்பாசன வசதி செய்தான். அன்று இலங்கையில் வாழ்ந்த சிங்கள மன்னர்கள் குளங்களைக் கட்டி, முதிசம் எண்ணி வாழ்ந்தார்கள். தாதுசேனன் போன்ற மன்னர்கள் பாரிய பெரிய குளங்களைக் கட்டி, பாதுகாத்து வந்தார்கள். தாதுசேனன் மகன் எங்களுக்குரிய முதிசமென்ன என்று வினவியபோது தாதுசேனன் வாவியைக் காட்டி இதுதான் என்றான். இதைக் கேட்டதும் மகன் மிகவும் கோபமடைந்து தந்தையைச் சுவரில் உயிருடன் வைத்துக்கட்டினான் என்று வரலாறு கூறுகின்றது. தமிழ் மன்னர்களும் குளங்களைக் கட்டி பயிர் செய்ய உதவினார்களென்று அறிகின்றோம். தமிழ் மன்னர்களுள் குளக்கோட்டன் என்னும் அரசன்தான் ஏராளமான குளங்களைக் கட்டியதனால் மக்களால் போற்றப்பட்டான்.

இன்று இயந்திரங்களால் உழவுத்தொழிலும், அறுவடை செய்தலும், சூடு மிதித்தலும் நடைபெற்று வருவதைக் காண்கின்றோம். அன்று பயிர் செய்த வரகு, குரக்கன், சாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பயிர்களைப் பயிரிடுதலை மக்கள் குறைத்துக்கொண்டனர். குரக்கன், வரகு, சலரோக நோய் பீடித்தவர்கள் உண்ணவேண்டி உள்ளது. இதை உணராது பண வருவாய் உள்ள நெல் கூடுதலாக பயிரிடப்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்று வாழும் மக்கள் வரகு, குரக்கன், சாமை போன்ற தானியங்களை நோய் உள்ள வர்களும் உண்ணக்கூடிய வகையில் பயிரைச் செய்யாது, நோய் உள்ளவர்களாக வாழ்கின்றனர். அன்று இந்தத் தானியங்களை அறுசுவை மூலிகைத் தாவரங்களின் இலை, குழைகளை சேர்த்து உண்டு நோய் அற்றவர்களாக வாழ்ந்தனர். இப்போது சத்தில்லாக் காய்கறிகளை வாங்கிச் சமைத்து உண்பதினால் மக்கள் நோய்வாய்ப்படுகின்றனர். அன்றி கடைகளிலுள்ள உணவுகளையும் நம்பி உண்டு, நோய்ப்பட்டு வைத்தியசாலைகளை நாடுவதையும் காண்கின்றோம்.

உழவுத்தொழில் செய்து பெருமை அடைந்த விவசாயிகளுக்கு இன்று விஞ்ஞான வளர்ச்சியினால், இயந்திரங்கள் பாவனைக்கு வந்ததினாலும் உழவன் பெருமையை பேசு வாரில்லை. அன்று உழவுத் தொழிலுக்கு எருதுகளைப் பூட்டி, உழுததினால் இன்றும் எருது களை மறவாமல் தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் மாட்டுப்பொங்கல் செய்கிறார்கள். மாடுகளை நீராட்டி, அலங்காரம் செய்து படையல் முன் நிறுத்தி வழிபாடு செய்வதை நன்றி மறவாத மக்கள் செய்கின்றனர். பசுக்கள் பால் கொடுப்பதாலும், தோட்டத்துக்கு பயிர் செய்ய சாணி கொடுப்பதாலும் அவைகளையும் மாட்டுப்பொங்கலில் சேர்த்துக்கொள்ளுகின்றனர். இவ்வகையில் உழுதுண்டு வாழ்வாரை நாம் பெருமைப்படுத்தும் வகையில் மதித்து வாழ்வோமாக.

## எனைக் காப்பாய்!

*பல்லவி*

மனதினில் கோயில் கட்டி, மங்கல விளக்கேற்றி
மகிழ்ந்துனைப் பாடி நிற்பேன் மயிலோனே!
(மன)

*அநுபல்லவி*

தினமும் உன் திருப்புகழை தீந்தமிழிற் பாடி
தேசம் எங்குமே நான் ஒலிக்க வைப்பேன்!
(மன)

*சரணம்*

மலர் மாலைகள் சூடி மஞ்சத்தில் உனை ஏற்றி
மனமாரவே உனை நான் துதிப்பேன்!
புலரும் பொழுதினிலே, பூ மலர்கள் தூவி
புத்தமுதும் உனக்கு நான் படைப்பேன்!
(மன)

அனுதினமும் தொழுது, ஆனந்தமே அடைவேன்!
ஆறுமுகா வந்து அருள் தருவாய்!
மன இருளை நீக்கி மாளாத வினை போக்கி,
மனங்கனிந்தே வந்து எனைக் காப்பாய்! (மன)

~கி. குலசேகரன்~

*காயங்களின்றி காலம் எதையும் கற்றுக்கொடுப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்கள் வரிசையில் மாணிக்கவாசக சுவாமிகள்

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

வைகை நதியின் வளச்சிறப்பால் பல வளங்களையும் தன்னகத்தே கொண்ட திருவாரூரில் அருள்பாலிக்கும் சிவப்பரம்பொருளின் பெருங்கருணையால் அங்கு வாழும் யாவரும் சகல கல்வி கலைகளிலும் சிறப்படைந்தனர். திருவாரூரின் சிறப்பை உலகறியச் செய்ய சிவவேதியர் குலத்தில் சற்புத்திரராக அவதரித்தவர் திருவாரூரர் என யாவராலும் போற்றப்பட்ட தவசீலராவர். இவர் முற்பிறப்பிற் செய்த நற்பயனும் இறையருட் சித்தியும் கைகூடத் தந்தையின் வேதநெறி சிவாகமத்தின் சிறப்பால் சிவப்பொலிவுடன் வாழ்ந்தார். பெற்றோரின் அரவணைப்பும், நற்கல்வி, சிவாகமப் பயிற்சி, சிவபக்தி மேலிடத் தமது கல்விப்பணியைப் பதினாறு வயதில் பூர்த்தி செய்தார்.

பெற்றோரின் சிவப்பண்புடன் கற்ற கல்வியறிவால் யாவராலும் போற்றப்படும் சிறப்படைந்தார். திருவாரூரில் வேதியர் குலத்துதித்த திருவாரூரர் என்னும் வாலிபரின் சிறப்பை அறிந்த அரிமர்த்தன பாண்டிய மன்னன் தனது அரச சபைக்கு அழைப்பித்தான். திருவாரூரரின் தேகப்பொலிவையும் விவேகத்தையும் கண்டு மகிழ்ந்த மன்னன் தமது மந்திரியாக்கினான். அரசபணியேற்ற திருவாரூரர் தமது பணிக்கான படைக்கலப் பயிற்சியை விளக்கும் நூல்களையும் மனுநீதி சாத்திரங்களையும் நன்று கற்றுத் தேறினார். இவரின் கல்விச்சிறப்பை அறிந்த மன்னன் தமது முதலமைச்சராக்கினான். திருவாரூரர் தமது திறமையால் பிரதேசத்து மன்னர்களுடன் நட்புறவாடிப் பாண்டிய நாட்டின் வளர்ச்சியில் கூடிய கவனஞ் செலுத்தினார்.

திருவாரூரர் அரசபணி சார்பில் பல முன்னேற்றங்களைச் செய்தவேளையில் தமது இயல்பான இறையருள் நாட்டத்தால் இவ்வுலக வாழ்வில் மெய்ப்பொருளை விளக்கும் தத்துவங்களையும் இம்மை, மறுமை, வீடுபேறு யாவற்றையும் விரிவாக ஆராய்ந்தார். தம்மை நெறிப்படுத்தவல்ல சான்றோரிடம் தமது அறிவுப் பசியையும் போக்கினார். ஆனால் அரச பணியில் நிதானமாகவும், தூய பணியாகவும் தமது கடமையைச் சிறப்பித்தார்.

ஒருநாள் திருவாரூரர் அரசபணி சார்பாக அரசனுடன் ஆலோசனை செய்துகொண்டிருந்தார். அச்சமயம் அங்கு வந்த அரச குதிரைப்படைக் காப்பாளர் தமது படையிலுள்ள பல குதிரைகள் முதுமையடைந்தும் சில இறந்தும்போனதால் குதிரைகள் போதியதாக இல்லாததால் புதிய குதிரைகளை வாங்குமாறு கூறிச்சென்றான். அச்சமயம் மன்னன் அரச கருவூலத்திலிருந்து வேண்டிய நிதியை எடுத்துச்சென்று கடற்துறையில் வந்திறங்கும் குதிரைகளில் சிறப்பான குதிரைகளை வாங்கி வருமாறு திருவாரூரரிடம் அனுமதி வழங்கினான்.

அரசனின் பணியேற்ற திருவாரூரர் பெருந்தொகைப் பொற்காசுகளை எடுத்து மூடையாகக் கட்டி ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிக் காவலர்களையும் கூடச்செல்லுமாறு அனுப்பினார்.

*இந்த உலகம் உன்னைத் திரும்பிப் பார்க்கவேண்டுமெனில் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமும் உடன் செல்வதால் பொற்றாமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளை வணங்கினார். தமது பணி இறை பணிக்கும் ஏற்பத் தம்மை நெறிப்படுத்துமாறு கூறிப் பிரார்த்தித்தும் புறப்பட்டார். திருவாரூரர் குதிரை வாங்கும் பணியேற்றுச் சிவிகைமீதேறிக் கடற்துறைக்குச் செல்கிறார். அவரின் முற்றொடர்பு இறைவனை நாடிச் செல்கிறது.

இறைவன் தமது திருவிளையாடலாகக் கற்றுணர்ந்த முதிய வேதியர் வடிவிலான ஞான குருவாகத் திருப்பெருந்துறையில் ஆலய முன்பாக நின்ற குருந்தமர நிழலில் சற்குருவின் பணியேற்று மாணவர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். குதிரை வாங்கும் பணியேற்ற திருவாரூரர் திருப்பெருந்துறையை அணுகியதும் ஆலயச் சூழலில் புனித நீராடி ஆலயத்துட் சென்று வணங்கியதும் வீதிவலம் வந்தார். அச்சமயம் இறையருட் சித்தப்படி குருந்தமர நிழலில் மாணவர்களுக்கு உபதேசிக்கும் ஞானகுருவால் ஈர்க்கப்பெற்றார். ஞானகுருவைக் கண்டதும் தலைமேற்கூப்பிய கைகளுடன் உள்ளம் உருக குருபக்தி ஈர்க்கத் தம்மை ஆட்கொள்ள அமைந்திருப்பவர் இறைவனே என்ற பேராவலால் குருவின் (இறைவனின்) கால்களில் வீழ்ந்தார். குருவும் தமது மெய்ச்சீடன் என்பதை உணர்ந்து தமது பாதத்தைத் திருவாதவூரரின் தலைமேல் வைத்தார். குருவின் பாத தீட்சை பெற்றதும் தமது கண்ணீரால் குருவின் பாதத்தை நீராட்டிப் பாடல்கள் பாடி மகிழ்ந்தார்.

அச்சமயம் பழுதில்லாத சொற்களாகிய மாணிக்கங்களை நெறிப்படுத்தி அன்பாகிய நூலினால் கோர்த்துப் பாமாலைகளாகச் சாத்திய திருவாதவூரருக்கு ஞானகுருவாகிய சிவபெருமான் “மாணிக்கவாசகன்” எனத் திருநாமம் சூட்டியருளினார்.

மாணிக்கவாசகர் இறைவன் ஆட்கொண்டதும் தம்மை மறந்தார். தமது குதிரை வாங்கச்சென்ற அரச பணியை மறந்தார். சுற்றுச்சூழலை மறந்தார். எல்லாம் நீயே இறைவா என உணர்ந்தார். தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனிடமே காணிக்கை யாக்கினார். குதிரை வாங்கவெனக் கொண்டுசென்ற பெருநிதியையும் இறை பணிக்கும் சிவனடியார்களுக்குமென்றே ஒப்படைத்தார். இறைவன் புகழையே தித்திக்கும் தெள்ளமுதென செந்தமிழில் திருவாசகமாக உள்ளம் உருகிப் பாடினார்.

திருவாதவூரரைத் தடுத்தாட்கொள்ள வந்த இறைவன் தம்பணி முடிந்ததும் அவரின் திருவாசகப் பெருமையால் மாணிக்கவாசகன் எனத் திருநாமமிட்டவர். சைவம் நிலைபெறச் சிவனடியார்கள் கேட்டின்புறுமாறு திருப்பெருந்துறையிலிருந்து இறைவழிபாடு செய்துகொண்டு திருவாசகப் பாடல்களைப் பாடிக்கொண்டிருக்குமாறு கூறியதும் மறைந்தருளினார். தம்மை ஆட்கொண்டு சிவசிந்தனையூட்டி இன்புற்றிருந்தவேளை இறைவன் விட்டுப் பிரிந்ததையிட்டுப் பெருங்கவலையுற்றார். இக்கவலை அரிய திருவாசகப் பாமாலையாகவே அமைந்தது.

குதிரை வாங்கச் சென்ற மந்திரி தம்பணியை மறந்து சிவப்பணியில் நிதியைச் செலவிட்டதை அறிந்த பாண்டிய மன்னன் சினமுற்றான். தமது காவலர்களை மாணிக்கவாசகரிடம் குதிரைகளையிட்டுக் கேட்டறியுமாறு அனுப்பினான். அரச காவலர்களைக் கண்டதும் மாணிக்கவாசகர் கடற்துறைக்குக் குதிரைகள் ஆடிமாதம் வரும்போது வாங்கலாம் என்று சொல்லி அனுப்பினார். இக்கூற்றை நம்பிய மன்னன் ஆடி மாதம் வரை காத்திருந்தான்.

*எத்தனை கைகள் என்னைத் தள்ளிவிட்டாலும் என் நம்பிக்கை என்னைக் கைவிடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி மாதத்தில் குதிரைகள் வரவில்லையே என்று ஓலையனுப்பினான். மாணிக்கவாசகர் தாம் அரச பணிக்கான பெருநிதியை இறைபணியில் விரயமாக்கியதால் குதிரை வாங்குவதற்குத் தாம் செய்வதென்ன என இறைவனிடம் விண்ணப்பித்தார். அச்சமயம் ஆவணி மாதம் குதிரைகள் வரும் என அரசனுக்குத் தெரிவிக்குமாறு அசரீரி ஒலித்தது. அதன்படி மாணிக்கவாசகர் அரசனுக்குத் திருமுகம் அனுப்பினார். அன்றிரவு மாணிக்கவாசகரின் கனவில் ஞானகுருவின் வடிவில் தோன்றிய இறைவன் சிறந்த குதிரைகள் வரும் அதற்கு முன் அரசனிடஞ் சென்று தெரிவிக்குமாறு அருளினார்.

இறைவனின் ஆணைப்படி மாணிக்கவாசகர் மதுரையை அடைந்தார். பாண்டியனிடம் சென்று தாம் கருவூலத்திலிருந்து கணக்கில்லாத பொன்னை எடுத்துச் சென்றதாகவும் வந்து சேரும் குதிரைகளுக்கும் கணக்கில்லை எனவும் இதனால் துரகபதி என அழைக்கப்படுவார் எனப் பணிந்தவாறு நயவுரைகள் கூறினார். பின்னர் மாணிக்கவாசகர் நீராடியதும் ஆலயத்துட் சென்று பாண்டியன் மேலும் சினமுறாவண்ணம் குதிரைகள் எப்போ வரும் என விண்ணப்பித்தார்.

மாணிக்கவாசகரின் அயராத வேண்டுதலையடுத்து இறைவன் "மெய்யன்பரே அஞ்சற்க குதிரைகளைக் கொண்டு வருவோம்" என அசரீரி ஒலித்தது. பாண்டியன் திருவாதவூரரை அழைத்து இன்னும் குதிரைகள் வரவில்லையே எனக் கேட்டான். மூன்று நாட்களுக்குள் குதிரைகள் வந்துசேரும். குதிரைகள் கட்டும் லாயம் மற்றும் குடிக்கும் நீர் வசதிகளை நன்கு செப்பனிடுமாறும் கூறினார். மூன்று நாளாகியும் குதிரைகள் வராததால் பாண்டியன் சினத்துடன் திருவாதவூரரைத் தண்டித்துப் பொன்னை அறவிடுமாறு கூறினான். காவலர்கள் அவரை அழைத்துச்சென்று சிறையிலடைத்துத் தண்டனையால் துன்புறுத்தினர். திருவாதவூரர் இத்தண்டனைகள் யாவும் இறைவனையே சாரட்டும் என அமைதியாயிருந்தார். அதிகாலை சோமசுந்தரப் பெருமானின் பூசையொலியும் மணியோசையும் கேட்டபோது திருவாதவூரர் சிரமேற்கூப்பி வணங்கியவாறு மனவேதனையுடன் தமது நிலையை எண்ணித் துதித்தார்.

அச்சமயம் திருவாதவூரரை விடுவிக்கச் சித்தங்கொண்ட இறைவன் நந்திதேவர் மூலம் கணநாதர்களை அழைத்தார். ஆவணிமாத மூல நட்சத்திரத்தில் பாண்டியனிடம் குதிரைகள் சேரவேண்டியதால் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பிடித்து வருமாறு பணித்தார். சகல நரிகளையும் குதிரைகளாக்கினார். சிவ கணங்களைக் குதிரைச் சாரதிகளாக வரச் செய்தார். தாமும் வேதமாகிய குதிரைமீதேறிக் குதிரை அணித்தலைவனாக அமர்ந்து எல்லாக் குதிரை களின் நடுவே கம்பீரமாகப் பவனி வந்தார்.

குதிரைகள் பாண்டிய நாட்டை அடைந்ததும் மாணிக்கவாசகர் சிறையிலிருந்து விடுவிக் கப்பட்டு பெருமதிப்பளிக்கப்பட்டார். குதிரை பரிமாற்றப் பாரம்பரியப்படி குதிரைகள் யாவும் குதிரைப்படைத் தலைவனால் பாண்டியனிடம் ஒப்படைக்கப்பட்டன. தலைவன் உட்பட வீரர்கள் யாவரும் பாண்டியனால் பெருமதிப்பளிக்கப்பெற்றனர். இறைவன் தமது குதிரைகளுடனும் குதிரை வீரர்களான சிவபூதகணங்கள் யாவரும் மறைந்தருளினர். குதிரைகள் யாவும் குதிரைக் காப்பாளரினால் லாயத்தில் நன்கு கட்டப்பட்டன. மன்னன் மற்றும் யாவரும் தத்தமது விடுதியை நாடினர்.

***நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குதிரைகள் நரிகளானதும் மாணிக்கவாசகர் பெற்ற தண்டனையும்

யாவரும் அமைதியாக உறங்க நாடும் உறங்கியது. நள்ளிரவில் இறைவனின் திருவிளையாடல் ஆரம்பமானது. லாயத்தில் புதியவைகளாகக் கட்டப்பட்ட குதிரைகள் யாவும் நரிகளாகித் தமது கட்டை அறுத்துக்கொண்டு முன்னிருந்த ஏனைய குதிரைகளைக் கடித்துக் குதறிவிட்டு வெளியே நகர வீதியெங்கும் ஓடித்திரிந்து ஊளையிட்டு ஆரவாரஞ் செய்தன. விடிந்ததும் லாயக் காப்பாளர்கள் குதிரைகளைப் பார்க்கச் சென்றனர். அச்சமயம் புதிய குதிரைகளேதும் இல்லை. அவை கட்டறுத்துக்கொண்டு சென்ற அடையாளத்தையும் ஏனைய குதிரைகள் கொல்லப்பட்டதையும் கண்டதும் அரசனிடம் முறையிட்டனர். அரசன் மிகக் கோபங்கொண்டு திருவாதவூரரை அழைத்துச் சென்று கடுந்தண்டனை வழங்குமாறு பணித்தான்.

தண்டிப்பவர்கள் மாணிக்கவாசகரைக் கொடூரமாகத் தண்டித்ததுடன் உச்சி வெயில் வேளை சூரியனை அண்ணாந்து பார்க்கச் செய்து நெற்றியில் பெரிய கல்லை வைத்தனர். கைகளை அகல விரிக்கச் செய்து கைகளிலும் கல்லினால் பாரமேற்றினர். பாரந்தாங்க மாட்டாத மாணிக்கவாசகர் சுடுமணல் நிறைந்த அதே இடத்தில் வீழ்ந்தார். மணலின் சூடும் கற்களின் பாரமும் அவருக்குத் தாங்கமாட்டாத வேதனையை ஏற்படுத்த இறைவனைத் துதித்தார்.

## இறைவனின் கருணையும் வைகைநதி பெருக்கெடுப்பும்

சோமசுந்தரப் பெருமான் தமது பக்தனின் துயர் துடைக்கவும் பாண்டிய மன்னன் தெளிவடையும்வண்ணம் உணர்த்தவும் சித்தங் கொண்டார். வைகை நதியை ஊழிக்காலக் கடல்போலப் பெருக்கெடுத்துப் பாயுமாறு அருளினார். வைகை நதி நன்கு பெருக்கெடுத்து இரு கரைகளையும் உடைத்துக்கொண்டு மதுரை நகரமெங்கும் வெள்ளம் பெருகிப் பெருஞ் சேதமடையச் செய்தது. தண்டனையாளர்கள் மாணிக்கவாசகரை விடுத்துத் தமது வீடுகளின் வெள்ளச் சேதத்தை அறியச் சென்றனர். மாணிக்கவாசகர் தமது கவலை மேலிட ஆலயத்துட் சென்று சோமசுந்தரக்கடவுள்மீது உள்ளமுருகிப் பாடினார்.

ஆற்று வெள்ளத்தின் சீற்றத்தால் மதுரை மாநகரெங்கும் வெள்ளம் நிறைந்து யாவரையும் வாட்டியது. இதனையறிந்த பாண்டியன் மந்திரிமாரை நோக்கி ஆற்றின் இரு கரைகளிலும் உயர்ந்த வரம்புகளைக் கட்டுவிக்குமாறு பணித்தான். மந்திரிமார் மக்களை அழைத்து யாவருக்கும் பகுதி பகுதியாகப் பிரித்து வழங்கி வரம்புகளைக் கட்டுமாறு பணித்தனர். அரச கட்டளையை ஏற்ற யாவரும் தம் பணியில் இணைந்தனர். அவ்வூரில் ஏழையாகவும் ஆண் உதவியின்றியும் பிட்டு அவித்து விற்கும் வந்தி என்பவரின் பங்கு அடைபடாதிருந்தது.

## சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்ததும் பிரம்பால் அடிபட்டதும்

வந்தி என்பவள் தமது பங்கான வரம்பு கட்ட யாருமில்லையே என வருந்திச் சோமசுந்தரப் பெருமானை வேண்டினாள். சிறிது நேரத்தில் இறைவன் அழுக்கேறிய கந்தலுடை யுடன் தலையில் சும்மாடும் கூடையும் மண்வெட்டியும் ஏந்தியவண்ணம் யாரும் வேலை கொள்வாருளரோ எனக் கேட்டவண்ணம் வந்தார். வந்தி அவரை நோக்கித் தமது பங்கான வரம்பைக் கட்டுமாறு கூறினாள். அச்சமயம் கூலியாளர் தமக்குப் பசிப்பதாகவும் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தால் சாப்பிட்டதும் வரம்பு கட்டுவதாகவும் தெரிவித்தார். வந்தி தமது உதிர்ந்த பிட்டினை வழங்க யாவரும் நோக்கும்வண்ணம் இறைவனான கூலியாள் ஆவலாக உண்டார்.

பின்னர் தமது வேலையை ஏற்றுக் கூடையில் மண் வெட்டிப் போடுவதும் சிறிதளவு தூரம் வரம்பில் ஒழுங்கீனமாகப் போடுவதும் அசதியாகத் தூங்குவதுமாக அலட்சியமாகவே பணி செய்தார். இதை நேரிற் கண்ட மந்திரிமார் வரம்புகட்டி முடிக்காத வேலையாளை அரசன் முன் நிறுத்தினர். சினங்கொண்ட அரிமர்த்தன பாண்டியன் தன் கையிலிருந்த பிரம்பினால் கூலியாள் வடிவில் நின்ற சிவபெருமான் முதுகில் ஓங்கியடித்தான். அந்த அடி கூலியாள் முதுகில் பட்டதுபோல அரசன், மந்திரிமார் மட்டுமன்றி சகல உயிர்களதும் முதுகிலும் பட்டது. யாவரும் திகைத்தனர். கூலியாளும் மறைந்தருளினார்.

அச்சமயம் வானத்திலிருந்து அசரீரியாக "செங்கோல் வழுவாத பாண்டியனே உனது அரச செல்வமெல்லாம் தரும வழியில் தேடப்பட்டன. அவை புனிதத் தன்மையுடையதால் நமக்கும் நம் அடியார்களுக்கும் திருவாதவூரன் எடுத்து வந்து அன்புடன் வழங்கினான். அதன் மெய்ப்பொருளை உணராத நீ அவனைத் துன்புறுத்தினாய். அது கண்டு நாம் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கித் தந்தோம். அவை யாவும் இரவு நரிகளாகி ஓடின. இதனால் அவன் மேலும் தண்டனை பெற்றான். இதனைப் பொறுக்காது நாமே வைகைநதியைப் பெருக்கெடுக்கச் செய்தோம். வந்தியின் கூலியாளாக வந்து வந்தியிடம் பிட்டு வாங்கியுண்டோம். உன்னிடம் பிரம்படி பட்டோம். வந்தியை எம்முடன் அழைத்துச் சென்றோம். இவ்வாறு செய்தமை யாவும் திருவாதவூரரின் பொருட்டேயாகும். நீ தொடர்ந்து ஆயுட்காலம் வரை அரசாள்வாயாக" என ஒலித்தது.

இவ்வாறு அசரீரி கேட்டதும் இறைவனின் திருவிளையாடலை உணர்ந்து தெளிந்த மன்னன் திருவாதவூரர் தியான நிலையில் இருப்பதை அறிந்து அவ்விடஞ் சென்று அவர் முன் வீழ்ந்து வணங்கினான். தான் அறியாமற் செய்த பிழையை மன்னித்து முன்போல மந்திரிப் பதவியை ஏற்குமாறு பணிந்தான். திருவாதவூரர் இறைவனின் திருவுளப்படி தாம் தில்லைச் சிதம்பரம் செல்வதாகக் கூறிவிட்டுச் சிவாலய தரிசனைக்காகச் சென்றார்.

## மாணிக்கவாசகரின் சிவாலய தரிசனையும் திருவாசகப் பாடல்களும்

மாணிக்கவாசகர் மதுரையிலிருந்து சிவசிந்தனையுடன் புறப்பட்டதும் பாண்டி நாட்டிலுள்ள வேறு சிவத்தலங்களையும் வழிபட்டார். தொடர்ந்து திருவாரூர், திருவண்ணாமலை, திருக்கழுக் குன்றம் ஆகிய திருத்தலங்களில் பாடல்கள் பாடியும் வழிபட்டு மகிழ்ந்தார். பின்னர் தில்லைக்குச் சென்று பொன்னம்பலக் கூத்தனை நன்கு உள்ளம் உருகிப் பாடினார். பின்னர் தவநிலையிற் காணப்பட்டார்.

இலங்கையிலிருந்து வந்த புத்த துறவிகளிடம் வாதிட்டார். தமது மகிமையால் ஊமைப் பெண்ணை வாய்பேசச் செய்து புத்த துறவிகளுக்கு விளக்கமளித்துப் பதில் சொல்ல வைத்து வாதில் வென்றார். ஒரு சமயம் இறைவன் மாணிக்கவாசகரின் பெருமையை உணர்த்துவதன் பேரில் முதிய வேதியர் வடிவில் வந்து மாணிக்கவாசகர் பாடிய திருவாசகப் பாடல்கள் யாவற்றையும் கேட்டு ஏட்டில் எழுதிக்கொண்டார். முழுப்பாடல்களையும் எழுதி முடிந்ததும் திருவாசகம் பாடிய வாயால் கோவையைப் பாடுமாறு கேட்டார். வேதியரின்

*முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள். எஜமானாகும் தகுதி தானாக வரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுதலால் கோவை என்னும் திருக்கோவையாரில் 400 பாடல்களையும் பக்திமணம் குன்றாது பாடினார். திருவாசகப் பாடல்களுடன் திருக்கோவையார் முழுவதையும் எழுதி முடித்ததும் இறுதியில் "திருவாதவூரன் பாட அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியவை" எனக் குறிப்பிட்டிருந்தார். இவ்வேட்டுச் சுவடிகளைப் பொன்னம்பலத்தின் வாசலில் வைத்ததும் வேதியர் மறைந்தருளினார்.

இதை நோக்கிய மாணிக்கவாசகர் தம்மைப் பாடச்சொல்லி யாவற்றையும் ஏட்டில் எழுதியவர் இறைவனே என்றெண்ணி இறையருளைப் போற்றினார். பொன்னம்பலத்தின் வாசலிலிருந்த ஏட்டுச் சுவடிகளைக் கண்ட தில்லை மூவாயிரவர் அதனை வாசித்தறிந்ததும் அவ்விடத்தில் இருந்த மாணிக்கவாசகரை அழைத்து அப்பாடல்களின் பொருளை உணர்த்துமாறு வேண்டினர். மாணிக்கவாசகர் அவர்களை அழைத்துச் சென்று பொன்னம்பலத்தில் நடராசப் பெருமானைக் காட்டியதும் அங்கு தோன்றிய பேரொளியில் இரண்டறக் கலந்தார். யாவரும் வியக்கத் தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்.

சமய குரவர் நால்வரில் மாணிக்கவாசகரின் சிறப்பு வேறானது. முற்றவப் பயனால் உத்தம வேதியர் குலத்தில் அவதரித்து 16 வயதில் கற்கவேண்டிய யாவற்றையும் கற்று அரச சபையில் மந்திரியாகி அரச பணிக்கான நிதியில் சிவப்பணியாற்றி இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். பாடிய திருவாசக இனிமையால் "மாணிக்கவாசகர்" என்னும் பெயரை இறைவனால் பெற்றவர். அரச பணியை மறந்து பெருநிதியை சிவப்பணியில் விரயஞ் செய்ததால் அரசனால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். தமது உள்ளம் உருகக் கவலையில் இறைவனை வேண்டியே பாடியதால் பாடல்கள் சிறப்படைந்தன. 51 பதிகங்களில் 656 திருவாசகப் பாடல்களையும் 400 திருக்கோவையார் பாடல்களையும் வேதியர் வடிவில் வந்த இறைவன் கேட்கப் பாடினார்.

மனிதன் மனிதனுக்காகப் பாடியவை - திருக்குறள்
இறைவன் மனிதனுக்குப் போதித்து - கீதை
மனிதன் இறைவனுக்காகப் பாடியது - திருவாசகமும் திருக்கோவையாரும்.

இச் சிறப்புப் பெற்ற மாணிக்கவாசகரின் சிறப்பு மேலானது. மாணிக்கவாசகர் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டதும் தமது உடல், பொருள், ஆவியை இறைவனுக்கே அர்ப்பணித்தார். இதனால் பெருநிதி சார்பாக பாண்டியனால் பலமுறை தண்டிக்கப்பட்டவர். உள்ளக் கவலையால் இனிய பாடல்களைப் பாடினார். இப்பாடல்களில் சொற்சுவை, பொருட்சுவை, குரலிசை யாவும் நிறைந்ததால் இப்பாடல்களைக் கேட்டால் யாவரும் மெய்யுருகுவர். இதன் சிறப்பை "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என யாவரும் போற்றுவர். மாணிக்கவாசகரின் பாடல்களைப் பலர் புகழ்ந்தனர். பிற்காலத்தில் வாழ்ந்த வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடலை அறிவோம்.

வான் கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இருப்பதுவே.

***விழுதல் என்பது வேதனை. விழுந்த இடத்தில் மீண்டும் எழுதல் என்பது சாதனை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திருவாசகப் பாடல்கள் தேவார முதலிகளின் பாடல்களான முதல் ஏழு திருமுறைக்கடுத்ததாக எட்டாந் திருமுறையாகப் பன்னிரு திருமுறைகளை அலங்கரிப்பதும் சிறப்பாகும்.

---

## அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு

வாசிக்கும் ஒரு மனிதனால் மட்டுமே தனது வசிப்பிடத்தை அடையாளப்படுத்த முடிகிறது. காரணம் பலதும் பத்தையும் வாசிக்க வாசிக்க அதை அவதானித்த சமூகம் அவரை இறுகப் பற்றிக்கொள்கிறது. அதன் பிரகாரம் அறிவுக்கான தேடலை இரட்டிப்பாக சேமிக்க அவன் விழைகின்றான். தனது அயலவர், உறவினர், நண்பர்கள் ஆகியோருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் நாட்டுக்கேற்ற ஒரு அறிவார்ந்த பிரஜையாகச் சமூகத்தால் சிருஷ்டிக்கப்படுகின்றான்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள், முன்னாள் இந்தியாவின் ஜனாதிபதி அப்துல் ஹலாம் அவர்கள், சுதந்திர இந்தியாவின் பிதாமகர் மகாத்மா காந்தி அவர்கள், இந்திய அரசியலமைப்பின் தந்தை அம்பேத்கார் அவர்கள், பேரறிஞர் அமரர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், முதறிஞர் சபாரத்தினம் அவர்கள், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள், அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள், பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள், எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் அவர்கள், ஆன்மீக உரைஞர் லலீசன் அவர்கள் யாவருமே தினம் தினம் கணம் கணம் வாசிப்பினால் மேன்மைகொண்ட சிறந்த பிரமுகர்களாவார்கள். இது நமக்கு உணர்த்தவல்ல பாடமாகும்.

மேலும், பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தரும், பொறியியலாளரும் ஆகிய பெரு மகான் துரைராஜா அவர்களும், தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா அவர்களும் அதிசிறந்த வாசிப்பின் சிகரங்களாவார்கள். வாசிப்பின் இரகசியம் ஞானச்சுடரிலும் உண்டு. பெருமானும், பெருமகானுமாகிய கல்வித் தெய்வமாம் சேர் பொன். இராமநாதன் அவர்களின் உடைநடை பாவனை, வாசனையேயான வாசிப்பு, அதற்கான சுவாசிப்பு, அதனையே மூச்சாகக் கொண்ட நேசிப்பு, அதையே வாழ்வாகக் கொண்டதான யாசிப்பு இதனையே அறிவார்ந்த சமூகம் உருவாக நாம் செய்யவேண்டிய போஷிப்பாகும். தற்போதைய நடைமுறையிலே அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களே தினமும் வாசிக்கின்ற நாடாக இலங்கை பதிவாகின்றது. அதற்கு உட்பட்ட வயதினையுடையவர்களில் 90% வீதமானவர்கள் அறவே வாசிப்பதில்லை. காரணம் இவர்கள் தொலைபேசிகளினூடாகவே உருவாகும் ஜனரஞ்சக வைபவங்களிலும், பொழுதுபோக்கு வரப்பிரசாதங்களிலும், சமயோசித சந்தோஷங்களிலும், நண்பர்களோடு சேர்ந்து அரட்டை அடிப்பதிலும், வீட்டையும் நாட்டையும் சேமிக்காமலும் வாழ்கின்ற நாகரீக பாஷாங்க போலியான மாயை உலகில் மிதந்துகொண்டு இருக்கிறார்களேயொழிய வாசிப்பு நிகழ்ச்சிக்கு அக்கறையோ ஊக்கமோ காட்டவேயில்லை. அதிலும் பெற்றோர் தம்மைத் தாம் பட்டங்களிலும் பதவிகளிலும் மாளவும் மேவவும் தாவவும் எண்ணி, தத்தம் பிள்ளைகளின் கவனத்தைப் பிரம்போடும் தண்டனையோடும் கையாளும் நாடாக்கிவிட்டார்கள். இதனால் அறிவார்ந்த சமூகத்தை நாம் பிரசவிப்பதற்கு அவரவர் வீட்டில் மாற்றம் ஏற்படவேண்டும். பாடத்திட்டத்திற்கு அப்பால் சுயவாசிப்புக்கு இடமளிக்கப்படவேண்டும். பிரமுகர்கள் பிரமாதங்களிலே செலவாகிறார்கள்? எமது கடமை இன்னுமே பேறாகவில்லை!!!

**~கே.எஸ். சிவஞானராஜா~**

*திறமை உள்ளவரின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள் ஆடம்பரமல்ல - அது ஆன்மாவின் விடுதலைத் தளம்

**–திரு சாம் ரமேஸ்குமார்** அவர்கள்–

ஆலயம் என்பது மனிதனுடைய ஜீவாத்மா பரமாத்மாவோடு லயமாகும் வரை வாழ்நாள் முழுவதும் வழிபடும் இடமே தவிர, அது பொழுதுபோக்குக்காக கண்காட்சிப் பொருட்களை அடுக்கி வைக்கும் ஒரு கண்காட்சிக் கூடமல்ல என்பதை ஈழத்து சைவத் தமிழ் மக்கள் முதலில் உணர்ந்துகொள்ள முன்வர வேண்டும்.

தன் உடல் வாழ்நாள் முழுவதும் அதி அற்புதங்களை நிகழ்த்தும் ஒரு தெய்வீகம் வாய்ந்த விக்கிரகம் என்பதை அறிந்துகொள்ள முடியாத ஒரு அறிவிலியால் அல்லது முட்டாளால் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வீக விக்கிரகத்தை ஒரு தெய்வீகம் வாய்ந்த, புனிதம் வாய்ந்ததென ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது.

நம்மை எல்லாம் முட்டி மோதிக்கொள்ளும் "நான்" என்ற அகங்காரத்தை தொலைப்பதற்கு உரிய இடமாக ஆலயங்களை மனதால் பாவனை செய்யவேண்டுமே தவிர, அதை விடுத்து நம் ஆணவத்தையும் பண பலத்தையும் ஆடம்பரத்தையும் அலங்காரத்தையும் காட்டும் இடமாக ஆலயங்களை எதிர்காலத்தில் என்றும் நாம் உருவாக்கிக்கொள்ளக்கூடாது.

அதைவிட மற்றுமோர் விடயத்தையும் காலத்தின் தேவை கருதி நாம் அனைவரும் சிந்திக்க முற்பட வேண்டும். ஈழத்து சைவத்தமிழ் மக்களினுடைய ஆலயங்களில் நிகழும் உற்சவங்களிலும் அதன் திருவிழாக்களிலும் தம்மை உலகியல் ரீதியாக மெய்மறந்து பல கைத்தொலைபேசி நிறுவனங்கள் ஆலயங்களில் விளம்பரதாரர்களாக செயற்படுகின்றார்களா...? என எண்ணத் தோன்றுகின்றது.

ஏனென்றால் ஆலயங்களின் உட்பிரகாரங்களிலும் தெய்வீகம் வலம் வரும் வெளி வீதிகளிலும் "ஸ்மாட்" கைத்தொலைபேசியினுடைய பாவனையின் மோகம் ஆலயத்துக்கு வருகை தரும் மக்களிடையே என்றும் இல்லாதவாறு சமகாலத்தில் அதிகரித்த வண்ணமுள்ளது. அதுவும் பிரசித்திபெற்ற ஈழத்து சைவத் தமிழ் ஆலயங்களிலே இது பரவலாகக் காணப் படுகின்றது. இதை ஆலய நிர்வாகங்கள் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை என்பதே பெரும் வியப்பாகும்.

ஆலயங்களுக்கு வருகை தரும் உண்மையான பக்தர்களின் மனோநிலையை குழப்பும் முகமாக "செல்பி" எடுப்பது. ஆலயங்களின் உட்பிரகாரங்களில் தெய்வீக விக்கிரகங்களை படம் எடுப்பது. சாமி தரிசனத்தை முகப்புத்தகம் ஊடாக நேரலை செய்வது, சாமி தரிசனத் தின்போது பக்தியின் உச்சத்தில் இருக்கும் பட்சத்தில் பக்தர்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் விதத்தில் எல்லா முறைகளிலும் கைத்தொலைபேசிகளை கையாள்வது போன்ற செயல்களைக் கூறலாம். பூ, பழமென பூஜைப் பொருட்களோடு ஆலயத்துக்கு போகின்றோமோ இல்லையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயம் "ஸ்மாட்" கைத்தொலைபேசி இல்லாமல் ஈழத்து ஆலயங்களுக்கு எந்தவித வயது வரம்பும் இன்றி மக்களால் செல்லமுடியாத ஒரு சூழலே தற்போது வரை நிலவுகின்றது. இந்த மன அமைப்பை மாற்றும் திறன் ஆலய நிர்வாகங்களுக்கும் மற்றும் ஆன்மிக மையங் களுக்குமே உள்ளதென நாம் ஞாபகப்படுத்தவேண்டி இருக்கிறது.

தன் மனதால் இறை உருவத்தையும் அதன் சௌந்தர்யத்தையும் ஒரு புகைப்படக் கருவிபோல் பதிவுசெய்ய முடியாத ஒரு பக்தனுக்கு நிச்சயம் "ஸ்மாட்" கைத்தொலைபேசியின் துணை தேவைதான் என்றால் அந்தப் பக்தனுக்கு ஆலய வழிபாடு எதற்கு...? பக்தன், அடியார் என்ற நாமங்கள் எதற்கு என்பதே சிவ நாமத்தில் பழுத்து முதிர்ந்த சிவனடியார்களின் தற் போதைய கேள்விக்கனைகளாக உள்ளன.

இறைவன் மனிதர்களின் அகத்தேயிருக்கும் உள்ளத்தைத்தான் பார்க்கின்றானே தவிர, அவர்களின் வெளிப்புற ஆடம்பரங்களையும், அலங்காரங்களையும் அல்ல என்பதை ஈழத்து சைவத் தமிழ் மக்கள் தங்கள் ஆணவத்தைத் துறந்து உண்மைகளைப் புரிந்துகொள்ள முழு மனதோடு தயாராக வேண்டும். அதுவே எதிர்கால பக்தியை சுவைப்பதற்கான தடைகளற்ற வழிகளாகும்.

ஆலயங்களை மனித ஆன்மாவினுடைய விடுதலைத் தளமாக மக்களால் பார்க்கும் விழிப்புணர்வு வரும்வரை இத்தகைய ஆடம்பரமான செயல்கள் ஆலயங்களில் தொடரத்தான் செய்யும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ***-நன்றி: வலம்புரி-***

---

சேவை! சேவை! சேவை! இதுதான் மானுடத்தின் தாரக மந்திரமாக இருக்கவேண்டும். சேவை செய்வதற்கு நீ பணக்காரனாகத்தான் இருக்கவேண்டுமென்பதில்லை. உடலினால்கூட சேவை செய்யலாம். முடிந்தால் பத்துப்பேருக்கு உதவிசெய். இல்லையென்றால் தெருவிலே போகும்போது உடைந்த கண்ணாடித் துண்டுகள் கிடந்தால் அவற்றை எடுத்துக் குப்பைத் தொட்டியிலே போட்டுவிட்டுச் செல். சாலையில் காரில் அடிபட்டு ஏதாவது ஒரு பிராணி இறந்து கிடந்தால் அதை எடுத்து அடக்கம் செய். அநாதைப் பிணத்துக்கு தோள் கொடுத்து சுடுகாட்டுக்குத் தூக்கிப்போ. ஆபத்தில் சிக்கிக்கொண்ட யோக்கியனுக்குக் கைகொடு. சேவை செய்யும்போது பலனை எதிர்பார்க்காதே. உயர்ந்த பெயர் அல்லது பதவி கிடைக்கும் என்ற நோக்கோடு மட்டும் சேவை செய்யாதே! ஒவ்வொருவருக்கும் அவரது உள்ளங்கையில் எவ்வளவு சாதம் அடங்குமோ அதன் பெயர்தான் "கவளம்". பெரிய கையென்றால் பெரிய கவளம் என்றோ, சிறிய கையென்றால் சிறிய கவளம் என்றோ யாரும் கூறுவதில்லை. "எறும்பும் தன் கையால் எண் சாண்" என்பதுபோல அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு முடிந்தளவில் செய்வதும்கூடப் பெரிய சேவைதான்.

மற்றவர்களுக்கு உதவி செய்ய நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை எரிச்சலூட்டும் ஒரு செயலாக நாம் கருதக்கூடாது. இதுபோன்ற நல்ல வாய்ப்புக்களைக் கடவுளே நமக்கு ஏற்படுத்தித் தருவதாக நினைக்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவமுடிந்த செயல்களின் முடிவில் முழுமையான ஒரு திருப்தி ஏற்படுவதை நம்மால் உணரமுடியும்.

***மனம்விட்டுப் பேசுவதைவிட சிறந்த அறிவு வேறு இல்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 62

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பணம் படைத்தோம் என்று மட்டும் பேர்சுமந்து பலனில்லை
பிறர்வாழ்வும் நகரஅது வழித்துணையாய் இருக்கவேண்டும்
பிறர்வாழ்வுக் குதவாத பணம்பிணத்து அணிகளாக
பிறர்க்குதவும் மனமதுவே தனம்பொருளாய் மாறிவிடும்.

02 பேரறிஞர் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
ஊரவரும் அறிவுபெற அது வழித்துணையாய் இருக்கவேண்டும்
ஊருலகிற் குதவாத பேரறிவுப் பெருந்தகைகள்
வீதிவரும் தேரெனினும் சாமியில்லாத் தேரேயாம்.

03 பக்தியாளன் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
மற்றையோரும் பக்தியுற அதுவழித்துணையாய் இருக்கவேண்டும்
மற்றையோர்கள் விரக்தியுற வழியமைத்துக் கொடுத்திட்டு
பக்தியென்றால் தொடர்ந்திறைவன் பத்தியினைத் தருவானோ.

04 அழகியலார் என்றுமட்டும் பேர் சுமந்து பலனில்லை
அகத்தழகு பெருகஅது வழித்துணையாய் இருக்கவேண்டும்
அகத்தழகிற் குதவாத முகத்தழகு மோகனங்கள்
பூசைக்கு உதவாத புஸ்பங்கள் போன்றதுவாம்.

05 வீரவான்கள் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
ஈரவிழி காயஅது வழித்துணையாய் இருக்கவேண்டும்
ஈரவிழி காய்வதற் குதவாத வீரங்கள்
வீரமென்று பேர்பெறினும் அசுரமென்றே முடிவுறுமாம்.

06 தனம்படைத்தோம் என்று மட்டும் பேர்சுமந்து பலனில்லை
இனம்சனம் உயரஅது வழித்துணையாய் இருக்கவேண்டும்
இனஞ்சனத்திற் குதவாத தனம்பொருட் தகுதியெலாம்
கனமழையாய் இருந்தாலும் கடல்மழையைப் போன்றதுவாம்.

*முடியும் என்று நம்புவோருக்கு எதுவும் முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 குணமுடையார் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
கூடவுள்ளோர் மகிழ்ந்திருக்க அது வழித்துணையாய் இருக்கவேண்டும்
கூடவுள்ளோர் மகிழ்விற்கு உதவிடாத குணத்துடமை
குடம் நிறைந்த பாலெனிலும் திரைந்து போன பாலேயாம்.

08 குலத்துயர்ந்தோம் என்றுமட்டும் பேர்சுமந்து பலனில்லை
நிலத்துயர்ந்தோர் ஆவதற்கு அதுவழித்துணையாய் இருக்கவேண்டும்
நிலத்துயர்ந்தோர் ஆவதற்கு வழிவகுக்கா குலத்துயர்வு
பேருக்குப் பெரிதெனினும் பாருக்குப் பாரமதாம்.

09 மானிடர் நாம் என்று மட்டும் பேர் சுமந்து பலனில்லை
வானவரும் வாழ்த்தவாழ அது வழித்துணையாய் இருக்கவேண்டும்
வானிடையோர் வாழ்த்தவாழ வழிவகுக்கா மானிடங்கள்
மேனியிலே மானிடம்தான் மேன்மைகளில் விலங்கேயாம்.

10 பதவியாளர் என்று மட்டும் பேர் சுமந்து பலனில்லை
பிறர்க்குதவி செய்யஅது வழித்துணையாய் இருக்கவேண்டும்
பிறர்க்குதவி செய்திடாத பெரும்பதவிப் பொக்கிசங்கள்
கலங்கரைதான் இருந்தாலும் விளக்கில்லாக் கலங்கரையாம்.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பது நீங்கள் சிறு வயதிலே கற்ற பழமொழி. அதனுள் எத்தனை உண்மை அடங்கியிருக்கின்றது பாருங்கள். பொன்னோ, மணியோ, உணவோ, உடையோ இவ்வளவும் எமக்குப் போதும் என்று நாம் திருப்தி கொண்டுவிட்டால் நாம் உண்மையில் சிறந்த பாக்கியசாலிகள் ஆகிவிடுவோம் சிறந்த புண்ணியம் செய்தவர்களும் ஆகிவிடுவோம்.

போதும் என்ற மனம் எமக்குக் கிடைக்காதபோதுதான் எமக்கு ஆசை உண்டாகின்றது. எமது தகுதிக்கு மேற்பட்ட ஆசை எமக்கு ஏற்படும்போது அது எம்மைப் பாவம் செய்யவும் தூண்டுகிறது. எமது தகுதிக்கு அப்பாற்பட்ட ஆசை எம்மை பாவம் செய்ய வைக்கின்றது. இதனால்தான் சொன்னேன், போதும் என்ற மனம் எமக்கு இருக்குமேயானால், கிடைத்ததை மாத்திரம் பெற்று மனம் திருப்தி கொள்வோமானால், நாம் நிட்சயமாகப் பாக்கியசாலிகள்தாம்.

இங்கே தான் எமது மனதிற்கு நிம்மதி கிடைக்கின்றது. நிம்மதி, அதனைவிட வேறு செல்வம் எங்கே இருக்கிறது!

எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே.

வகுத்தான் வகுக்க வகை அல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

அதே நேரம் எமக்கு நல்லவை கிடைக்க இருப்பின் அதை எவரும் தடுக்க முடியாது. எமக்கு வரவேண்டியதை இறைவன் ஏதோ ஒரு வழியில் எம்மிடம் சேர்ப்பிப்பார். இதுதான் நியதி. இதுவே எமது செயலின் விளைவுகளின் மறுபக்கம்.

இந்த உண்மையை ஒரு கதைமூலம் நாம் கண்டுகொள்வோமா?

கொத்தனார் ஒருவர் அயலூருக்கு வேலைக்குப் போகும்போது, இலுப்பைத் தோப்பு ஒன்றைத் தாண்டிப்போக வேண்டியிருந்தது. தோப்பின் நடுவில் ஒரு ஐயனார் கோயில், அங்கே ஐயனார் பயங்கர வடிவில் வீற்றிருப்பார். அடர்ந்த தோப்பு, இருட்டு ஒருபுறம், பயந்து பயந்து கொத்தனார் செல்கையில் "கொத்தனாரே இங்கே வாரும்" என்றொரு குரல் கேட்டது. அது ஐயனாரிடமிருந்தே வந்தது பயத்துடன் ஐயனார் முன் போய் நின்றார். நான் ஒரு தப்பும் செய்யவில்லையே பயந்துகொண்டே சொன்னார் கொத்தனார்.

"பயப்படாதே நீ நிற்கும் இடத்தைத் தோண்டிப் பார் அடியில் ஒரு பானை இருக்கும். அதற்குள் நிறையத் தங்கம் இருக்கும் அதை எடுத்துச் செல்" என்றார் ஐயனார் சுவாமி.

பயத்துடனும் ஆச்சரியத்துடனும் நிலத்தைத் தோண்டி பானையை எடுத்துத் திறந்து பார்த்தார் கொத்தனார். உள்ளே நிறையத் தங்கத் துண்டுகள் பருப்பளவு மணி மணியாக மின்னின.

*எதிர்ப்பு இல்லையென்றால் வாழ்வில் ஏற்றமே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு எனக்கா? என்றார் கொத்தனார் ஆச்சரியம் மேலிட. "எடுத்துச் செல், ஆனால் பானையைக் காலிசெய்துவிடாதே! 5,6 தங்கத் துண்டுகளை பானையில் போட்டு புதைத்துவிட்டுப் போ" என்றார் சுவாமி.

கொத்தனாரும் அப்படியே செய்துவிட்டு மிகுதியை ஒரு துண்டில் கொட்டி மூட்டையாகக் கட்டிக்கொண்டு அயலூர் போய்ச் சேர்ந்தார்.

எனது கஷ்டம் எல்லாம் இன்றோடு தீர்ந்துவிட்டது என்றவண்ணம் தான் வேலை செய்யவேண்டிய வீட்டுள் புகுந்தார் கொத்தனார். தனது மூட்டையை அவ்வீட்டு உத்தரத்தில் தொங்கவிட்டுவிட்டு தனது வேலையை ஆரம்பித்தார்.

அவ்வீட்டு அம்மாள் சமையலில் ஈடுபட்டிருந்தவர் பருப்பு டப்பாவுக்குள் கையை விட்டால், பருப்பு இல்லை. இனிக் கடைக்குத்தான் போகவேண்டும் என்று வெளியே வந்தவர் உத்தரத்தில் தொங்கும் மூட்டையைக் கண்டுவிட்டார். கொத்தனாரே இது என்ன மூட்டை என அவர் வினாவ அது துவரம் பருப்பு, வீட்டுக்கு வாங்கி வைத்திருக்கின்றேன் என்றார் கொத்தனார்.

வீட்டுக்கார அம்மாள் யோசித்தாள். இப்போ கடைக்குப் போவதைவிட இதில் கொஞ்சம் பருப்பை எடுத்துக்கொண்டு சாயங்காலம் பருப்பு வாங்கி அதனுள் போட்டு வைத்துவிடலாம். கொத்தனார் வேலை முடிய இருட்டிவிடும் என முடிவெடுத்தாள்.

கொத்தனாரோ கூரைமேல் ஓடு மாற்றிக்கொண்டிருந்தார். அம்மாள் மூட்டையை எடுத்துப் பிரித்தாள் என்ன ஆச்சரியம்! அத்தனையும் தங்கத் துண்டுகள். தங்கம்போல் அவளுக்கும் ஒரு யோசனை பளிச்சிட்டது.

அத்தனை பொன்னையும் தான் எடுத்துக்கொண்டு அவசர அவசரமாகப் பருப்பு வாங்கிவந்து அதே போல் மூட்டையாகக் கட்டித் தொங்கவிட்டு ஒன்றும் தெரியாததுபோல் இருந்துவிட்டாள் அந்த அம்மா.

கொத்தனார் வேலை முடிந்து கீழே இறங்கி வந்தார். அவசரமாக மூட்டையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். மூட்டை லேசாகப் பாரம் குறைந்தது போலிருந்தது. அவிழ்த்துப் பார்த்தார் பகீரென்றது கொத்தனாருக்கு தங்கத்தைக் காணவில்லை. அத்தனையும் பருப்பு.

பதை பதைத்து வீட்டுக்கார அம்மாளை வினாவினார். அம்மாள் மறுத்துவிட்டாள். மூட்டையில் தங்கம் இருந்ததா பகலிலும் கனவு வருமா உமக்கு? என்றார் நிதானமாக. அவ்வளவு தங்கம் உம்மிடம் இருந்தால் நீர் ஏன் ரூபாய்க்கு கூலிக்கு வேலைசெய்ய வருகின்றீர் என்று ஒரு போடு போட்டாளே பார்க்கலாம்.

நிலை குலைந்த கொத்தனார் ஐயனார் சுவாமியிடம் ஓடினார். "ஐயனாரே இப்படி என்னை மோசம் செய்யலாமா? கைக்கு எட்டிய அத்தனை தங்கமும் என்னைவிட்டுப் போய் விட்டதே" என்று புலம்பினார்.

ஐயனாரப்பன் கூறினார். "கொத்தனாரே! யார் யாருக்கு என்ன என்ன கிடைக்க வேண்டுமோ அவ்வண்ணம் கிடைக்கும். அந்த அம்மாளுக்கு இன்று தங்கம் கிடைக்க வேண்டும் என்பது விதி. அதை உன் தலையில் மூட்டைகட்டி கொடுத்து அனுப்பினேன். அவ்வளவுதான்

*ஆயிரம் பேரிடம் யோசனை கேள். ஆனால் முடிவை நீ மட்டும் எடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ விட்டுச்சென்ற பானையில் பார் உனக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அவ்வளவு அதில் இருக்கும்” என்றார் ஐயனார்.

கொத்தனார் பானையை மறுபடியும் தோண்டி எடுத்துப் பார்த்தார். அதில் அவர் போட்ட 4,5 தங்கத் துண்டுகள் மாத்திரமே இருந்தன.

தரித்திரப்புத்தி! அப்போதே கொஞ்சம் நிறையப் போட்டிருக்கக்கூடாதா? கொத்தனாருக்கும் பிராப்தம் அவ்வளவுதான்! அந்த 4 துண்டுகளையும் எடுத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார் கொத்தனார்.

யாருக்கு என்ன கிடைக்கவேண்டுமோ அதுதான் கிடைக்கும். யாவும் இறைவன் செயல் எல்லாம் அவன் நடாத்தும் நாடகம்.

எனவே, எமக்கு அது கிடைக்கவில்லை இது கிடைக்கவில்லை என்று மன நிம்மதியை இழக்காது கிடைத்ததையிட்டு திருப்தி அடைவோம். முயல்வோமா?

---

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்று ஔவையாரும் “அம்மையே அப்பா ஒப்பிலா மணியே” என்று மாணிக்கவாசகரும் “அம்மையே அப்பா இனி ஆற்றேன்” என்று வள்ளலாரும் “அம்மையே அப்பா என்று அழைத்து” சேக்கிழாரும் பாடல்களைப் பாடியுள்ளனர் என்று வாரியார் சுவாமிகள் கூறுவார். உலகையே வெறுத்துத் துறவு மேற்கொண்டவர்களாக இருந்தாலும் தாயை வணங்கவேண்டும் என்கிறது தர்மசாஸ்திரம். ஒரு துறவி தெருவில் போகும்போது, அவர் துறவியாக இருந்தாலும், தன்னுடைய மகன் தானே என்று நினைத்து அவருடைய தந்தை அவரை வணங்காமல் போனால்..., அந்தத் தந்தைக்கு நரகம் கிடைக்கும் என்றும், ஆனால் ஒரு துறவியானவர் தான் எல்லாவற்றையும் துறந்துவிட்ட ஒரு துறவிதானே என்று நினைத்து தெருவில் போகும் தனது தாயை வணங்காமல் போனால் அந்தத் துறவிக்கு நரகம் கிடைக்குமென்றும் தர்மசாஸ்திரம் தாயின் பெருமையைப் போற்றுகிறது.

“மாத்ரு தேவோ பவ. பித்ரு தேவோ பவ” (தாயைத் தெய்வமாகக் கொண்டிரு, தந்தையைத் தெய்வமாகக் கொண்டிரு) என்று தைத்திரீய உபநிஷத்திலுள்ள ஒரு மந்திரத்திலும் தாயையே முதன்மையாகக் கூறப்பட்டுள்ளது.

தாயைப்பற்றி கிருஷ்ணாழ்வார் அவர்கள் இயற்றிய பாடல் ஒன்றை அடியேன் அடிக்கடி மனதிலாவது பாடிக்கொள்வேன். இப்புவியில் தங்கள் கண்கண்ட தெய்வமாகிய தாயை இழந்த அனைத்து உறவுகளின் சார்பாக அவர்களின் அன்னையருக்கும் சமர்ப்பணம் ஆக்குகின்றேன்.

கருமுதிர்ந்து பிரசவிக்கும் பத்தாம் மாதம்
கால் அசைந்து மேல் மூச்சு வாங்க வாங்க
பெருவயிற்றுச் சுமையோடு தாவித்தாவிப்
பீடுடைய நம்வாசற் படியை அம்மா
ஒருதரம் நீ கடந்தகடன் தீர்க்க இவ்வுலகமுள
வரைக்கும் அது முடியாதென்றால்
திருமகளே என்தாயே அம்மா அம்மா
தீர்ப்பதென்றோ பெற்ற கடன் செப்புவாயே!

***தேடல்கள் இல்லாத வாழ்க்கையும் இல்லை. தேவைகள் இல்லாத நாட்களும் இல்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

(தொடர்ச்சி...

– திரு ஆ.தா.இ. **ஜெயபாலன்** அவர்கள் –

திருமந்திரம் திருமூலருடைய அனுபவ ஞானம் நிரம்பிய யோக நூல். முனிவர் தனது யோகப் பயிற்சியினால் அடைந்த பயன்களை இனிய எளிய தமிழிலே ஆனந்தத்தோடு பாடுகிறார். இந்தப் பயன்களை யோக சித்திகள் என்று சொல்வது வழக்கமாகும்.

அழிந்து போகக்கூடிய இந்த உடம்பை உயிர் இருக்கும்வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் இயங்கும்படி பாதுகாக்கின்ற பயிற்சிக்கு காயசித்தி உபாயம் என்று கூறப்படுகிறது. உடம்பை இவ்விதம் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை முனிவர் வற்புறுத்திக் கூறுகிறார்.

இந்த உடம்பைக்கொண்டுதான் ஆன்மாவின் நற்கதிக்குரிய உபாயங்களை செய்ய வேண்டும். ஆன்மா கடைத்தேறுவதற்கான உபாயங்களை செய்யவேண்டும். செய்யாமல் இந்த உயிர் நீங்கிவிட்டால் அது பெரிய நஷ்டமாகும் அல்லவா?

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்

(உடம்பார் அழியில்- உடம்பு அழிந்துபோனால் உயிரார் அழிவர்- உயிர் நற்கதியின் அழிவு அடைந்து விடுகிறது)

உடம்பை உயர்வுபடுத்தி, உடம்பார் என்கிறார். கூடவே உயிருக்கும் அதே மரியாதையை விகுதியைச் சேர்த்துப் பாடுகிறார். இந்த உடம்பு அழிந்துவிட்டால் உயிரும் அழிந்துவிடுகிறது. அதாவது உடம்பால் ஆகவேண்டிய காரியத்தை நாம் பெறாமல் மரணம் அடைந்துவிட்டால் ஆன்மாவானது தான் அடையவேண்டிய பயனை அடையாமல் நஷ்டமடைகிறது.

"உடம்பு அழிவதோடு உயிரும் மடிந்துவிடுகிறது. ஒன்று எச்சமின்றி இரண்டும் முடிவெய்தி விடுகின்றன" என்று நாஸ்திகம் பொருள் கொள்ளலாகாது. உயிர் அழிவடைகிறது என்றால் அடையவேண்டிய பயனை அடையாமல் நஷ்டமடைகிறது என்று பொருளாகும்.

இவ்வாறு உயிருக்கு மிகவும் பயன்படக்கூடிய கருவி ஆனபடியால் உடம்புக்கு உயர்வு கொடுத்து உடம்பார் என்று பாடுகிறார்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்<br>
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்

(திடம்பட- உறுதியான பயன் ஏற்படும் வண்ணம், மெய்ஞ்ஞானம்- அனுபவபூர்வமான ஞான சக்தியை சேரவும் மாட்டார்)

உடம்பில் இருக்கும்போது அந்த உடம்பைக் கொண்டு செய்யவேண்டியதைச் செய்து மெய்யறிவு பெறாத உயிருக்கு, உடம்பு அழிந்தபிறகு மறுபடி அந்த வாய்ப்பு கிடைக்காதே என்று வருந்துகிறார் திருமூலர். எனவே உயிரைப் பாதுகாக்கும் வழியைத் தெரிந்து உடம்பைப் பாதுகாத்தேன் என்று மூலர் தனது அனுபவத்தை கூறுகிறார்.

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே<br>
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

(வளர்த்தல்- பாதுகாத்துப் பேணுதல்)

*எதையும் எதிர்கொள்வேன் என்ற மனநிலை மட்டுமே நம்பிக்கையைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பின் பண்பும் வலிமையும் கெட்டுப் போனால் இதைக் கருவியாகக் கொண்டு கடைத்தேறவேண்டிய ஆன்மா அந்த வாய்ப்பை இழந்துவிடுகிறது. எனவே இந்த உடம்பை உதாசீனம் செய்வது தவறு. இதைப் பாதுகாப்பது உயிரைப் பாதுகாப்பதாகும். உயிரை அழியாமல் காப்பாற்றுவதற்காகவே இந்த உடம்பை காப்பாற்ற வேண்டும்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர் த்தேனே!

மேலும் பாடுகிறார் தவயோகி தனது சொந்த அனுபவத்தை.

ஒரு காலத்தில் இந்த உடம்பை துச்சமென கருதி உதாசீனம் செய்தேன். ஆனால் இந்த உடம்புக்கு உறுதுணையான பரம்பொருள் கண்டுவிட்ட பின் இந்த உதாசீனத்தை கைவிட்டு இவ்வுடம்பை நன்றாக பாதுகாக்க ஆரம்பித்தேன் என்கிறார் மூலர்.

உடம்பினை முன்னும் இழுக்குஎன்று இருந்தேன்

(முன்னம்- முன்காலத்தில் இழுக்கென்று- குற்றமுடையது, நிலையற்றது)

உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்

(உறுபொருள்- பொருந்தி நிற்பதும் உயிருக்கு பற்றுக்கோடுமான பரம்பொருள்)

உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே!

(உத்தமன்- இறைவன், ஓம்புதல்- பாதுகாத்தல்)

இந்த உடம்பை அலட்சியம் செய்யக்கூடாது என்பதை உணர்ந்தேன். ஏனென்றால் இந்த உத்தமனாகிய இறைவன் வந்து வீற்றிருக்கும் கோயில். எனவே கோயிலை எத்தனை பரிசுத்தமாகவும் கண்காணிப்போடும் வைத்துக்கொள்ள வேண்டுமோ அப்படி இந்த உடம்பை பாதுகாத்து கொள்கிறேன் என்கிறார்.

"யான் இருந்து ஓம்புகிறேனே"

என்பதில் இருந்து என்ற சொல்லைக் கவனிக்க வேண்டும். உடம்பில் உண்டாகும் பல இன்னல்களைப் பொறுத்துக்கொண்டு இந்த உடற்கோயிலைப் பாதுகாத்து வருகிறேன் என்று தொனிப்பொருள் "இருந்து" என்ற சொல்லில் பொதிந்துள்ளது.

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.

சித்தர்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்கள் சைவர்களா, வைஷ்ணவரா, த்வைதிகளா, அத்வைதிகளா, விசிஷ்டாத்வைதிகளா, சைவ சித்தாந்திகளா? என்றெல்லாம் சிலர் கேட்பார்கள். இந்த சந்தேகங்களுக்கெல்லாம் தாயுமானவர் ஒரு தெளிவான விளக்கம் தருகிறார்.

திருமூலருடைய மரபிலே வந்த மௌனகுரு என்ற சித்தரின் சீடரே தாயுமானவர்- தமது குருவைப்பற்றி கூறுகிறார்.

*துயரங்களை நினைத்து துன்பப்படுவதைவிட உயரங்களை நினைத்து உத்வேகப்படுத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூலன் மரபில் வரு மௌன குருவே"

என்று பாடுகிறார். அந்த தாயுமானவர் செய்து உற்ற இனிமையான துதிப் பாடல்களிலே ஒரு பகுதி "சித்தர்கணம்" என்பது இந்தப் பாடல்கள் மூலம் தாயுமானவர் சித்தர்களை நமஸ்கரிக்கிறார்.

வேதாந்த சித்தாந்த
சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே!

என்று சமய வேதங்களை அகற்றிய முற்றறிவுடன் துதிக்கின்றார். இந்தச் சமரசமே மெஞ்ஞானம் என்பதை காட்டுகின்ற தொடர்மொழியே "சமரச நன்னிலை"

வேதாந்தம் சித்தாந்தம் என்று பெயர்கள் சூட்டிப் பிரிந்து நின்ற சமயவாதிகளுக்கு ஒற்றுமையைக் காட்டி ஜீவன் முத்திபெற்ற முனிவர்களே சித்தர்கள் என்கிறார் தாயுமானவர். நம் திருமூலரும் இந்த சித்தர்களுக்கெல்லாம் தலைசிறந்த சித்தராக போற்றி வணங்கப்படுகிறார். இவருடைய திருமந்திரப் பாடல்களில் இந்த வேதாந்த சித்தாந்த சமரச நன்நிலையைக் காண்கிறோம்.

புராணக்கதைகளை எடுத்துக்கொண்டு அவற்றின் உட்கருத்தை சொல்லுகின்ற பல இடங்களில் திருமந்திரத்திலே உள்ளன. சமயங்களின் எல்லைக் கோடுகளை நின்று பேசுகின்ற புராண ஞானிகளின் பேச்சாகவே இருக்கும். இந்த விளக்கங்களெல்லாம்! அப்படிப்பட்ட ஒரு விளக்கம் தான் திரிபுரம் எரித்த வரலாறாகும்.

மூன்று அசுரர்கள் தங்களுடைய வரத்தின் பலத்தால் மூன்று நகரங்களை நிர்மானித்து அங்கிருந்துகொண்டு தேவர்களை துன்புறுத்தினார்கள். சிவபெருமான் இந்த மூன்று நகரங்களையும் அழித்து, மூன்று அசுரர்களையும் வதம் செய்து, தேவர்களைக் காப்பாற்றி அருளினார் என்கிற புராணம். திருமூலர் பாடுகிறார்

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரம் செற்றன னென்பர்கள் மூடர்கள்

(அப்பணி- அப்பு அணி, அப்பு அணிந்த அதாவது கங்கையைச் சூடிய, செஞ்சடை- சிவந்த சடையை உடைய ஆதி புராதனன்- எல்லாவற்றிற்கும் பழமையான முதற் காரணமாகிய இறைவன் முப்புரம் செற்றனன்- திரிபுரங்களை அழித்தனன்)

முப்புர மாவது மும்மல காரியம்

முப்புரம் என்பது உயிரை பிணைத்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள்

அப்புர மெய்தமை யாரறி வாரே.

(அப்புரம்- அத்தகைய புரத்தை எய்த்தமை- அழித்தமை)

இந்த மும்மல செயலை இறைவன் அம்பு எய்து அழிப்பதை யாரும் உணர்வதில்லை! யார் அறிவாரோ- யாரே அறிவார்கள் அதாவது இதுபற்றி யாரும் உணர்வதில்லை.

ஏதோ மூன்று நகரங்களில் மூன்று அசுரர்கள் இருந்தார்கள் என்றும் கேடு விளைவித்தார்கள் என்றும் அவர்களை மேருவை வில்லாக வளைத்து அழித்தார் என்றும் கதை சொல்கிறார்கள். ஆனால் முப்புரம் என்பது நமது உயிரை பிணித்து கேடுவிளைவிக்கின்ற

***உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று அழுக்குகளாகும். இந்த மூன்று அழுக்குகளையும் பக்தி செலுத்துகின்ற அன்பர்களுக்காக இறங்கி வந்து அழித்து ஆட்கொள்கிறான் இறைவன். இந்த மக்கள் அறியவில்லை என்று குற்றஞ்சாட்டுவதுபோல் உபதேசிக்கிறார்.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே.

இறைவனுடைய திருவருளை நாடினால் அத் திருவருளினால் மூன்று மலங்களும் நீங்கி பேரின்பத்தை அடையலாம். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று கோட்டைகளையும் தகர்த்தெறிந்து ஆன்மா விடுதலை பெற்று இறை இன்பத்தை நுகரவேண்டும். இறைவனே வந்து அருள் தந்தால்தான் இது சாத்தியமாகும். அத்தகைய தெய்வத் திருவருள் நமக்குக் கிடைக்குமா என்று சந்தேகிக்கும் மக்களுக்கு உறுதி கூறுகிறார் திருமூலர்.

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரியன் என்று எண்ணி அயர்வுற வேண்டா

(திரிகின்ற- இந்த மூன்று அசுரக் கோட்டைகள் ஒரு நிலையில் இல்லை. ஓர் உருவத்திலும் இல்லை. பல்வேறு நிலைகளில் ஆன்மாவைச் சிறை செய்து நிற்பவை. அதனால் “திரிகின்ற முப்புரம்” என்கிறார் திருமூலர்)

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை

(செற்ற பிரானை - அழித்த இறைவனை)

“என் அருளை நாடுங்கள் கோட்டையை நான் தகர்த்துவிட்டு, ஆன்மாவுக்கு விடுதலை தருவேன்” என்று வாக்கு தந்துவிட்டபடியால் “செற்ற” என்று இறந்த காலத்தில் பாடுகிறார் தவமுனி.

அரியன் என்று எண்ணி அயர்வுற வேண்டா

(அரியன் என்று- நம்மால் அடைவதற்கு அரியன் அதாவது அணுக முடியாத நிலையிலுள்ளவன் என்று அயர்வுற வேண்டா- மனதை தளரவிட வேண்டாம்)

புரிவுடையாளர்க்குப் பொய்யலன் ஈசன்

(புரிவு- மெய்யன்பு புரிவுடையாளராக- மெய்யான அன்புகொண்ட பக்தர்களுக்கு பொய்யான் ஈசன்- பொய்க்காது அருள் புரிபவன்)

பரிவோடு நின்று பரிசறிவானே

(பரிவோடு நின்று- கருணையோடு அருள்வதற்கே காத்திருந்து பரிசு அறிவானே- அவரவர் தன்மையை அறிந்து அருள் புரிவான். பரிசு அறிவான். தன்மைக்கு தக்கபடி அருளைத் தெரிந்தவனாகிய இறைவன்)

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அறியன் என்று எண்ணி அயர்வுற வேண்டா
பரிவுடை யாளர்க்குப் பொய்யவன் ஈசன்
பரிவோடு நின்று பரிசறிவானே.

(தொடரும்...

***உன்மீது உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் கடவுள் நேரில் வந்தாலும் பயனில்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறைப் பிரதேசமும், சைவாலயங்களும் ஒரு சமகாலப் பார்வை

– ***திரு சண்முகலிங்கம் சஜீலன்*** அவர்கள் –

சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் காங்கேசன்துறைப் பிரதேசம் மிகவும் முக்கியத்துவமுடையதொரு பிரதேசமாகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இப்பிரதேசம் தரை மற்றும் கடல்வழிப் போக்குவரத்து, விவசாயம், கல்வி, நீதிபரிபாலனம், நிர்வாகம், தொழிற்றுறை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றில் சிறந்தோங்கியிருந்தது. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பிருந்த நாகர் ஆட்சிக்காலம் தொடக்கம் மாருதப்புரவீகவல்லியின் வருகை நிகழ்ந்த காலம் முதலாக, பிற்காலச் சோழராட்சி நிலவிய காலம், தமிழ் அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி நடத்திய காலம் வரை இப்பிரதேசத்தில் சைவத்தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சி பேணப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். இக் காலத்தில் கோவிற்கடவை என அழைக்கப்பட்ட கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை ஆகிய மூன்று பிரதேசங்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதற்கு இப்பிரதேசத்தில் அமைந்திருந்த மிக முக்கியமான மூன்று சைவ ஆலயங்களே காரணமாகும். நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கசாயத்துறை ஆனந்த பிள்ளையார் ஆலயம் ஆகியவையே அவையாகும். இச் சைவ ஆலயங்களே இக்காலத்தில் தமிழர் பண்பாட்டின் அடித்தளமாக விளங்கியிருந்தது. ஐரோப்பியர் ஆட்சியில் குறிப்பாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் இப்பிரதேசம் கலாசாரப் பண்பாட்டு ரீதியில் சற்று நலிவுற்றிருந்தாலும், மற்றைய பல துறைகளிலும் செல்வாக்குடனேயே திகழ்ந்து வந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாணத்திற்கும் தென்பகுதிக்குமான தரைவழிப் போக்குவரத்துபாதை அமைக்கப்பட்டதும் போக்குவரத்து ரீதியில் காங்கேசன்துறைப் பிரதேசத்தின் முக்கியத்துவம் குறைந்தது. எனினும் ஏனையவற்றில் இவற்றின் முக்கியத்துவம் அதிகரித்தே வந்துள்ளது.

இன்றைய காலத்தில் காங்கேசன்துறைப் பிரதேசத்தின் சைவத் தமிழ்ப் பண்பாட்டினை பொறுத்தவரையில் அவற்றின் வளர்ச்சிக்கும், நீண்டகாலத் தொடர்ச்சிக்கும் இப்பிரதேசத்தின் சைவ ஆலயங்களே முக்கிய பங்களிப்பினை வழங்கி வந்துள்ளன. இப் பிரதேசத்தின் கோயிற்கடவைப் பிரதேச ஆலயங்கள் தவிர்ந்த வேறு பல சைவ ஆலயங்களும் கூட பல வகைகளிலும் முக்கியத்துவம் உடையதாக விளங்கியுள்ளன. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சைவ ஆலயங்களில் பல ஆலயங்கள் பிரசித்திபெற்றவையாக இருப்பதுடன் தொன்மையான தாகவும், வரலாற்றுப் புகழ்மிக்கவையாகவும், ஆலய அமைப்பு கட்டடக்கலை, ஓவியம், சிற்பம் ஆகியவற்றின் சிறப்புக்களை வெளிப்படுத்துபவையாகவும், பூசை வழிபாடுகள், ஆலயக்

*கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல. உங்களை தூங்கவிடாமல் செய்வது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகள், விசேட விழாக்கள், மகோற்சவ விழாக்கள் ஆகியவற்றின் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளவையாகவும் உள்ளன.

எனினும் இப்பிரதேசத்தின் சைவ ஆலயங்களின் வரலாற்றைப் பொறுத்தவரை 20ஆம் நூற்றாண்டில் இறுதி இரண்டு தசாப்தங்களும், 21ஆம் நூற்றாண்டின் முதற் தசாப்த காலமும் ஓர் இருண்டகாலம் என்றே கூறலாம். 1980களின் பிற்பகுதியில் ஏற்பட்ட யுத்தமும், இராணுவ நடவடிக்கைகளும் இப்பிரதேசம் முழுமையாக உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப் பட்டமையும், இப்பிரதேசத்தில் பன்னெடுங்காலமாக உயர்ந்து நின்ற பல சைவ ஆலயங்களை சிதைத்து அழித்ததுடன் பல கோடிப் பெறுமதியான சொத்துக்கள், உடமைகள் என்பவற்றையும் அழித்தொழித்துவிட்டது. இவை தவிர இப்பிரதேசத்தில் மக்களின் பாரம்பரியமான வாழ்விடங்கள், குடிமனைகள், சொத்துக்கள் ஆகியவையும் அழிக்கப்பட்டதுடன் உயிர் சேதங்களும் ஏற்பட்டிருந் தன. இன்று இப் பிரதேசங்கள் பல இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதுடன் மக்கள் படிப்படியாக மீளக் குடியேறுவதுடன் தமது பாரம்பரிய வழிபாட்டிடங்களை மீள் புனரமைப்புச் செய்து வருகிறார்கள். சில ஆலயங்கள் மீள்புனரமைப்பு செய்யப்பட்டு கும்பாபிஷேகங்களும் நடைபெற்றுள்ளதுடன், பூசை வழிபாடுகளும் உற்சவங்களும் நிகழ்ந்து வருகின்றன. எனினும் இன்னும் சில பகுதிகள் விடுவிக்கப்பட வேண்டியிருப்பதுடன் அவ்விடங் களிலுள்ள ஆலயங்களும் மீள்புனரமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது.

இக் காங்கேசன்துறைப் பிரதேசத்தில் மிகமிக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில தொல்லியல் அகழ்வாய்வுகள் எமது தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றில் மிகுந்த முக்கியத் துவத்தைப் பெறுவதாயுள்ளது என கலாநிதி செ. கிருஷ்ணராசா அவர்கள் தனது அண்மைய ஆய்வுக்கட்டுரையொன்றில் கூறியுள்ளார். அதாவது தற்போது அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் மயிலிட்டித்துறைமுக புனர்நிர்மாண வேலைத்திட்டத்தின்போது கடற் படுக்கையை ஆழப்படுத்தும் செயற்பாட்டின்போது கிடைத்த தொல்லியல் எச்சங்கள் மிகுந்த கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. பழங்காலத்திற்குரிய கல்லினால் செய்யப்பட்ட ஆயுதங்கள் (கல்லாயுதம்), வெண்படிக் கண்ணாடிக் கல்லாலான (Blade) எனப்படும் கருவி, கல்லினால் செய்யப்பட்ட முத்திரை போன்ற அமைப்புடைய வட்டவடிவமான கல். சுடுமண் நாணயக்குற்றி, கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள், ரோமானிய, கிரேக்க மட்பாண்டங்கள் என்பன இங்கு கிடைத்துள்ளன. இவை குறுணிக் கற்காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து பெருங் கற்கால வாழ்வு முறையிலான குடியிருப்புகள் மயிலிட்டித்துறைமுகத்தினை அண்டியுள்ள தையிட்டி, வீமன்காமம், பழந்துறை, வீரமாணிக்கதேவந்துறை, பெரியதேவந்துறை, கட்டுவன், நரசிங்கதேவன் புலம், சங்குவத்தை ஆகிய பழங்கிராமங்களில் நிலைபெற்றிருந்ததை உறுதிப் படுத்துகிறது. எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் தொல்லியலாய்வுகள் மூலம் இதன் பல பரிமாணங்கள் வெளிப்படுத்தப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் பிரதேசசபைகளின் நிர்வாகக் கட்டமைப்பு ரீதியாக காங்கேசன்துறைப் பிரதேசமானது (காங்கேசன்துறை உப அலுவலகம்) காங்கேசன்துறை மேற்கு (J/233) காங்கேசன்துறை மத்தி (J/234) காங்கேசன்துறை தெற்கு (J/235) தையிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு (J/247) தையிட்டி வடக்கு (J/249) தையிட்டி தெற்கு (J/250) மயிலிட்டித்துறை வடக்கு (J/251) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள சைவ ஆலயங்கள் பற்றிய பார்வையாகவே இக்கட்டுரை அமைகிறது.

காங்கேசன்துறை மேற்கில் அமைந்துள்ள யாத்திரை செல்லப்பிள்ளையார் ஆலயம் பழமையான ஓர் ஆலயமாகும். யாழ் - காங்கேசன்துறை வீதிக்கண்மையில் அமைந்துள்ள இவ்வாலயம் இவ்வீதியால் சென்று வருவோரின் வழிபடு தலமாகவும் உள்ளது.

அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், வசந்த மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், மடப்பள்ளி, களஞ்சிய அறை ஆகிய கட்டட அமைப்புக்களுடன் முருகன், கஜலட்சுமி, வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர், நந்தி, பலிபீடம் ஆகிய பரிவார மூர்த்திகளுடன் இவ்வாலயம் அமைந்திருந்தது. இவ்வாலயத்தின் முன்பக்கத்தில் வரையப்பட்டிருந்த ஓவியம் மிகுந்த கவனத்தைப் பெற்றிருந்தது. அதில் விநாயகர் அம்மை அப்பரிடம் மாங்கனி வாங்கும் ஓவியம் மிகவும் தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது. அதற்கருகில் ஆலய வருங்கால அமைப்புத்திட்டம் எனும் ஓவியமும் வரையப்பட்டிருந்தது. அதில் எதிர்காலத்தில் அமைக் கப்படவிருந்த ஐந்துதள இராஜ கோபுரத்துடனும் இரு மணிக்கூட்டுக் கோபுரத்துடனும் கூடிய ஆலயத்தின் அமைப்பு வரையப்பட்டிருந்தது. எனினும் யுத்தகாலத்தில் ஆலயம் மிகவும் கடுமையாகச் சேதமுற்றிருந்ததுடன் ஓவியங்களும் அழிவடைந்திருந்தன. தற்போது இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிப்பதுடன் பழைய ஓவியங்களும் புத்துயிர் பெற்றுள்ளன. சில ஓவியங்கள் ஆலய உட்பிரகாரச் சுவரில் வரையப்பட்டுள்ளன. 23.08.2020இல் புனருத்தாரண கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. தற்போது ஆலயத்தில் பூசை வழிபாடுகள் கிரமமாக நடைபெறத் தொடங்கியுள்ளன. இரண்டு மண்டபங்களுடன் கூடிய சிறிய கோயிலாக பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்த மாம்பிராய் வைரவர் ஆலயம் யுத்தகாலத்தில் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னர் தற்போது இவ்வாலயம் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 30.01.2020இல் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆலயத்தில் விசேட விழாக்களும் அலங்கார உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் அமைந்துள்ள ஐயனார் ஆலயம் தற்போது உயர் பாதுகாப்புவலயப் பிரதேசத் திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஆலயத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மாங்கொல்லை வைரவர் ஆலயம், சீமெந்துக்கூட்டுத்தாபன வைரவர் ஆலயம் என்பன இப்பகுதியில் அமைந்துள்ள ஏனைய ஆலயங்களாகும்.

காங்கேசன்துறை மத்தியில் அமைந்துள்ள கசாயத்துறை ஆனந்தப்பிள்ளையார் ஆலயம் மாருதப்புரவீகவல்லி காலத்திற்கும் முந்தியது. மாருதப்புரவீகவல்லி வழிபட்ட தலமாகவும் கருதப்படுகிறது. மாருதப்புரவீகவல்லியும் அவளது படை பரிவாரத்தினரும் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு ஈழத்தை நோக்கி (காங்கேசன்துறை) வரும்போது அவர்கள் பயணம் செய்த படகு புயற்காற்றினால் அங்கும் இங்கும் ஆடவே தமது பயணத்தில் ஏற்பட்டிருக்கும் இடையூறை நீக்கியருளுமாறு அவர்கள் ஆனந்தப்பிள்ளையாரைத் தமது மனத்தின்கண் வேண்டி வழிபட்டதாக மாவைக்கந்தன் கப்பற்பாட்டு கூறுகிறது. அத்துடன் தட்சிணகைலாச மாண்மியம், யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவமாலை ஆகியவற்றிலும் இவ்வாலயம் பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. இத்தகு பெருமைபெற்ற இவ்வாலயத்தின் மூலமூர்த்தி சுயம்புலிங்கப் பிள்ளையாராகும். திரிபுரசுந்தரி, ஸ்ரீ கதிரவேற் குமரன், வைரவர் ஆகிய பரிவாரத் தெய்வங்களுடனும் கூடிய இவ்வாலயத்தில் பூஜை வழிபாடுகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வந்தன. யுத்த அனர்த்தச் சூழல் நிலவியபோது உயர் பாதுகாப்பு வலயத்துள் இருந்த ஆலயம் மிகக் கடுமையாகச் சேதமுற்று அழிவடைந்திருந்தது. தற்போது ஆலயம் முழுவதுமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. முன்னர் வழிபடப்பெற்ற சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலய முன்றலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆனந்தப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலேயே முத்துமாரியம்மன் ஆலயம், வீரபத்திரர் ஆலயம் ஆகியனவும் அமைந்துள்ளன. 1990ஆம் ஆண்டிற்கு முன்னர் பூசை வழிபாடுகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வந்த இவ்வாலயங்களும் யுத்தத்தால் கடுமையாகச் சேதமுற்றிருந்தன. முத்துமாரியம்மன் ஆலயம் புனரமைக்கப்பட்டு ஆனி மாதம் 2020இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இவ்வாலயத்தின் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வீரபத்திரர் ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகிறது. இவை தவிர வைரவர் ஆலயம், குட்செற் பிள்ளையார் ஆலயம் ஆகியனவும் இக் கிராம சேவையாளர் பிரிவினுள் உண்டு.

காங்கேசன்துறை தெற்கில் குருநாதசுவாமி கோயில், குமார கோயில், கூடலூர் இராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில், காளி கோயில், முத்துமாரி அம்மன் கோயில் ஆகியன உண்டு. குருநாதசுவாமி கோயில், போர்த்துக்கீசர் காலத்திற்கும் முற்பட்டது. சுன்னாகம் வரத பண்டிதர் (கி.பி. 1656 - கி.பி. 1716) குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது எனும் தூதுப் பிரபந்தமொன்றை இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடியுள்ளார். யுத்தத்திற்கு முன்னர் திருவிழாக்கள் மற்றும், விசேட பூசை வழிபாடுகளுடன் சிறப்புற்றிருந்த இவ்வாலயம் தற்போது முற்றாக அழிவடைந்துள்ளது. ஆலயத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது. குமார கோயில் என்பதும் ஓர் முருகன் கோயிலாகும். இக்கோயில் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு 2019ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. மூலமூர்த்தி வேற்பெருமான் பரிவார மூர்த்தியாக பிள்ளையார் உள்ளார். மூலஸ்தானம், அர்த்தமண்டபம், தரிசன மண்டபம் ஆகியவற்றுடன் மணிக்கோபுரம், கிணறு ஆகியனவும் உண்டு. மணிக்கோபுரம் 1979ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. தலவிருட்சமாக அரசு உள்ளது.

தையிட்டி கிழக்கில் அமைந்துள்ள கணையவிற் பிள்ளையார் ஆலயம் அல்லது கணேசவிற் கோட்டப்பிள்ளையார் ஆலயம் பழம்பெருமையும், வரலாற்றுப் புகழும் மிக்க ஆலய மாகும். இது சோழர்காலத்தில் சோழ அரசனின் பிரதானியாக விளங்கிய வரராசசிங்கவளவன் எனும் மன்னனால் கட்டப்பட்டது. 200 வருடங்களுக்கு மேலாக மகோற்சவமும், விசேட விழாக்களும் நடைபெற்ற ஆலயமாகும். இவ்வாலயத்தில் பல அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடைபெற்றுள்ளது. கட்டடக்கலை அம்சங்களில் சற்று வித்தியாசமான அமைப்பையும் இவ் ஆலயம் கொண்டிருந்தது. ஆலயத்திற்கு மேற்குப் பக்கத்தில் ஒரு திருக்குளம்

*அவசரமாகத் தவறு செய்வதைவிட தாமதமாக சரிவரச் செய்வது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கணையவில்குளம்) அமைந்திருப்பதால் குளத்தடிப் பிள்ளையார் ஆலயம் எனவும் அழைக்கப்படுகின்றது. 1910, 1942, 1953, 1981 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. மூலமூர்த்தி சர்வார்த்த சித்திவிநாயகப் பெருமான் என்பதாகும். முருகன், சண்டேஸ்வரர், வைரவர் ஆகிய பரிவாரத் தெய்வங்களுமுண்டு. அண்மையில் யுத்த அனர்த்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட இவ்வாலயத்தில் தற்போது புனருத்தாரணப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. புதிதாக கஜலட்சுமி சந்நிதியும் கட்டப்பட்டு வருகிறது. சுன்னாகம் வரதபண்டிதரால் இயற்றப்பட்ட மிகப் பழமையான ஊஞ்சல் பதிகம் இவ்வாலயத்திற்கு உள்ளது. எனினும் அப்பதிகத்தின் மூன்று செய்யுள்களே தற்போது இருக்கின்றன. தையிட்டி கிழக்கில் அமைந்துள்ள இன்னொரு பிள்ளையார் ஆலயம் அரசடி சித்திவிநாயகர் ஆலயமாகும். 300 வருடங்களுக்கு முற்பட்ட இவ்வாலயமும் வரராசசிங்கவளவன் எனும் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இந்தியாவிலிருந்து கொண்டுவந்த லிங்கத்தை அரசமரத்தின்கீழ் வைத்து வழிபட்டதாகக் கூறப்படுகிறது. சங்கிலி மன்னன் இவ்வாலயத்தை கட்ட எடுத்த நடவடிக்கை அவனது வீழ்ச்சியால் கைவிடப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. நித்தியபூசைகளும், விசேட திருவிழாக்களும் இவ்வாலயத்தில் நடைபெற்று வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு சித்திரை மாதம் 2017ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கரையான்காடு வப்பத்தை அம்பாள் வைரவர் ஆலயமும் இப்பகுதியிலுள்ள ஓர் ஆலயமாகும்.

தையிட்டி வடக்கில் துர்க்கை அம்மன் ஆலயம் உள்ளது. மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்பமண்டபம், மணிக்கோபுரம் ஆகியவற்றுடன் மேற்கு வாயிலையுடைய இவ்வாலயம் மிகவும் சேதமடைந்துள்ளது. ஆலயத்தின் கொடிக்கம்பம் தூர்வடைந்த நிலையில் உள்ளது. தையிட்டி தெற்கில் தூதிலிடைக் கண்ணகி அம்மன் ஆலயம், குருந்துவீதி கண்ணகி அம்மன் ஆலயம், முனியப்பர் ஆலயம், சுடுகாட்டு ஞானவைரவர் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம் என்பன உள்ளன. தூதிலிடைக் கண்ணகியம்மன் ஆலயம் 1825ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு உள்ளது. மூலமூர்த்தி கண்ணகியம்மன், பரிவாரமூர்த்திகளாக பிள்ளையார், நாகதம்பிரான், வைரவர், சந்தானகோபாலர் ஆகியோர் உள்ளனர். நித்தியபூசையுடன் விசேட உற்சவங்களும் நடைபெற்று வந்தது. அண்மைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆலயம் தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. குருந்துவீதி கண்ணகி அம்மன் ஆலயம் போர்த்துக்கீசர் காலத்திற்கு முற்பட்டது. பின்னர் போர்த்துக்கீசரால் இவ்வாலயம் இடிக்கப்பட்டது. அனேக ஆண்டுகளுக்கு பின் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை வைத்து ஊர் மக்கள் கண்ணகை அம்மன் ஆலயம் என பெயர்சூட்டி வழிபட்டு வந்தனர். தினமும் ஒருகாலப் பூசையுடன் விசேட காலங்களில் வழிபாடுகளும் நடைபெற்று வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆலயம் தற்போது புனரமைப்புச் செய்யப்படுகிறது. முனியப்பர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 22.07.2019இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. சுடுகாட்டு ஞானவைரவர் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. சித்திரைப் பௌர்ணமியில் விசேட விழா இங்கு நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலிட்டித்துறை வடக்கில் வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி அம்மன் ஆலயம் முனையன்வளவு முருகையன் ஆலயம், தோப்பு பிள்ளையார் ஆலயம், சங்குவத்தை மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் திருப்பூர் பேச்சியம்மன் என அழைக்கப்படும் முத்துமாரி அம்மன் ஆலயம் மார்புநோய் வைத்தியசாலை முருகன் ஆலயம் ஆகியன அமைந்துள்ளன. வீரமாணிக்க தேவன்துறை கண்ணகியம்மன் ஆலயத்தில் பல்லவர் காலத்துச் சிலா விக்கிரகமான கண்ணகியம்மன் விக்கிரகம் உண்டு. பரிவார மூர்த்திகள் சிவன், அம்மன், வைரவர் தினமும் மூன்று காலப் பூசையுடன் விழாக்கள் நடைபெற்று வந்தது. மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்தில் கண்ணகி வரலாறு சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. மயில்வாகன ஐயர் பாடிய ஊஞ்சல் பதிகம் இவ்வாலயத்திற்குள்ளது. அன்றைய யுத்த அனர்த்தம், உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக ஆலயம் சேதமடைந்திருந்தது. ஆலயத்தின் பழைய சித்திரத் தேரும் சிதைவடைந்துள்ளதுடன் அது தற்போதும் ஆலய முன்றலில் காணப்படுகிறது. மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டதும் 2018இல் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டதுடன் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று 2019ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. முனையன் வளவு முருகையன் ஆலயம் இற்றைக்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டதாகும். மூலமூர்த்தி வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான். அன்றைய யுத்த அனர்த்தம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம் காரணமாக ஆலயம் மிகவும் பாதிப்படைந்திருந்தது. தற்போது புனரமைப்புப் பணிகள் நடைபெற்று 04.09.2019இல் கும்பா பிஷேகம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக ஐந்து தள இராஜகோபுரமும் கட்டப்பட்டுள்ளது. தற்போது கந்தசஷ்டி உற்சவம் உட்பட பல உற்சவங்களும் சிறப்பாக நடைபெறத் தொடங்கி யுள்ளது. சங்குவத்தை மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் முற்றாகத் தரைமட்டமாகியிருந்தது. தற்போது புதிய ஆலயத்தின் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. வீரமாணிக்க தேவன்துறை கண்ணகியம்மன் ஆலயத்துடன் இணைந்ததாக உள்ள தோப்புப் பிள்ளையார் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

திருப்பூர் பேச்சியம்மன் ஆலயம் 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சிறு கொட்டகை அமைப்புடைய ஆலயத்தில் பேச்சியம்மன் வழிபாடு நீண்டகாலமாக நடைபெற்று வந்தது. மயிலிட்டித்துறைக் கிராம மக்களுக்கும் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள ஊர்களுக்கும் இடையில் வர்த்தக, வாணிப, கலாசார, பண்பாட்டுத் தொடர்புகள் மிக நீண்டகாலமாகவே நிலவி வந்துள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள திருப்பூர் என்ற ஊரிற்கும் இவ்வம்மன் ஆலயம் அமைந்துள்ள ஊரிற்குமிடையில் நெருங்கிய பல ஒற்றுமைகள் இருப்பதை அவதானித்த இவ்வூர் மக்கள் இவ்விடத்திற்கு திருப்பூர் எனப் பெயரிட்டு திருப்பூர் முத்துமாரி அம்மன் எனப் பெயர் வழங்கி வந்தனர். 1987ஆம் ஆண்டு ஆலயத்தை கற்கோயிலாகக் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்தன. துரதிஷ்ட வசமாக 1990இல் ஏற்பட்ட யுத்தத்தினாலும் இடப்பெயர்வினாலும் இம்முயற்சி பாதிக்கப்பட்டதுடன் ஆலயமும் முற்றாக தரைமட்டமாகியிருந்தது. மீண்டும் 30 வருடங்களிற்குப்பின் மக்கள் இப்பிரதேசத்தில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டதும் ஆலயத்தை மீளக் கட்டுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் எடுக்கப்பட்டன. 05.09.2019இல் மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நாட்டப்பெற்று ஆலயப்புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருப்பூர் ஒன்றியம் இவ்வாலய பரிபாலனத்தை மேற்கொண்டு வருகிறது.

இக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஆலயங்களின் வரலாறு முழுமைப்படுத்தப்பட்ட வரலாறல்ல. ஆலயங்கள் பற்றிய வரலாற்றுத் தேடலின் ஆரம்பப்புள்ளியாகும். எதிர்காலத்தில் இச் சைவாலயங்களின் வரலாறு முழுமையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். முப்பது வருடங்களாக நடைபெற்ற அண்மைய யுத்தமும், உயர்பாதுகாப்பு வலயப் பிரகடனமும் வலிகாமம் வடக்கின் பெரும்பாலான பகுதிகளை சிதைத்து அழித்துள்ளதால் எம்மிடமிருந்த பல விடயங்கள் மறைந்துபோயிற்று. எனவே அதனை மீட்டெடுப்பதற்கும், இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கும் எமது இப்பிரதேசத்தின் அத்தனை விடயங்களும் ஆய்வுசெய்யப்பட்டு ஆவணப் படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசரமானதும், அவசியமானதுமான செயற்பாடாகும். இதன் மூலம் எமதும் எமது எதிர்கால சந்ததியினதும் ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு வழி சமைக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

---

ஆன்மீகம் என்றால் நெற்றியில் விபூதி அணிந்து, எந்நேரமும் இறைவனின் நாமத்தை உச்சரித்துக்கொண்டும், பலர் பார்க்கும்படி கோயிலுக்கு நன்கொடை செய்வதும், அடுத்தவருக்கு பலர் முன்னிலையில் உதவி செய்வது மட்டுமல்ல. மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல், அடுத்தவருக்கு நல்லது செய்யாவிட்டாலும், கெடுதல் செய்யாமல் மனச்சாட்சிக்குப் பயந்து வாழ்வது ஒருவகை ஆன்மீகம். அடுத்ததாக பல மணிநேரம் வேறு பல சிந்தனையுடன் பூஜை செய்யாமல், இறைவனை ஒரு நிமிடம் வணங்கினாலும் எந்தவித சிந்தனையுமின்றி ஆத்மார்த்தமாக வணங்கி, எனக்கு உன்னை தவிர வேறு யாரும் தெரியாது, உன்னைத் தவிர வேறு யாரும் கிடையாது. அனைத்தும் நீயாக இருக்கிறாய், இந்த உடலை நீயே வழிநடத்திச் செல், என இறைவனிடம் சரணடைந்துவிட்டு நமது கடமைகளை மிகச் சரியானதாக செய்வது ஒருவகை ஆன்மீக வாழ்க்கை. நமக்கு ஏற்படும் நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் நாமே பொறுப்பு. அனைவரிடமும் அன்பாகப் பேசுதல், அனைவருக்கும் நன்மை செய்தல், அனைவரையும் மரியாதையுடன் நடத்துதல், எதற்குமே ஆசைப்படாமல் இருத்தல், நமது வலது கையில் செயல் திறமை உள்ளது. அதை மிகச் சரியாகச் செய்து உண்மையாக வாழ்ந்தால் இடது கையில் வெற்றி தானாகவே வந்து சேரும். இது ஒருவகை ஆன்மீக வாழ்க்கை. இறைவனுக்கு நீங்கள் பிரசாதம் செய்து, படையலிட்டு, மிகப்பிரமாண்டமான பூஜை செய்யவேண்டும் என்பதெல்லாம் இல்லை. அதை விரும்புவதும் இல்லை. அவன் விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் உண்மையான பக்தி. இறைவனுக்கும் நம் உள்ளத்தின் ஒரு சிறு ஓரத்தில் உண்மையான பக்தியை வைத்து, சதா சர்வகாலமும் அவனை நினைத்து, எந்தச் செயல் செய்தாலும் அது அவனால்த்தான் செய்யப்படுகிறது என்ற நினைப்புடன் செய்து, அந்த செயலின் பலனை அவனுக்கு சமர்ப்பணம் செய்து வாழ்ந்து வந்தால் அதுவே உச்சக்கட்ட ஆன்மீகம். கடவுள் அனைத்திலும் இல்லை. ஆனால் அனைத்துமே கடவுளாக இருக்கிறார் என்ற பழமொழி ஒன்று உண்டு. இதன் அடிப்படையில் இந்த உலக உயிர்களுக்கு உங்களால் இயன்ற உதவி செய்து, அதற்கான பலனை எதிர்பார்க்காமல், வாழ்ந்து வந்தால், மிகச் சரியான பாதையில் இறைவனை நீங்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

*வாழ நினைப்பவனுக்கு வானம்கூட வாயிற்படிதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஆனந்த சாகரம்

- திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் -

## அபிராமி எனும் அருமருந்து

அபிராமி என்ற திரு நாமத்தின் பொருள் பேரழகுடையவள் என்பது. "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி". "எம் பெருமாட்டி தன் பேரழகே" என உணர்ந்து பட்டர் பாராட்டுகிறார். அம்பிகையின் திருவுரு அழகையும், திருமேனிச் சோதியையும் தரிசித்து ஒளியே என்றும், கோமளமே என்றும், பரிமள யாமளையே என்றும் துதித்துக் களிக்கின்றார். உதிக்கின்ற செங்கதிரும், சிந்தூரத் திலகமும், ஞானம் உடையவர்கள் நன்கு மதிக்கின்ற மாணிக்கமும், மாதுள மலரும், தாமரை மலரில் எழுந்தருளிய திருமகள் துதிசெய்கின்ற மின்னற் கொடியும், மெல்லிய வாசனையுடைய குங்குமக் குழம்பும் போன்ற திருமேனியையுடைய அபிராமியம்மை என்னுடைய மேன்மையான துணை ஆவாள்.

எமக்கு உயிர்த்துணையும், யாம் தொழும் தெய்வமும், எம்மைப் பெற்ற அன்னையும், எல்லா உயிர்களுக்கும் துணையாகிய திரிபுர சுந்தரியேயாகும். யாரும் அறியாத இரகசியத்தை யான் அறிந்தேன். அதனால் நின் திருவடியில் அடைக்கலம் புகுந்தேன். மனிதரும், தேவரும் முனிவரும் வந்து தலை வணங்கும் செம்மையாகிய திருவடிகளை அடைந்தேன். நின் திருவடியில் சரண்புகுதல் எல்லாவிதமான நன்மைகளையும் கூட்டும் என்ற உண்மையை அறிந்தேன். நீண்ட சடையுடைய சிவபிரான் உண்டவிடத்தை தன் திருக்கரத்தால் கண்டம் மட்டுமாக்கி அமுதமாக்கிய அம்பிகை. தாமரை மலர்மேல் அழகுபெற வீற்றிருக்கும் சுந்தரியும், அந்தரியுமாகிய அம்பிகையின் திருவடி என் தலைமேலுள்ளது. அதனை நான் வணங்குகின்றேன். மனோன்மணி லலிதாம்பிகையின் திருநாமங்களுள் ஒன்று. மனத்தை ஞானநிலைக்கு எழுப்புபவள் என்பது பொருள் பிரமதேவனும், சிவபெருமானும், திருமாலும் வழிபட்டு எந்நாளும் தோத்திரம் செய்யும் செம்மையாகிய திருவடியையுடையாய்! சிந்தூரத்திலகம் அணிந்த திருமுகத்தையுடைய பேரழகியே! பல பிறவிகளில் சுழன்று திரியும் அடியேனது உயிர், பிறப்பு, இறப்பு எனும் தளர்ச்சியில்லாதாகிய ஒப்பற்ற வீட்டு நிலையை அடையும்படி திருவுள்ளம் கொண்டருள்வாயாக.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவதுன் மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்
தன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே.

அடியேன் தியானம் செய்வதும், என்றைக்கும் வழிபடுவதும் நின்றன் திருவடித் தாமரையே, உலகம் பதினான்கையும் ஈன்றோய்! அதிசய வடிவுடைய அம்மனை; "அதிசய வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்...." என பட்டர் வர்ணிக்கிறார். வியக்கத்தக்க திருவுருவைக் கொண்ட அபிராமி வெற்றியுடைய திருமுகத்தைக் கொண்டவள். அழகிய பூங்கொடி போன்றவள். அன்னை அதிசயிக்கத்தக்க அழகு வடிவாகக் காட்சியளிக்கிறாள். அழகே கண்டு வெட்கிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அதி சுந்தரியாக அன்னை காட்சியளிக்கிறாள். இந்தப் பேரழகில் சொக்கி சொக்கன் அவளைத் தனது இடப்பாகமாக ஏற்றான். அபிராமி என்ற பெயருக்குப் பொருள் அதிக அழகுடையவள். இப்பாடலை பக்தியுடன் பாடினால் கன்னிகைகளுக்கு நல்ல வரன் கிட்டுமாம். அம்பிகையின் தியானத்திலே தன்னை முழுமையாக ஈடுபடச் செய்தவர் பட்டர்.

சிவபெருமானும் அம்பிகையும் ஒருவருள் ஒருவராக மறைந்திருக்கும் சமயமும் உண்டு. பாதிப்பாதியாக இணைந்திருக்கும் அழகும் உண்டு. தனித்தனியாக கணவன், மனைவியாகக் காட்சி தரும் கோலமும் உண்டு. உலகம் தோன்றுவதற்கு முன் அர்த்தநாரீஸ்வர கோலத்தில்தான் இறைவன் வெளிப்படுகிறான். பிறகே தத்துவங்கள் பிறக்கின்றன. அர்த்தநாரீஸ்வர கோலம் மிகவும் தொன்மையான கோலம். சக்தியின் தோற்றம் சிவம் தொழிற் செய்ய உதவுகிறது. சக்தியில்லையேல் சிவமில்லை.

மனிதனாகப் பிறந்தால் மரணம் என்பது தவிர்க்கமுடியாததாகும். அது எப்போது கிட்டும் என்று யாராலும் கூற முடியாது. அது ஒரு தேவ ரகசியமாகும். அந்த மரண பயம் நீங்க அம்பிகையின் பொற் பாதங்களைப் பற்ற வேண்டும்.

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது, வெளி நிற்கவே.

அன்னையே! அபிராமியே! நீயும், உன்னால் இடப்பாகம் பெறப்பட்ட ஈசனும், வல்லமை பொருந்திய காலன் என்னை அணுகும் நேரம் என்முன்னே, என்னை ஆண்டு வரும் பொற் பாதங்களைப் பணியும்வண்ணம் இனிய திருமணக் கோலத்தில் வந்து காட்சிதந்து அருள்புரிவாய். ஆண்டுகொள்வாய். அம்பிகையின் பொற்பாதங்களைப் பற்றினால் யமனின் பாசக்கயிறு வராது. மரணத்தை அழிப்பவளாகக் காட்சி தருகிறாள். லலிதா ஸகஸ்ர நாமத்தில் "ம்ருத்யுமதனீ" என்று போற்றப்படுகிறாள். அன்னையைச் சரணடைந்தால் மறுபிறவியிலிருந்து தப்பலாம். கொடுமையான காலனை அழிப்பவளாகக் காணப்படுகிறாள். இவளை "காலஹந்த்ரீ" என்று அர்ச்சிப்பார்கள். இரவோ, பகலோ, நாளையோ அல்லது நெடுங்காலம் கழித்தோ, விபத்திலோ, வியாதியிலோ என மரண வாயில் எப்போதும் திறந்து கிடக்கிறது. அவ்வாயிலில் யமன் பாசக்கயிற்றோடு காத்திருக்கிறான். அம்பிகையின் திருவடிகளைப் பற்றினால் அவ்வாயில் மூடிவிடும். மரணம் வரும்போது காப்பவள் அன்னை.

"சாதல் நான் நாயேன் உன்னை எங்குற்றால் என்ற போதால்
இங்குற்றேன் என் கண்டாயே"

என மணிவாசகரும்,

"உயிர் மயங்கும்போது கடிதே மயின்மிசை வரவேண்டும்" என அருணகிரிநாதரும், "அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்" என ஆழ்வாரும் பாடியுள்ளார்கள். அம்பிகையின் பாதார விந்தங்களைப்பற்ற வேண்டுமானால் பூரண சரணாகதி அடைய வேண்டும். "நான், தான்" எனும் அகந்தை அழியவேண்டும்.

*அரிய காரியங்களைச் செய்ய பெரிய உழைப்பு வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்

கோயிற்கு ஏற்றும் விளக்கே" என்கிறார் குமரகுருபரர். அகந்தை அழிந்தவனுக்கு வானுலகக் கதவுகள் திறந்திருக்குமாம். அகந்தை எனும் ஆணவ மலம் நீங்கி தூய உள்ளத்தோடு இறைவனை வேண்டுகிறார். அகந்தை இருக்குமிடத்து ஆண்டவன் இருக்கமாட்டார்.

அம்பிகை மாணிக்க நிறமுடையவளாதலின் மணியே என்றார். சிவபெருமானிடத்தினின்றும் வேறாகாத அருளை உருவாக நிற்றலின் மணியின் ஒளியே என்றார். பிணிக்கு மருந்து "பிறவிப் பெரும்பிணிக்கோர் மருந்தே" மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்) உலகிலுள்ள உயிர்கள் பிறவிப் பிணியினின்றும் நீங்க அபிராமி எனும் நாமத்தோடு எழுந்தருளியிருக்கும் அபிராமி எனும் அருமருந்தை துதிப்போமாக! பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க

முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல்மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி யென்றும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான் மறவாமல் நின்றேத்துவனே. (தொடரும்...

---

## வேதத்திற்கு நிகரான மந்திரம் எது தெரியுமா?

**"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"**

-திருமூலர் திருமந்திரம்.

இந்த மந்திரம் வேதத்திற்கு சமமானதாகும். எளிமையான ஆனால் வலிமையான பதப்பிரயோகம் இதில் உபதேசிக்கப்பட்ட தர்மங்களை யாவரும் எவ்வித கஷ்டமும் இல்லாமல் எப்போதும் செய்யலாம். பகவான் பக்தியைத்தான் பார்க்கிறார். பக்தன் என்ன கொண்டு வந்திருக்கிறான் என்று பார்ப்பதில்லை. சில பச்சிலைகளைப் போட்டால் பரமேஸ்வரன் திருப்தி அடைந்து விடுகிறார். இதை யாரும் செய்யலாம். ஒரு பிடி புல்லை கோமாதாவான பசுவுக்கு ஊட்டலாம். இதில் முப்பத்து முக்கோடி தேவதைகளும் திருப்தி அடைந்து விடுகிறார்கள். இதையும் யாரும் எளிதில் செய்யலாம். தான் சாப்பிடும் ஆகாரத்தில் ஒரு கைப்பிடி ஒரே ஒரு கைப்பிடி அடுத்தவனுக்கு வழங்கலாம். இதுவும் யாரும் செய்யக்கூடிய எளிமையானதே. இவைகளில் எதையும் செய்யமுடியவில்லையானாலும் பரவாயில்லை. அடுத்தவனோடு பேசும்போது கடுப்படிக்காதே. இதமாகப் பேசு. பதமாகப் பேசு. இல்லையென்று சொன்னாலும் அதையும் இனிமையாகச் சொல். இதையாவது செய்யலாமே. நாம் மூச்சடக்க வேண்டாம். பேச்சடக்க வேண்டாம். நம்மை கடைத்தேற்றக்கூடிய எளிமையான அறங்கள் இவைகளில் ஒன்றையாவது செய்துபார்க்கலாமே. ஒரு கை புல், ஒரு கை பொரி அன்போடு படைத்தால் விநாயகர் வசப்பட்டு விடுவார். சில துளசி இலைகளில் மகாவிஷ்ணு வசப்பட்டு விடுவார். சில துளி கங்கா தீர்த்தம் பரமேஸ்வரன் உச்சி குளிர்ந்துவிடுகிறார். சின்னச் சின்ன அகல் விளக்குகளில் மகாலட்சுமி பிரசன்னமாகி விடுகிறாள். இப்படி அன்போடு செய்யப்படும் பக்தியால் இறைவனை அடையலாம். ஆன்மீகம் என்றால் அன்புதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவியுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு 100 லீற்றர் தே. எண்ணெய் | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| ம. நிஷாந்தன் | ஏழாலை | 5000. 00 |
| தி. ஆதீஸ், தி. சத்தியா | மந்திகை | 5000. 00 |
| S. மதுஷன் | கொக்குவில் | 1000. 00 |
| R. நிரஞ்சன் | கைதடி | 5000. 00 |
| தா. முருகதாசன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| பு. புவனேந்திரன் | வட்டுக்கோட்டை | 10100. 00 |
| திரு சிந்துஜன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. ஜேகாந்தன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| ப. அரிராம் | இணுவில் | 500. 00 |
| பொ. பாமினி | சுன்னாகம் | 5000. 00 |
| சி. தர்மராசா | இடைக்காடு | 5000. 00 |
| S. பிரவீனா, S. ஆதித்தன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| திரு உருத்திரசிங்கம் குடும்பம் | தொல்புரம் | 5000. 00 |
| J. பேரின்பராஜ் | கரணவாய் | 3000. 00 |
| வசந்தி ராசையா | வதிரி | 10000. 00 |
| இ. இந்திரலிங்கம் | இணுவில் | 2000. 00 |
| க. சபாநாதன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| மு. கதிர்காமசோதி | இணுவில் | 1000. 00 |
| சா. நந்தகுமார் | நோர்வே | 25000. 00 |
| K. தர்ஷன் | கரவெட்டி | 1000. 00 |
| வே. ஆதித்தியா | அமெரிக்கா | 10000. 00 |
| க. ஸ்ரீஸ்கந்தராசா | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| ச. குகனேசன் | தெல்லிப்பழை (U.K) | 500. 00 |
| க. முருகேசு | தொல்புரம் | 1000. 00 |
| யா/ ஸ்ரீ புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி | புத்தூர் | 1000. 00 |
| இ. சந்திரமோகன் | பருத்தித்துறை | 1000. 00 |

*ஊக்கமுள்ள மனிதன் தன் கடமையைச் செய்யத் தவறமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| S.T.R. தியாகராஜா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| A.T. மனோகரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கீர்த்திகன் பஞ்சலிங்கம் | சுவிஸ் | தேங்காய், 60k அரிசி |
| V. தக்ஸ்வின் | நீர்வேலி | 3000. 00 |
| மதனதீபன் நிதுஷன் | அச்சுவேலி | 5000. 00 |
| S. தங்கேஸ்வரன் | கொழும்பு | 5000. 00 |
| திரு அருமைநாதன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| G. கிருஷாந் | கோண்டாவில் | 1000. 00 |
| மதுரா ஜெனிஸ் | திருநெல்வேலி | 2000. 00 |
| S. ஆதிக் | புத்தூர் | 1000. 00 |
| சி. நித்தியானந்தம் | கொக்குவில் | 2000. 00 |
| வ.ச. தவராசா | முல்லைத்தீவு | 5000. 00 |
| N. கணேசலிங்கம் | கோப்பாய் | 1000. 00 |
| க. நாகலிங்கம் | கோப்பாய் | 500. 00 |
| பு. விஜிதரன் | பருத்தித்துறை | 5000. 00 |
| S. கவிதா | உரும்பராய் | 5000. 00 |
| T. ஸ்ரீகாந்தன் | உரும்பராய் | 5000. 00 |
| சபேஷன் தேவராஜா | கோண்டாவில் | 1000. 00 |
| விஷ்ணு துர்க்கை | கொழும்பு-13 | 500. 00 |
| பா. கீர்த்தனா | லண்டன் | 1000. 00 |
| ஈஸ்வரி குணசிங்கம் | உடுவில் | 2000. 00 |
| க. ஹாசனா | லண்டன் | 5000. 00 |
| T. யதுர்ஷன் | நல்லூர் | 10000. 00 |
| ஜெ. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை | 10000. 00 |
| இ. தவராசா | உடுப்பிட்டி | 5000. 00 |
| வை. திவாகரன் | கைதடி | 5000. 00 |
| சி. சோமகுலசேகரம் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| இ. தங்கராசா | வவுனியா | 3000. 00 |
| திரு கனகரெட்ணம் குடும்பம் | கனடா | 87500. 00 |
| சி. சிவலிங்கம் | துன்னாலை | 500. 00 |
| யோ. சதீஸ்வரன் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| திரு சாந்தகுமார் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| ஜீ. இலக்கியா | அளவெட்டி (பிரான்ஸ்) | 5000. 00 |
| க. கனகசபாபதி | மிருசுவில் | 5000. 00 |
| தா. நாரணி | சிங்கப்பூர் | 20000. 00 |
| க. துஷாந்தினி | பிரான்ஸ் | 2000. 00 |
| அ. அனுஷா | பிரான்ஸ் | 2000. 00 |
| ச. துஷாந் | ஊரெழு | 1000. 00 |

***குறிக்கோளை அடைய விடாமுயற்சிதான் முக்கியம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வீ. ஜீவராசா | ஜேர்மனி (அச்சுவேலி) | 2000. 00 |
| நா. நடராஜா | கோண்டாவில் | 5000. 00 |
| பொ. குணலிங்கம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பொ. குமரலிங்கம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ராஜன் கணேஷ் | கனடா | 1000. 00 |
| அ. அழகராஜா | நாகர்கோயில் | 10000. 00 |
| பெ. பாலமுரளி | அல்வாய் கிழக்கு | 10000. 00 |
| ஜெ. அஜீஸ் | செட்டிக்குளம் | 1000. 00 |
| சி. கிருபாகரன் | நல்லூர் | 4000. 00 |
| இ. ஜெயச்சந்திரன் | அளவெட்டி | 1000. 00 |
| திரு நிர்மலதாஸ் குடும்பம் | மல்பேர்ன் | 10000. 00 |
| N. டினுஜித் | கைதடி | 5000. 00 |
| கனகேஸ்வரி | கிளிநொச்சி | 1000. 00 |
| நா. மாலினி | பருத்தித்துறை | 2000. 00 |
| யமுனா மூலம் கா. வர்ணராசா | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| P. ரவீந்திரராசா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வானதி சிவஞானம் | இணுவில் | 1000. 00 |
| S. மிகிந்தலா | கரவெட்டி | 5000. 00 |
| சி. சந்திரமோகன் | இணுவில் | 6000. 00 |
| திருமதி நல்லம்மா மூலம் வடிவேலு நினைவாக | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| தெ. நந்தகுமாரன் | அராலி | 1000. 00 |
| ர. ரமேஸ் | துன்னாலை | 1500. 00 |
| சுகந்தன் குமரன் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| திரு ஸ்கந்தமணி குடும்பம் | நோர்வே | 5000. 00 |
| சாகாஜன் ராஜ்குமார் | பிரான்ஸ் | 1000. 00 |
| சிற்பரன், ஆதித்தியா | தெகிவளை | 1000. 00 |
| செ. மோகனதாஸ் | கனடா | 5000. 00 |
| பாஸ்கரன், கிரிதரன் | கோண்டாவில் | 2000. 00 |
| S. ரவீந்திரன் | இணுவில் | 1000. 00 |
| திரு தேவசேனன் குடும்பம், திரு கோபிக்குமரன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| M. ஸ்கந்தேஸ்வரதேவி | அராலி | 500. 00 |
| சு. மாதுளன் | திருநெல்வேலி | 1000. 00 |
| திருமதி செ. திரவியம் | நெல்லியடி | 15000. 00 |
| த. காவேரி | பிரான்ஸ் | 5000. 00 |
| இ. சிவபிறைச்சந்திரன் | புலோலி | 2000. 00 |
| சி. சிவச்செல்வம் | கதிரிப்பாய் | 5000. 00 |
| திரு மகாலிங்கம் குடும்பம் | ஜேர்மன் | 1000. 00 |
| சாந்தினி சண்முகநாதன் | தெகிவளை | 4000. 00 |

*வாழ்வில் அன்பாகவும் தாழ்வில் தக்க துணையாகவும் விளங்குவது கல்வி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சு. ஞானச்செல்வம் | புன்னாலைக்கட்டுவன் | 500. 00 |
| ஏ. கரிதரன் | புனிதநகர் | 1000. 00 |
| சு. நந்தினி | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| த. மயூரதன் | ஏழாலை | 60k அரிசி 5000. 00 |
| நா. ஜெயரூபன் | ஜேர்மன் | 10000. 00 |
| பா. தனுஷன் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| மு. யதுஷன் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| R. ரிஜை | கொலன்ட் | 10000. 00 |
| பொ. லோகநாதன் | உரும்பராய் | 10000. 00 |
| R. நகுலேஸ்வரி | மீசாலை | 5000. 00 |
| இ. கோகிலம் | அச்சுவேலி | 10000. 00 |
| நா. பகீரதன், நா. சதீஸ் | புதுக்குடியிருப்பு | 20000. 00 |
| நா. கண்ணம்மா | மானிப்பாய் | 10000. 00 |
| ஸ்ரீ. சிவரதி | நவக்கிரி | 20000. 00 |
| ச. கமலாதேவி | புலோலி | 5000. 00 |
| திரு முருகதாஸ் குடும்பம் | கனடா | 15000. 00 |
| திரு பாஸ்கரன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| கி. சிவலிங்கம் | துன்னாலை | 500. 00 |
| ஸ்ரீ பாலகிருஷ்ணன் குடும்பம், திரு குமாரசாமி குடும்பம் | பத்தமேனி | 1000. 00 |
| வே. ஆதித்தியா | அமெரிக்கா | 2000. 00 |
| R. கோகிஷா | அச்சுவேலி | 2000. 00 |
| வி. சோதிப்பிள்ளை | சிறுப்பிட்டி | 3000. 00 |
| சி. கந்தசாமி | கரணவாய் | 500. 00 |
| திரு மயூரதன் குடும்பம் | அளவெட்டி | 5000. 00 |
| S. முத்துக்குமாரசாமி | உரும்பராய் | 5000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 2000. 00 |
| ரெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 1000. 00 |
| S. சுந்தரலிங்கம் (செல்வம்ஸ் பற்றிக்கடை) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| த. தேனுகா | சுவிஸ்லாந் | 5000. 00 |
| பொ. சிவயோகநாதன் | கோண்டாவில் | 1000. 00 |
| ப. தயாரூபன் | நீர்வேலி | 1500. 00 |
| கி. துஷ்யந்தி | ஆவரங்கால் | 20000. 00 |
| க. பேரானந்தன் | உரும்பராய் | 1000. 00 |
| சு. அருள்குமரன் | இளவாலை | 5000. 00 |
| அ. சிவதாஸ் | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு கணேசதாஸ் குடும்பம் | மல்லாகம் | 2000. 00 |
| வடிவேலு ஜெயானந்தன், வடிவேலு சிவக்கொழுந்து | டென்மார்க் (அச்சுவேலி) | 10000. 00 |

(தொடரும்...

***துணிச்சலோடு உழைப்பவனுக்குத்தான் வெற்றி அருகில் வந்து அமரும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சது பொடி செய்த அதிதீரா

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

எமது சைவ சமய முறைப்படி முதற்பூசை பெறுபவர் விநாயகப் பெருமான். எக்கருமமும் விநாயகப் பெருமானை நினைந்து வழிபடாமல் தொடங்கினால் அக்கருமம் நிறைவேறாது.

ஒரு சமயம் கமலாட்சன், வித்யுன்மாலி, தாரகாட்சன் என மூன்று அசுர வேந்தர்கள் எண்ணற்ற வரங்கள் பெற்று கொடுங்கோல் ஆட்சி செய்தனர். இவர்களுக்கு இரும்பு, வெள்ளி, தங்கம் போன்ற மூன்று உலோகங்களால் கோட்டைகள் அமைந்திருந்தது. அந்தக் கோட்டையில் இருந்து பறந்து வந்து முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் சொல்லொணாக் கொடுமைகள் செய்தார்கள். இந்திராதி இமையார்கள் எல்லையில்லாத தொல்லை அடைந்தார்கள்.

வானவர்கள், முனிவர்கள், தேவர்கள் ஒன்று திரண்டு திருக்கயிலாய மலை சென்றார்கள். அவ்விடம் திருநந்தி தேவரிடம் அனுமதி பெற்றுத் திருக்கோயிலுக்குச் சென்று கோடி சூரியப் பிரகாசமாக விளங்கும் இறைவனைக் கண்டு வணங்கி நின்றார்கள்.

“தேவ, தேவா! மகாதேவா! திரிபுரத்து அவுணர்களால் நாங்கள் பல காலமாகத் துன்பப்படுகின்றோம். அவர்களை அழித்து அருள்புரிய வேண்டும் எனக்கூறி முறையிட்டனர்.

சிவபெருமான் அவர்கட்கு தண்ணருள் புரிந்து திரிபுராதிகளை நாம் அழித்துத் தருவதாகக்கூறி கருணைபுரிந்தார். தேவர்கள் உளம் மகிழ்ந்து சிவபெருமானுக்கு ஒரு தேர் அமைக்க வேண்டும் என எண்ணினார்கள். விநாயகப் பெருமானை வணங்கி ஆசீர்வாதம்பெற்று இக் கருமத்தில் ஈடுபடவேண்டும் என்பதை மறந்துவிட்டார்கள். அமரர்கள் ஆனைமுகப் பெருமானை நினைக்காமல் தேர் அமைக்கலானார்கள்.

சூரியனும் சந்திரனும் தேர் உருளைகளாகவும் அதல, விதல, சுதல, ராசதல, மகாதல, தராதல, பாதாள என்ற கீழ் ஏழு உலகங்களும் தேரின் கீழ்த் தட்டுக்களாகவும், பூலோகம், புவர்லோகம், சுவலோகம், கனலோகம், மகாலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்ற ஏழு உலகங்களும் மேல் தட்டுக்களாகவும், ஆஷ்டகுல மலைகள் விதானமாகவும், மேகங்கள் தேர்ச்சீலைகளாகவும் அஷ்டதிக்குப் பாலகர்கள் எட்டுத் தூண்களாகவும் சக்கரவாளகிரி அச்சாகவும், முப்பத்து முக்கோடி தேவர்களும் பதுமைகளாகவும், நான்கு வேதங்கள் குதிரை களாகவும், மேருகிரி வில்லாகவும், வாசுகி நாணாகவும், திருமால் பாணமாகவும், அக்கினி அதன் வாயாகவும், வாயு அதன் குதையாகவும், பிரமதேவன் தேர்ப்பாகனாகவும், இவ்வாறு மகத்தானதொரு தேரை அமைத்தார்கள்.

சிவபெருமானிடம் சென்று “ஐயனே! தேர் ஆயத்தமாக உள்ளது. வந்து தேர் ஏறி திரிபுரத்தை அழித்தருளும்” என்று வேண்டி நின்றார்கள்.

சிவமூர்த்தி அத்தேரின்மீது ஆரோகணித்தார். விநாயகப்பெருமானை நினையாது தேர் அமைத்த காரணத்தால் விநாயகப் பெருமான் அங்கு வந்து தேரின் அச்சை மடமடவென்று முறித்துப் பொடி செய்தருளினார்.

*வாய்ப்பே ஒரு மனிதனை உயர்வடைய வைக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே தேவர்கள் தமது பிழையை உணர்ந்து விநாயகப் பெருமானுடைய திருவுருவை அமைத்து அபிஷேகம் புரிந்து நறுமலர்கள் சாத்தி, சிரசில் குட்டிக்கொண்டு கண்ணீர் ததும்பி, மொழி தளதளத்துத் துதித்தனர்.

சங்கரன் மகனே போற்றி! சங்கடம் தீர்ப்பாய் போற்றி!
திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சுடர் மணியே போற்றி!
துங்க நான் மறைது திக்கும் துதிக்கைவா ரணமே போற்றி!
ஐங்கரத்தண்ணல் போற்றி! ஆனைமா முகனே போற்றி!

என்று துதி செய்தார்கள். விநாயகப் பெருமான் திருவருள் புரிந்து பழையபடி அச்சுப் பொருந்தியது.

நாம் எல்லோரும் துணை செல்வதால்தானே சிவபெருமான் திரிபுரத்தை அழிக்கப் போகின்றார் என்று எண்ணித் தற்பெருமை உற்றார்கள் தேவர்கள். சிவபெருமான் எண்ணுகின்ற எண்ணத்துள் இருப்பவரல்லவா? தேவர்களின் எண்ணத்தை உணர்ந்தார்.

நமக்குத் தேர் வேண்டுமா? பாணம் வேண்டுமா? என்று சிந்தித்து சிரித்து புன்னகை புரிந்தருளினார். சிரிப்பிலிருந்து ஒரு நெருப்புப்பொறி பறந்து திரிபுரம் எரிந்தது.

ஆதலால் விநாயகப் பெருமானை காதலால் வணங்கி எந்தக் கருமத்தையும் தொடங்க வேண்டும்.

விக்கினங்களை நீக்குவதாலேயே விக்கினேசுவரர், விக்கினராஜா என்னும் திருநாமங்கள் பெற்றிருக்கிறார் பிள்ளையார்.

"முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா"

-திருப்புகழ்.

## தெய்வங்களுக்கு வாழைப்பழம் படைப்பது ஏன்?

எல்லா தெய்வங்களுக்கும் தவறாமல் வாழைப்பழம் படைக்கிறார்கள். மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால் வாழைப்பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும்கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியைக் காட்டுகிறது. எனது இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு! என வேண்டவே நாம் நமது கடவுளுக்கு வாழைப்பழம் படைக்கிறோம். அதுபோல தேங்காய்க்கும் அந்த குணம் உண்டு. அது மட்டுமல்ல தேங்காய், வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை. மாம்பழத்தை நாம் சாப்பிட்டுவிட்டு, கொட்டையைப் போட்டால் அந்த விதையிலிருந்து மாமரம் உருவாகிறது. ஆனால், தேங்காயை சாப்பிட்டுவிட்டு ஓட்டைப் போட்டால் அது முளைக்காது. முழுத் தேங்காயிலிருந்துதான் தென்னைமரம் முளைக்கும். அதுபோல், வாழை மரத்திலிருந்துதான் வாழைக்கன்று வரும். பழம் கொட்டை என்பது கிடையாது. அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள். நாமும் இந்த மரபினைப் பின்பற்றி வருகிறோம். இதுவே இந்து தர்மத்தின் தனிச்சிறப்பு.

*ஒழுக்கம் உனக்கு நீயே போடும் நல்ல பாதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலட்சுமி விரதமும் விரத விழுமியங்களும்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

காலங்காலமாக மனித இனம் இவ்வுலகில் தோன்றிய காலந்தொடக்கம் மனிதர்களை வாழ்வித்து வந்தவை எவை? நீண்டகால மனித வரலாற்றிலே, எத்தனையோ நெருக்கடிகள், எண்ணிலடங்காத துன்பங்கள், வேதனைகள்; பல்வேறு அனர்த்தங்கள், பகைமைகள், நோய்கள், வறுமை, அவலங்கள் போன்றவை மனிதகுலத்தைத் தாக்கி வந்துள்ளன. இயற்கைச் சக்திகள், இயற்கைக்கு அப்பாற்பட்ட விசைகள் ஆகியவற்றின் தாக்கங்களும் மனிதர்களைப் பாதித்து வந்துள்ளன. இவை யாவற்றிலிருந்தும் மனிதகுலம் மீட்கப்பட்டு, அது அழிந்துபோகாமல் காப்பாற்றப்பட்டது எவ்வாறு? எதனால்? இவ் வினாக்களுக்கு விடை காண, நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். பண்டுதொட்டு மக்கள் கொண்டிருந்த இறை நம்பிக்கை, தெய்வபக்தி, வழிபாடுகள்; சமய ஆசாரங்கள் பேணப்பட்டு வந்தமை அவை யாவற்றினாலும் மக்கள் பெற்றுக் கொண்ட ஆத்மீக பலம் என்பனவே மக்களைக் காப்பாற்றி வந்தன; இன்னமும் வருகின்றன.

கடவுள் உண்டு என்றிருந்தனர். அவனே இவ்வுலகத்தின் கர்த்தா என்று ஐயம் திரிபு அற நம்பினர். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று ஏற்றுக்கொண்டனர். இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் ஏற்றனர். அதனால் படைப்புக்கள் அனைத்தும் உடன்பிறப்புக்கள் என்ற உணர்வு ஏற்படலாயிற்று. மனிதர் மனிதப்பண்புகளையும், ஆத்மீகப் பண்புகளையும் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு இந்த அடிப்படை நம்பிக்கையே வழிவகுத்தது. நம்பினார் கெடுவதில்லை என்பது உறுதி. இறைநம்பிக்கை இருக்கும் வரை மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள். தெய்வநம்பிக்கையை இழந்து, சமய ஆசாரங்களைக் கைவிட்டு, எல்லாம் மனிதனால் முடியும் என்று எண்ணி மனிதர்களில் மாத்திரம் நம்பிக்கையை வைக்கும் போதுதான் இன்னல்கள் துரத்தக் காத்திருக்கின்றன. எனவே மனிதர்கள் துன்பங்களிலிருந்து மீட்சியடைய இறைநம்பிக்கை கொண்டு இறைவனைப் பக்தியால் வழிபாடு செய்தலே உரிய வழியாகும். இறைவனிடம் பூரண சரணாகதி அடைதல் வேண்டும்.

“என் செயலால் ஆவது ஒன்றில்லை,
இனித் தெய்வமே, உன் செயலே என உணரப் பெற்றேன்”

என மனம், மொழி, செயல் ஆகியவற்றால் எம்மை இறைவனிடம் முழுமையாக ஒப்படைக்க வேண்டும்.

“உன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே” என்று அப்பர் சுவாமிகள் இறைவனுக்கு விண்ணப்பம் செய்வது வீணுக்கு அன்று என்பது உணரப்படவேண்டியது.

எமது அடியார்கள், அருளாளர்கள், அநுபூதிமான்கள் ஆகியோர், இறைவனை வழிபாடு செய்து அவனருள் பெறுவதற்கு எமக்குக் காட்டுகின்ற மிக இலகுவான வழிமுறை பக்தி நெறியாகும்.

*எதிர்ப்புகள் இல்லாத இடத்தில் வெற்றிகள் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி நெறியில் விரதங்கள் மிக உன்னத இடத்தை வகிக்கின்றன. விரதங்கள் உலகத்தவர்களுக்கும், தவம் துறவிகளுக்கும் மிகுந்த ஆற்றலையும், ஆத்மீக பலத்தையும் அளிக்கவல்லன. இறைவனுக்கும் மனிதர்களுக்கும் உள்ள இடைத்தூரத்தைக் குறுக்கி, பிணைப்பினை ஏற்படுத்துகின்றன. விரத காலங்களில் இறைவனைப் பற்றிய சிந்தனை, பேச்சு, செயல் என்பவையே விரதத்தை அனுட்டிப்பவர்கள் மேற்கொள்வர்.

சக்தி விரதங்களாக விளங்குபவை நவராத்திரி விரதங்கள், வரலட்சுமி விரதம் என்பவையாகும். ஆடிப்பூரம், மாசிமகம், பங்குனித் திங்கள் மற்றும் மகோற்சவம் நடைபெறும் தினங்களிலும் தேவியை நோக்கி விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. இன்று வரலட்சுமி விரதம் பற்றிச் சிந்திப்போம். ஆவணி மாதம் விரதங்கள் நிறைந்த மாதம். ஆவணியில் வருகின்ற பூரணைத் தினத்திற்கு முன்னால் வருகின்ற வெள்ளிக்கிழமை வரலட்சுமி நோன்பிற்குரிய புண்ணிய தினம் ஆகும். இத்தினத்தில் ஏதாவது தவிர்க்கமுடியாத காரணத்தினால் வரலட்சுமி பூசையை நிகழ்த்த முடியாதவர்களும், விரதம் அனுட்டிக்க இயலாதவர்களும் அடுத்து வருகின்ற வெள்ளிக்கிழமையன்று இவற்றை நிறைவுசெய்து கொள்கின்றனர்.

மகாலட்சுமியை நோக்கிப் பூசிக்கும் வைபவம் வரலட்சுமி நோன்பு ஆகும். மகாலட்சுமி யின் கடாட்சம் குடும்ப சுகத்தை அருளுகின்றது. குடும்பத்தில் கணவன், பிள்ளைகள், சுற்றத்தார் ஏனையோரின் நல்வாழ்வுவேண்டி வரலட்சுமியைப் பூசித்து, பெண்களால் அகப்புறத் தூய்மையுட னும், பக்தி சிரத்தையுடனும் மேற்கொள்ளப்படுவது வரலட்சுமி நோன்பு. இந்நோன்பு சுமங்கலிப் பெண்களுக்கு விசேடமாக இருக்கின்றபோதும், ஏனையோராலும் அனுட்டிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

சுமங்கலிப் பெண்கள் அவர்களது திருமணத்தை அடுத்து வருகின்ற வரலட்சுமி விரதத்திலிருந்து ஆண்டுதோறும் தொடர்ந்து இவ்விரதத்தை விதிப்படி மேற்கொண்டு வருதலால் குடும்பசுகம் உண்டாகும் என நூல்கள் கூறுகின்றன. வரலட்சுமி நோன்பு மிகப் புனிதமான, நுணுக்கமாகப் பிடிக்கவேண்டிய நோன்பு உரிய நியமங்களில் குறைகள் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளுதல் அவசியம். கணவன் உள்ளிட்ட வீட்டிலுள்ளோர் இவ் விரதத்தை அனுட்டிக்கும் குடும்பப்பெண்களுக்கு ஒத்தாசை வழங்கிப் புனிதம் பேணுவது மிகவும் வேண்டற்பாலது. இவ் விரதம் குடும்பத்திலுள்ள அனைவரினதும் சேம நலத்திற்காகவே அனுட்டிக்கப்படுகிறது என்பதை குடும்ப உறுப்பினர்கள் உணர்வார்களேயானால் எவ்வித இடையூறுகளும் ஏற்படாது. இந்த வகையில், நோன்பு காலங்களில் வீடு சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கவும்; வீட்டிலுள்ளோர் மற்ச மாமிசம் புசியாமலும், மது அருந்தாமலும், வேறு விலக்கப்பட்ட கருமங்களில் ஈடுபாடு கொள்ளாமலும் இருந்து தூய்மை பேணவும், ஒத்துழைப்பு நல்கவேண்டும். விரத விதிகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு இது அவசியம்.

வீட்டின் உட்புறச் சுவரில், வெள்ளைப் பின்னணியில், காவியினால் வரலட்சுமி தேவியின் உருவப்படத்தை வரைந்து, அழகு, அலங்காரம் செய்து வழிபாடு செய்யும் முறை யும் காணப்படுகிறது. பூரண கும்பத்தில் ஆவாகனம் செய்து வரலட்சுமியை எழுந்தருளிவித்து, பஞ்சலோகம், தங்கம் அல்லது வெள்ளியினால் உருவாக்கப்பட்ட தேவியின் திருமுகத்தை ஆங்கு பொருத்தி அலங்கரித்து, அழகு செய்து வழிபடும் முறையும் உள்ளது. அழகு,

*மற்றவர்களைவிட அறிவாளியாக இருக்க முயற்சி செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரம், தூய்மை என்பன வரலட்சுமி வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. வழிபாட்டு மண்டபம் வாழைக்குட்டிகள், மாவிலை தோரணங்களால் அலங்கரிக் கப்படுகின்றது. தாழை மலர்கொண்டு திருமகளுக்கு அர்ச்சனை செய்யப்படுகிறது. இவை அனைத்தும் பொருள் பொதிந்த செயற்பாடுகள். வாழையடி வாழையாகத் தங்கள் குலம் தழைக்கவேண்டியும்; மடல் விரிந்த தாழைமலர் நெடுந்தூரத்திற்கு அதன் மணம் பரப்புவது போன்று தங்கள் குடும்ப கௌரவம், புகழ், பெருமை என்பன எங்கும் பரவவேண்டியும் வரலட்சுமி விரதம் அனுட்டிக்கப்படுவதை இவை எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன.

வரலட்சுமி பூசையில் "அம்மனை அழைத்தல்" என்னும் நிகழ்ச்சி மிக அற்புதமாக இருக்கும். அம்மனை வரவேற்பதாகவும்; அணி, அலங்காரம், அழகு நிறைந்த ஆராதனைகள் நிறைந்ததாகவும் விளங்குகின்றது. சுமங்கலிகள் அம்பாள் ஆலயங்களுக்குச் சென்று ஒன்பது முடிச்சுக்கள் போட்ட நூல்கயிற்றினை அணிவித்து விரதம் அனுட்டிப்பதும் உண்டு. இந்த ஒன்பது முடிச்சுக்கள் ஒன்பது சக்திகளைக் குறிக்கின்றன. அட்டலட்சுமி, வரலட்சுமி உள்ளிட்ட ஒன்பது சக்திகளின் அளப்பரிய அருளைக் குறிப்பனவாகவும் முடிச்சுக்கள் அமைகின்றன.

வரலட்சுமி விரதம் அனுட்டிப்போர் முதல்நாள் ஒரு பொழுது உணவுண்டு, விரத தினத்தன்று உணவருந்தாது உபவாசம் இருந்து, மாலையில் அம்பாளின் பூசை, வீதிஉலா ஆகியவற்றில் பங்குகொண்டு, இயன்ற தான தருமங்களைச் செய்து விரதம் அனுட்டிப்பர். வரலட்சுமி பூசையின்போது கொழுக்கட்டை, இட்லி, பழவகைகள் என்பன நைவேத்தியமாகப் படைக்கப்படுகின்றன. பூசையின் பின்னர் இப்பிரசாதங்களை உட்கொண்டு உபவாசத்தை முடித்துக்கொள்வர்.

"கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. விரதங்கள் அனுட்டிப்பதனால் பெற்றுக்கொள்ளப் படுகின்ற ஆன்ம பலத்தினால் உயிர் பறிக்கும் கூற்றுவனாகிய இயமனையும் எதிர்த்து நின்று வெற்றிகொள்ள முடியும் என்பது நூல்கள் கூறும் முடிந்த முடிவு. வரலட்சுமி விரதத்தினால் குடும்பத்தில் ஏற்படுகின்ற நன்மைகள் பல. செல்வம், கல்வி, தைரியம், குழந்தைப்பேறு, மாங்கல்யப் பேறு, உத்தியோக உயர்வு, செய்தொழில் விருத்தி, நீண்ட ஆயுள், நோய்நீங்கல் போன்ற நன்மைகளைப் பெற்று வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த இவ்விரதம் துணைநிற்கின்றது.

குடும்ப வாழ்க்கை வளம்பெற கடவுள் வழிபாடு, விரதம் அனுட்டித்தல், பிறர் நலம் பேணல், தான தருமம் செய்தல் அவசியமாகின்றன. இவற்றையெல்லாம் முன்னின்று மேற்கொள் பவர்கள் குடும்பத் தலைவிகள். இத்தகைய சிறப்புக்களை கொண்டும்; கணவன், குழந்தைகள், சுற்றத்தவர் ஆகியோரைப் பேணியும் வருகின்ற இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை என்பர் பெரியோர். மங்கலம் என்பது மனைமாட்சி. மனையை மாட்சிமைப்படுத்துபவள்தான் மனைவி. எனவேதான், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்கிறார் வள்ளுவர். இத்தகைய பெண்களே குடும்பத்தினதும், சமூகத்தினதும் கண்கள் ஆவர். கண்கள் நம்மை சரியான பாதையில் செல்ல உதவுகின்றன. அதனால் எம்மைப் பாதுகாக்கின்றன. பெண்ணும் தன்

*நம்பிக்கையற்றவன் எந்த உலகிலும் இன்பம் காணமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தைப் பாதுகாப்பவள்; இன்னல்கள் வருமுன் உரைக்கும் வல்லமையும்; துன்பங்கள் வருமுன் அதனை உணர்ந்து குடும்பத்தைப் பாதுகாக்கும் ஆற்றலும் கொண்டவர்கள் குடும்பப் பெண்கள். இவர்களுக்கு எவ்வாறு இத்தகைய ஆற்றல்களும் வல்லமைகளும் கிடைக்கின்றன? கடவுள் வழிபாடு, தெய்வ நம்பிக்கை, விரதம் அனுட்டித்தல், குடும்பக் கடமைகளில் தவறாமை, தியாக உணர்வு என்பன குடும்பப் பெண்களுக்கு இத்தகைய ஆற்றல்களை அளிக்கின்றன.

விரதங்களை அனுட்டிக்கும் முறைகள், மேற்கொள்ளவேண்டியவர்களின் தகுதிகள், ஏனைய விதிகள் என்பனவும்; விரதங்களின் மகிமைகள், நோற்போர் அடையும் பயன்கள் என்பனவும் பல்வேறு புராணங்களிலும் கூறப்பட்டுள்ளன. விரதங்களை விளையாட்டாக மேற் கொள்ளலாகாது. விதிப்படி, முறைப்படி அனுட்டிப்பதாலேயே உரிய பலன்கள் கிட்டும். விரத முறைகள் தெரியாதவர்கள் குருமார்களையோ, சைவப் பெரியார்களையோ அணுகி, அவர்களிடம் அவைபற்றிக் கேட்டுத் தெளிந்து விரதங்களை மேற்கொள்ளுதல் முறையாகும்.

விரதங்கள் அனுட்டிப்பதால் இக பர சுகம் கிடைக்கின்றது. எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடும் இயல்புடையன. மனிதர்களும் இம்மை இன்பத்தையும், மறுமையில் மோட்ச இன்பத்தையும் அடைவதற்கே விரதங்களை மேற்கொள்ளுகின்றனர்.

இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் மக்களின் ஆற்றாமை நிலை நன்கு உணரப்பட்டு வருகிறது. விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியினால் மனிதர்களின் வாழ்க்கை வசதி, நவீன நாகரிகப் பாங்குகள் பல்கிப் பெருகின என்பதை மறுப்பதற்கில்லை. அதேவேளை மனிதர்களின் வாழ்வில் இடம்பெறவேண்டிய அமைதி, சாந்தி, சமாதானம், குடும்பப் பிணைப்பு, மானுடநேயம், மகிழ்ச்சி என்பன மனிதர்களிடம் விடைபெற்று, விட்டுவிலகி, வெகுதூரம் சென்றுகொண்டிருக்கின்றன என்ற உண்மையையும் மறைப்பதற்கில்லை. கையிற் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை என்பதுபோல நமது சமுதாயங்களில் இன்றுள்ள அவலநிலை இதற்குச் சான்று பகர்கின்றது. இந்த அவல நிலையினின்றும் மனித குலம் காப்பாற்றப்படவேண்டுமாகில் எல்லாம் வல்ல இறைவன்மீது நம்பிக்கைகொண்டு இறைவழிபாடு செய்தலைத்தவிர வேறு மார்க்கம் தென்படவில்லை.

"மாங்கல்ய பலம்"; "பிள்ளைகள், குடும்பத்தவர்களின் ஆயுட்பலம்" ஆகியவற்றின் உறுதிப்பாடு இன்றைய சூழ்நிலையில் முன்னரைக் காட்டிலும் பெரிதும் உணரப்படுகிறது. கணவன், குடும்பத்தவர் ஆகியோர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புதிய சூழல்களில், அவலங்களின் மத்தியில், சிரமத்துடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களைக் காப்பாற்றுதலும், இழந்துவிடாத நிலையை நிச்சயப்படுத்திக் கொள்ளலும் குடும்பப் பெண்களின் பொறுப்பும் தேவையுமாக உள்ளது. குடும்பங்களில் ஏற்படும் உட்பூசல்கள், உடைவுகள், உட்புற வெளிப்புற சீரழிவுகள் என்பவற்றிற்கும் நிவாரணம் தேடவேண்டியுள்ளது. திருமணங்கள் நிகழ்த்துதல், வேலை வாய்ப்புக்கள், என்பனவும் இன்றைய பிரச்சினைகள் ஆக உள்ளன. இந்த நிலையில் தெய்வத்தின் துணையையும், அருளையும் நாடுவதே ஒரே வழியாகும்.

குடும்ப சுகம், மகிழ்ச்சி வேண்டி நோற்கப்படுகின்ற வரலட்சுமி விரதம் இன்றைய காலகட்டத்தில் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை உணர்ந்து, வரலட்சுமி வழிபாடு செய்து உய்வுபெறுவோமாக.

*நிதானமாக ஆலோசி ஆனால் துணிவுடன் செயற்படு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்கள் வரிசையில் கண்ணப்ப நாயனார்

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

உயர்ந்த மலைகளின் சிறப்பால் பல்வகை மலைபடு திரவியங்களையும் கொண்டது பொத்தப்பி என்னும் நாடு. இந்த நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரில் பல்வகை மலைபடு திரவியங்களும் தேடுவாரற்றுக் கிடக்கும். இங்கு வாழ்ந்த குறவர் இன மக்கள் வேட்டை யாடுதலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டனர். இவர்கள் தமது ஊரின் சிறப்பால் வளமான வாழ்வில் உலா வந்தனர். இவர்களுள் நாகன் என்பவன் சிறந்த பலசாலியாகவும் வில், வாள் பயிற்சியின் சிறப்புடன் வேடர் மரபின் தலைவனாக அமைந்தான். இவன் தத்தை என்னும் மனைவியுடன் பல சீரும்பெற்று வாழ்ந்தான். இத் தம்பதியினர் மழலைச்செல்வம் வேண்டி அயலிலுள்ள முருகன் கோயிலில் பிரார்த்தித்தனர். முருகனுக்கு உகந்தவைகளான பல மயில்களையும் சேவல்களையும் காணிக்கையாக்கினர். முருகன் அருள்பாலித்தார்.

இத் தம்பதியினருக்கு ஒரு வருடத்தின் பின் ஆண் குழந்தையொன்று பிறந்தது. நாகன் தன் பிள்ளையைத் தூக்கினான். அப்பிள்ளை திடமான உடலமைப்புடன் இருந்ததால் “திண்ணன்” எனப் பெயரிட்டு சிறப்பான அனுசரனையுடன் பேணி வளர்த்தனர். திண்ணன் 16 வயதில் தகப்பனிலும் கூடிய பலசாலியாகவும் சிறந்த உடலமைப்புடனும் திகழ்ந்தான். அவர்களின் பாரம்பரிய முறைப்படி 16 வயதில் முதன்முதலில் சிறந்த குருமூலம் வில் ஏந்தும் மரபும் இருந்தது.

நாகன் தமது வாழ்வாதாரச் சிறப்பினால் திண்ணன் வில் ஏந்தும் விழாவைப் பெருவிழாவாக ஏற்பாடு செய்தான். இந்த ஏற்பாட்டின்படி அனைத்துத் தமதின மக்களையும் அழைத்து ஏழு நாட்கள் விருந்துபசாரஞ் செய்ய முற்பட்டான். வில் ஏந்தும் நாளுக்கு ஆறு நாட்களின் முன்பே யாவருக்கும் மிகச் சிறந்த முறையில் யாவரும் வியக்கும்வண்ணம் விருந்தும் ஏற்பாடானது. வேடுவர் தலைவன் அழைத்தால் யாவரும் தவறாது வருவர் என்பதை அறிந்ததால் உணவுக்காக மலை நெல்லரிசி, புல்லரிசி, தினையரிசி, மூங்கில் அரிசி ஆகியவற்றை வெவ்வேறாக அவித்து, நிலத்தில் பாய் விரித்து அதன்மேல் இலைகள் பரவி வெவ்வேறாகக் குவித்திருப்பர். கிழங்கு வகைகள், இறைச்சி வகைகளையும் வெவ்வேறாக வேக வைத்துக் குவித்திருப்பர். தேன், மது ஆகியவற்றையும் குடங்களில் நிறைத்திருப்பர். விருந்தினர்கள் தமது தேவைக்கேற்ப யாவற்றையும் எடுத்து உண்பர். பலர் இறைச்சியைத் தேனில் கலந்துண்டும் மதுவையும் தாராளமாக அருந்தியும் ஆங்காங்கே மயங்கி வீழ்ந்திருப்பர். இவ்வாறு ஆறு நாட்களும் சிறப்படையும்.

ஏழாம் நாள் வில்லேந்தும் புனித நாளாகும். திண்ணன் தமது குல மரபுப்படி புனித நீராட்டப்பெற்றுச் சமயச் சடங்குகளையும் நிறைவு செய்ததும் வில்லேந்தும் இடத்தை நாடுவார்.

*ஒருவன் சிரிக்கும்போதெல்லாம் மரணம் தள்ளிப் போடப்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடுவர் தலைவனுக்கான நெடியதும் சிவதனுசைப்போன்ற வில், புலி நரம்புகளால் இணைக்கப்பட்டிருக்கும். விற்பயிற்சி செய்விக்கும் வில்லாசிரியரைப் பணிந்து மரியாதை செய்ததும் வில்லாசிரியரின் நெறிப்படி திண்ணன் வில்லில் நாண் பூட்டிப் பயிற்சியை ஆரம்பித்தான். வருகை தந்த யாவரும் குதூகலித்து மகிழ்ந்தனர்.

திண்ணன் குருவிடம் விற்பயிற்சியுடன் வேல் எறிதல், வாட் பயிற்சி யாவற்றையும் குறுகிய காலத்தில் பயின்று தமது நிலைமையை நிலைநாட்டினான். நாகன் தமது முதுமையைக் கருதித் தமது வேடுவர் தலைமைப் பதவியைத் திண்ணருக்கு வழங்கிக் கன்னி வேட்டைக்குச் செல்ல ஏற்பாடு செய்தான். நாணன், காடன் ஆகிய இரு திறமைசாலிகளைப் பாதுகாப்பாளராக வும் பிற உதவியாளர் இசைக்கருவி மூலம் குரல் எழுப்பும் கூட்டத்தினர் முன் செல்வர். இவர்களால் மறைவிலுள்ள மிருகங்கள் வெளியே வந்தோடத் திண்ணன் அவற்றைக் கொன் றொழித்தார். இவ்வாறு வேட்டை தொடரும்போது கரிய பெரியதோர் பன்றி திண்ணனின் எதிரே வந்தது.

திண்ணன் அதனைத் துரத்திக்கொண்டு வெகுதூரம் செல்லும்போது நாணன், காடன் இருவர் மட்டும் உடன் சென்றனர். உடன் வந்த யாவரும் வழிதடுமாறிச் சென்றனர். நெடுந்தூரமோடிய பன்றி திண்ணனின் அம்பினால் தாக்கப்பட்டு ஓடமுடியாது திருக்காளத்தி மலையடிவாரத்தில் ஒரு மரநிழலில் வீழ்ந்தது. திண்ணன் தனது உடைவாளால் அப்பன்றியைக் கொன்றார்.

மூவரும் நெடுந்தூரம் ஓடி அலைந்த அசதியுடன் பசியும் தாகமும் ஏற்பட்டது. கொன்ற பன்றியை உணவாக்க முன்வந்தனர். தாகத்திற்கான நீர் தேடியபோது வேடுவரால் குடுமித்தேவர் என அழைக்கப்படும் காளத்தி அப்பரின் கோயிலின் அண்மையில் ஓடிய பொன்முதலி ஆற்றையும் கண்டனர். தாம் கொன்ற பன்றியில் வெட்டிய இறைச்சியைக் காடன் நெருப்பில் வாட்டும் பணியை ஏற்றான்.

திண்ணன் முற்பிறவியிற் செய்த தவப்பயனாக இப்பிறவியில் வேடனாகப் பிறந்தாலும் காளத்தி நாதரால் ஈர்க்கப்பெற்றார். நாணனின் வழிகாட்டலில் தாம் வணங்கும் குடுமித்தேவர் என அறிந்ததும் ஓடோடிச் சென்று இலிங்க திருமேனியை இறுகத் தழுவினார். திண்ணன் ஆவல் மேலீட்டினால் உச்சிமோந்து அணைத்தவாறு "இவர் அடியேனுக்கு இன்று அகப்பட்டார் அச்சோ" என்று கூறி மகிழ்ந்தார். இன்ப அன்பினால் மயங்கி வீழ்ந்தார். சிறிது நேரத்தில் எழுந்தவர் இலிங்கத்தின்மீது சிவாச்சாரியாரால் பூசிக்கப்பட்ட பூக்களைக் கண்டதும் இவருக்குப் பூக்களால் அர்ச்சிப்பதும் பிடிக்கும் என்று கூறினார். இவருக்குப் பசிக்கும் என்று இரை தேடிவர முன்வந்தார்.

தாம் வேட்டையாடிய பன்றி இறைச்சியைப் பதம் பண்ணியதும் அதில் நல்லதை எடுத்து ருசிபார்த்து மிகுதியை ஒரு தொன்னையில் வைத்தார். நறுமலர்களை எடுத்துத் தனது குடுமியில் சொருகி வைத்தார். அபிஷேகத்திற்கான நீரைத் தனது வாயில் எடுத்துக் கொண்டார். எம்பெருமானை அணுகியதும் ஏற்கெனவே அர்ச்சகரால் சாத்தப்பட்ட பூக்களைத் தமது செருப்பணிந்த காலால் தட்டிவிட்டார். வாயில் இருந்த நீரைக் கொப்பளித்து அபிஷேகஞ்

*உழைப்பிற்கு தகுந்த பலன் ஒருநாள் கட்டாயம் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். தாம் சுவை பார்த்த இறைச்சியைப் போதியளவு குடுமித்தேவருக்குப் படைத்தார். குடுமியிலிருந்த நறுமலர்களையும் சாத்தினார். திண்ணனின் பக்திப்பூசை நிறைவானது.

குடுமித்தேவர் இந்த மலையில் தனிமையில் வீற்றிருக்கிறார். இவருக்கு மிருகங்களால் ஏதும் தீங்கு நேரிடுமோ என்றெண்ணி அம்பு பூட்டிய வில்லுடன் நாற்புறமும் சுற்றி வந்தார். இரவு முழுவதும் உறங்காது இறைவனைப் பக்தி மேலீட்டினால் பாதுகாக்கும் பணியில் இன்புற்றார். விடிந்ததும் குடுமித்தேவருக்குப் பசிக்குமே, உணவு தேடி வந்து பூசை செய்ய வேண்டுமென்று காட்டுக்குச் சென்றார்.

காளத்தி நாதருக்கு நித்திய பூசை செய்யும் ஆதி சைவரான சிவகோசரியார் வழமைபோல வரும்போது பொன்முதலியாற்றிலிருந்து குடத்தில் நீரும் நறுமலர்களும் எடுத்துவந்து ஆலயத்தை அடைந்தார். ஆலயத்தில் மாமிசத் துண்டுகள் ஆங்காங்கே சிதறிக்கிடந்ததைக் கண்டு அருவருப்புடன் நோக்கினார். யாரோ வேடுவர் செய்த வேலையெனக் கூறி யாவற்றையும் சுத்தஞ் செய்தார். பின்னர் நீரினால் பிராயச்சித்தஞ் செய்தபின் தமது பூசைகளை முடித்ததும் சென்றுவிட்டார்.

சற்று நேரத்தில் திண்ணனார் வழமைபோல நெருப்பில் வாட்டி ருசி பார்த்த இறைச்சியைக் கையிலும் குடுமியில் சொருகிய நறுமலர்களும் வாய் நிறைந்த அபிஷேக நீருடனும் குடுமித்தேவரை நாடினார். சிவகோசரியால் சாத்தப்பட்ட பூக்களைத் தமது செருப்பணிந்த காலால் அகற்றி, வாய் நீரால் கொப்பளித்து அபிஷேகஞ் செய்தார். எச்சில்படுத்திய இறைச்சி யைப் படைத்தார். குடுமியில் சொருகிய பூக்களைக் குடுமித் தேவரின் மீது சாத்தினார். அத் துடன் திண்ணனின் பக்திப்பூசை நிறைவடைந்தது. அன்று முழுவதும் தொடர்ந்து இரவு முடியும்வரை காவற்பணி ஏற்றார். விடிந்ததும் காடேகினார்.

இவ்வாறு சிவகோசரியாரின் ஆசார பூசையும் திண்ணனின் பக்தியான வேட்டுவப் பூசையும் ஐந்து நாட்கள் தொடர்ந்தன. ஐந்தாம் நாள் சிவகோசரியார் தமது ஆசார பூசை யில் தவறுகள் ஏற்பட்டதா? அல்லது வேடரின் மாமிசப் படையலை ஏன் தடுக்கவில்லையென வருந்தி இறைவனிடம் விண்ணப்பித்தார். அன்றிரவு சிவகோசரியாரின் கனவிற் தோன்றிய காளத்திநாதர் "என்மீது அதிபக்தி கொண்ட வேடனான திண்ணன் அவனது பக்தியை நாளை காலை உனது பூசை முடிந்ததும் மறைந்திருந்து அறிவாயாக" என்று தெரிவித்து மறைந்தருளி னார். மறுநாள் காலைப்பூசை முடிந்ததும் சிவகோசரியார் மறைந்திருந்தார்.

ஆறாம் நாள் திண்ணன் குடுமித்தேவருக்குரிய பக்திப்பூசைப் பணிக்காக ஆவலுடன் வருகிறார். இன்று குடுமித்தேவருக்கு ஏதும் நடந்திருக்குமோ என்ற பதட்டத்துடன் விரைவாக வந்தார். அச்சமயம் குடுமித்தேவரின் (முகலிங்கம்) வலது கண்ணிலிருந்து இரத்தம் வடிந்ததைக் கண்டார். கையிலிருந்த வில், நிவேதனப் பொருளான இறைச்சி, வாயிலிருந்த நீர் யாவும் ஆங்காங்கே சிதறின. திண்ணன் அறிவு மயங்கியவாறு நிலத்தில் விழுந்து புரண்டார். எழுந்ததும் தான் இல்லாத சமயம் யாரோ தீங்கு செய்தனரென்றெண்ணி வில்லில் அம்பு பூட்டி நாற்புறமும் சுற்றிவந்தார்.

வேடுவர்கள் தம்மிடையே இவ்வாறு இரத்தக்காயம் வந்தால் மூலிகை மருத்துவம் செய்யும் மரபால் உரிய மூலிகை இலைச்சாற்றை வைத்து இரத்தம் வடியும் கண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். பயனில்லாததால் இரத்தத்திற்கு இரத்தம் என்று கூறித் தனது வலது கண்ணைக் கூரிய அம்பினால் தோண்டி ஊறுபட்ட கண்மீது அப்பினார். இரத்தம் நின்றது. இதன் மகிழ் வால் துள்ளிக்குதித்துப் பெருமகிழ்வடைந்தார். இறைவன் தனது பக்தனின் தூய பக்தியை மேலும் சோதிக்க எண்ணி இடது கண்ணிலிருந்து இரத்தம் வடியச் செய்தார்.

குடுமித்தேவர் மீது அதிகூடிய பக்திகொண்ட திண்ணன் இடது கண்ணிலும் இரத்தம் வடிவதைக் கண்டதும் "ஆ நான் கெட்டேன், இறைவனுக்கே தீங்கு வந்தால் நான் பொறுக்க மாட்டேன், என்னிடம் இன்னொரு கண் இருக்கிறதே அதையும் அப்பலாமே" என்று சிந்தித்தார். தனது இரண்டாவது கண்ணையும் தோண்டினால் இறைவனின் ஊறுபட்ட கண்ணை அடை யாளம் காணமுடியாதே என உணர்ந்தார். தமது செருப்பணிந்த காலை ஊறுபட்ட கண்ணில் வைத்தார். கூரிய அம்பெடுத்துத் தமது இடக்கண்ணைத் தோண்ட முற்பட்டார். பக்தனின் செயலைக் கண்டதும் இலிங்கத் திருமேனியிலிருந்து கையொன்று நீள வந்து அம்பேந்திய கண்ணப்பரின் கையைப் பிடித்துக்கொண்டு "நில்லு கண்ணப்ப" என்று மூன்றுமுறை திருவாய் மலர்ந்து தடுத்தாட்கொண்டார்.

காளத்திநாதரின் அறிவிப்பின் பேரில் சகல நிகழ்வுகளையும் நேரிற் கண்ட சிவகோசரியார் இறையருளை வியந்தார். படிப்பறிவற்ற வேடன் தமது பக்தி மேலீட்டினால் செய்த வேட்டுவப் பக்திமயமான பூசைசையும் கண்டு மகிழ்ந்தார். இறைவன் தமது பக்தனின் பக்தியையும் ஊனமடைந்த கண்ணில் தனது கண்ணை அப்பியதையும் மறு கண்ணின் ஊனத்திற்காகத் தமது மறுகண்ணைத் தோண்ட முற்பட்டதையும் இறைவன் ஆட்கொண்டு பெருமைப்படுத்தியதை யும் உணர்ந்து இறைவனின் திருவிளையாடலை வியந்தார்.

கண்ணப்பர் இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்டதும் தேவர்கள் பூமாரி பொழிந்தனர். ஆறே ஆறு நாளில் வேடனான கண்ணப்பர் செய்த பக்திப்பூசையுடன் பக்தி மேலீட்டினால் தமது இரு கண்களையும் காணிக்கை செய்ய எண்ணியதையும் யாவரும் போற்றினர். சித்தராகி தவக்கோலச் சுற்றுலாவில் கோவணாண்டியாகக் காளத்திநாதரைத் தரிசிக்க வந்த பட்டினத்தார் கண்ணப்பரின் அற்புதப் பணியை வியந்தவர், தாம் முன் சிந்தித்த சிறுத்தொண்டர், திருநீலகண்டர் ஆகியோரின் அற்புதச் செயல்களுடன் கண்ணப்ப நாயனாரின் பக்தியையும் சேர்த்துப்பாடிய பாடலை அறிவோம்.

வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன் தொண்டு செய்து
நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லன் நானிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தியப்பருக்கே"

கண்ணப்பர் செய்த தூய பக்தி சைவ உலகில் மேலோங்கியது. இவ்வரிய செயலால் அறுபத்து மூவரான நாயன்மாரில் ஒருவராக அமைத்துப் பெருமைப்படுத்தப்பட்டார். மனித வாழ்வில் உயிர் மேலானது. இந்த உயிர் கூடிய உடம்பில் கண் அதிசிறந்தது. தமது இரு கண்களையும் தோண்டி இறைவனுக்கு அர்ப்பணிக்க முன்வந்த பக்திக்கு நிகர் ஏதுமில்லை.

"அன்பே சிவம்"

*வாழ்க்கையில் முன்னேறும்போதுதான் உழைப்பின் உன்னதம் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் குட்டித்திருவாசகம் ஓர் ஒப்பீடு

**– திரு முருகவே பரமநாதன்** அவர்கள் –

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்ற வேண்டும்
திறமான புலமை யெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

-பாரதியார் 22. தமிழ் 3.

மிகத் தொன்மையான காலத்தில் இருந்து செய்யுள்நடை இலக்கியங்கள் தமிழில் எழுந்துள்ளன. வடமொழியில் இருந்து தென்மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நைடதத்தில் இருந்து பகவத்கீதை வெண்பா வரை பல துறை இலக்கியங்கள் மொழிமாற்றம் செய்யப்பட்டுள் ளன. திருக்குறள் எண்பத்துநான்கு மொழிகளில் வந்துள்ளது. திருவாசகம் போப் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டமை திருவாசகத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது. திருவிளை யாடற்புராணம் இருவராற் பாடப்பட்டது. பாரதமும் தமிழில் மூவரால் இயற்றப்பட்டது. இராமா யணம், பெரியபுராணம் போன்ற கனத்த இலக்கியங்களிலே இடைச் செருகலும் நிகழ்ந்திருப்பதாக ஆய்வாளர் கூறா நிற்பர். இப்பாணியிலே தேவார வரிசையில் பிற்சேர்க்கையாய் வெள்ளியம்பலத் தம்பிரானின் ஆக்கம் இடம்பெற்றிருக்கிறது. இந்தப் பாதையினின்று சற்று விலகி அதிவீரராம பாண்டியனை ஈர்த்த திருவாசகத்தை உள்வாங்கி ஓர் சிற்றிலக்கியம் தந்தார். அதுவே திருக் கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, இ∴து திருவாசகத்தின் ஒரு நிழல் எனலாம். திருவாசகப் பாவம் இதிலே நிறைந்து வழிகின்றமையால்- இப்பிரபந்தத்தைக் குட்டித் திருவாசகமெனப் போற்றினர். இதில் ஆழங்காற்பட்டோர்- இவ்விரு பாட்டருமைகளை ஒப்பீடு செய்வதே இவ்வாக்கத்தின் இலக்கு.

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச் செவ்வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய் நீ மாளா வாழ்கின்றாயே. -திருவாசகம் - சதகம். 40.

வேனிலான்- மன்மதன், கணை- பாணம், பானல்- குவளை

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும் அதுதனை நினையாதே
மான் நிலாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்
தேன் நிலாவிய திருவருள் புரிந்தவென் சிவநகர் புகப்போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும் உண்டு உடுத் திருந்தேன்.

-திருவாசகம் - சதகம் 40.

*வெற்றி பெறும் ஒவ்வொரு செயலும் ஒரு குறிக்கோளாக ஆகிவிடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேனில் வேள்- மன்மதன், கணை- அம்பு, கிழித்திட- பிளந்திட, படிறு- வஞ்சனை, ஓம்புதல்- பாதுகாத்தல்

வேனிற் சிலைவேள் தொடுகணைக்கும்
விளங்கும் மகளிர் உளம் கவற்றும்
பானற் கொடிய விழிவ லைக்கும்
பற்றாய் வருந்தி அனுதினமும்
ஈனத் துயரக் கடல் அழுந்தும்
எனையும் பொருளா அடிமை கொண்ட
ஞானத் துருவே! தமிழ்க் கருவை
நம்பா! பொதுவில் நடித்தோனே.

-குட்டித்திருவாசகம் 4.

கோதாவரிக்கு உவமானமாகச் சான்றோர் கவியைச் சொன்னவர் கம்பநாடன். கவிகளின் தன்மையை உவமானமாக அமைத்து ஓர் கவிஞன்

கல்லார் கவிபோற் கலங்கிக்
கலைமாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பல வான்துறை
தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருளாழ்ந்து
தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள
இறுத்த தன்றே.

எனப் பாடியிருக்கிறார். தேயத் தெல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ளும் கவிதைகள் மக்கள் கவிதைகளே. எல்லாரும் பயன் கொளவும், பயன் தரவும் வேண்டும். பாட்டுக்களின் பாகம் ஐந்து வகைப்படும் என உ.வே. சுவாமிநாதையர் எழுதியுள்ளார். நாளி கேர பாகம், இக்ஷு பாகம், கதலீ பாகம், திராட்சாபாகம், ஜீரபாகம் என்பன அவை. நாளிகேர பாகம் என்பது தேங்காயைப் போன்றது. தேங்காயில் மட்டையை உரிக்க வேண்டும். பின் ஓட்டை உடைத்து, சிரட்டையினின்றும் தேங்காயைத் துருவி எடுத்து, பிழிந்து வெல்லம் சேர்த்து உண்ண வேண்டும். இவ்வகையைச் சேர்ந்த கடினமான பாடல்கள் உண்டு. இட்சு பாகம் என்பது கரும்பைப் போன்றது. கரும்பைச் சிரமப்பட்டுப் பிழிந்து- கருப்பஞ்சாற்றை உண்ண வேண்டும். இதைப் போன்றவை சில பாடல்கள். கதலீ பாகம் என்பது வாழைப்பழத் தோலை உரித்து அப்படியே உண்ணலாம். சிறிது சிரமத்துடன் பாடலை அனுபவிக்கலாம். திராட்சா பாகம் முந்திரிகைப் பழம் போன்றது. எவ்வித முயற்சியும் இல்லாமல் உண்பதுபோல அமைந்த பாடல்கள். சுவைஞனைத்தமாகவே விழுங்கி விடுகின்றன. எளிதில் விளங்குவன க்ஷீரபாகம். முன்னையவற்றிலும் மிக இலகுவாக விளங்கக்கூடியன பால் குழந்தைகட்கும், வளர்ந்தோர்க்கும்- ஏன் எல்லார்க்குமே உண்ணக் கூடியனவாகவும் உடலுக்கும் உயிருக்கும் போசாக்குடையதாயும் சுவை குன்றாததாகவும் அமைவதுபோல இருப்பன க்ஷீரபாகம் எனப்படும். (க்ஷீரம்- பால்)

*பொறுமையைக் கடைப்பிடிப்பவன் எல்லாவற்றையும் அடைவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துள்ள கவிதைகளாய்- பொழுது போக்காய் இல்லாமல் வாழ்வை வளமாக்குவதற்காக அமைந்தவை. இவை காலத்தையும் கடந்து நிற்பன. இரசிகனை அறியாமல் அவனோடு பேசுகின்றன. மனித பக்குவங்களைக் கட்டியெழுப்பும் பாங்கிலமைந்த பக்தி இலக்கிய வரிசையிற் திருவாசகம் மிக உன்னதமானது.

திருவாசகம் தந்தவர் மாணிக்கவாசகர். அவரை அறிவாற் சிவன், திருவாதவூர்ச் செழுமறை முனிவர் என அழைப்பர். மேலாந்தரமுள்ள நூல்களுட் திருவாசகமும் ஒன்று. அவரது திருவாயென்னும் மலர்வாய்ப் பிறந்த தேனே திருவாசகம். இது ஒரே தேன்மயம். சிவமயமும்கூட. கல்நெஞ்சரையும் உருக்கும். கனிவிலும், மதுரிப்பிலும் மேலானது. சிவனது கருணைக்கு நம்மை ஆளாக்கும் பான்மையில் திருவாசகத்துக்கு நிகர் திருவாசகமே. கூத்தப்பிரான் ஏடும் எழுத்தாணியும் தாங்கி எழுதப்பெற்ற பக்திக்கனல் பறக்கும் திவ்வியம் பழுத்த தோத்திரம் திருவாசகம். இதைக் கருத்திற்கொண்டு “கடையூழி வருந்தனிமை கழிக்க அன்றோ, அம்பலத்துள் உடையாருள் வாசகத்தின் ஒரு பிரதி கருதினதே” என்று பாடினார் மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை. திருவாதவூரர் பாண்டிய மன்னனின் முதலமைச்சராய் இருந்தவர். இத்திருநூலைத் தேன் எனப்போற்றினர் ஆன்றோர். ஞானமாவது வீடு பயக்கும் உணர்வு- திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்.

சொல்லாத வர்களையும் நெஞ்சுருகச் சொல்லு வைக்கும்
நில்லா தவர்களையும் செந்நெறியில் நிற்க வைக்கும்
பொல்லா தவர்களையும் போக்கறுத்து வாழவைக்கும்
வல்லாளன் றன்தெய்வ வாய்மலர்த்தேன் வாசகமே.

கல்லைப் பிசைந்து கனியாக்கிச் சைவரசம்
புல்லைப் பிழிந்து புதுமை செயும், பொல்லாத
தொல்லைக் கடற்பிறவித் துன்பகல ஈதென்ன
மல்லற் கரைகாட்டும் வான்சோதி வாசகமே.

-நவநீத கிருஷ்ண பாரதியார்.

ஆளுடையடிகளின் அடிச்சுவட்டிலே- அவர்களின் பாணியிலே உருவான பக்தி இலக்கியம் குட்டித்திருவாசகம் இதைப் பாடியவரும் ஒரு பாண்டிய மன்னரே. இவர் வடித்த இன்னோர் இலக்கியம் காசிக்காண்டம். வாதவூரர் முதலமைச்சர் அதிவீரராம பாண்டியன் மன்னர். இவர் வட தென் மொழிகளைத் துறைபோகக் கற்றவர். பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். மணிமொழியாரின் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு என்கிறார்கள். புவிமன்னராயும், கவி அரசராயும் துலங்கிய பாண்டியன் அருளிய நூல்கள் மூன்று.

1. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி (குட்டித்திருவாசகம்)
2. திருக்கருவை வெண்பா அந்தாதி
3. திருக்கருவை கலித்துறை அந்தாதி

காப்புச் செய்யுளுடன் 101 பாடல்கள் உள்ளன. இவ்வரசன் தொழுநோயினாற் பீடிக்கப்பட்டபோது இப்பாடல்கள் நெஞ்சுருகப் பாடப்பெற்றன. முற்றும் நைச் சிவபாவத்தில் வெளியான இப்பிரபந்தத்தைப் பாடி நோயினின்று விடுதலை பெற்றான் மன்னன்.

*உன்னையன்றி உனக்கு தலைவன் வேறு யாரும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துவித யாப்பமைதியில், பத்து, பத்துக்களாலியன்ற புனித பனுவல் இது. திருவாசகச் சாயல் நிறைந்த இப்பாவடிவங்கள் உருக்கமும், பொருட்சுவை, சொற்சுவையும் நிறைந்தன. சைவசித்தாந்தக் கருத்துடையன. செந்தமிழ் முனிவரின் திருவாசகத்தையும், குட்டித் திருவாசகத்தையும் ஒப்பீடு செய்யும்போது- திருவாசக அம்சங்கள் நிறைந்து வழியும் பனுவல் இது. கரிவலம் வந்த நல்லூரே திருக்கருவைப்பதி. இஃது ஓர் சிவன் கோயில். திருப்பெருந் துறையிலே ஆட்கொள்ளப்பட்ட வாதவூரர் சிவனையே போற்றினார். இவரும் சிவனையே போற்றிப் பாடியுள்ளார் மனம் நைந்துருகிய பாவம் அங்கே சொற்கள்தோறும் சொட்டக் காணலாம். இத்தலத்தின் மூலவர் பால்வண்ணன். முகலிங்கர், களாவீசர் எனவும் அழைக்கப் படுகிறார். களாதலவிருட்சம். பெருந்துறையில் குருந்தம் தல விருட்சம். அன்னையின் திருநாமம் ஒப்பனை. அலங்கார சொரூபிணியான உமாதேவியார் ஒப்பனையெனப் பெயர் கொண்டார்.

இலிங்கம் மூவகைப்படும்.

1. வியக்த லிங்கம்
2. அவ்வியக்த லிங்கம்
3. வியக்தா அவ்வியக்த லிங்கம்.

முகமும் தோளும் காட்சி தருபவர் முகலிங்கர். இதுவே வியக்த அவ்வியக்த லிங்கம் இது படிகலிங்கமாதலின் பால்வண்ணன், பால்வண்ணர், பால்வண்ணநாதர் எனப் பெயர் பெற்றார். மணிமொழியாரும் "பால் கொள் வெண்ணீற்றாய்" எனப் பாடியருளினார். (அருட்பத்து 1) இப்பிரபந்த அமைவு திருவாசகப் போக்கில் அமைந்திருப்பதை பின்வரும் பாட்டு வரிகள்மூலம் காணலாம்.

**திருவாசகம்**

பண்ணினோர் மொழியாள் பங்க
பஞ்சின் மெல்லடியாள் பங்க
பழுதில் தொல் புகழாள் பங்க
அருட்பத்து 5.6.10.

செந்நாவலர் பரசும்
புகழ் திருப்பெருந்துறையாய்
உயிருண்ணிப்பத்து 1.

பாடிமால் புகழும் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
வாழாப்பத்து 3.

**குட்டித்திருவாசகம்**

விழியினால் உருக ஒருபுற
மளித்த விபலனே
பாட்டு 13.

உரகாபரணத் திரு மார்பும்
உமை ஒப்பனையாள் இடம் புறமும்
பாட்டு 9.

தமிழ் நாவலரான் மலிவிக்கும்
மூர்த்தி கருவை.
கலித்துறை அந்தாதி 9.

பாடினேன் புகழ் பங்கயச்
சேவடி சூடினேன்
பாட்டு 3.

*நீங்கள் நிறுத்தாத வரை எவ்வளவு மெதுவாகச் சென்றாலும் பரவாயில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோர் நோக்கி உமையாள்
பங்கா, மையிலங்கு கண்ணி
பங்கனே, மானோர் நோக்கி
உமைபங்கா. சதகம் 85,92, 55.

எள்ளு மெண் ணெயும் போல்
நின்ற எந்தையே
சதகம் 46

தழலது கண்ட மெழுகது போல
போற்றித் திருஅகவல் வரி 60
அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல்
சேர்ந்த மெழு கே அன்னார்
சதகம் 88.

வேனில் வேர் மலர்க்
கணைக்கும், வெண்ணகைச்
செவ்வாய்க்கரிய பானலார்
கண்ணியர்க்கும் பதைத்
துருகும் பாழ் நெஞ்சே.
சதகம் 19.

பாதாளம் ஏழினிற்கும்
சொற்கழிவு பாதமலர்
திருவெம்பாவை 10

பாதம் இரண்டும் வினவிற்
பாதாளம் ஏழினுக்கும்
அப்பால் - சோதி மணிமுடி
சொல்லில் சொல்லிறந்த
நின்ற தொன்மை
குயிற்பத்து 1

தூண்டா விளக்கின்
சுடரணையாய்
பிரார்த்தனைப் பத்து 4.

கொம்மை வெம்முலைக் கொடி
யொடும் இனிது வீற்றிருக்க
பாட்டு 82

எவன் என்னுயிர்க் குயிராய்
எள்ளு மெண் ணெயும்
போலெங்கணும்
பாட்டு 16.

உலையிடு மெழுகெனக் கண்ணில்
நீர்வார பாட்டு 18.

வேனில் சிலை வேண்தொடு
கணைக்கும் விளங்கும் மகளிர்
உளம் கவற்றும் பானற் கொடிய
விழிவலைக்கும் பற்றாய் வருந்தி
பாட்டு 4.

முடி கடந்தது ககனகோ
ளகை நெடுமுகட்டினும்
பாட்டு 2.

தூண்டல் செய்யா மணி
விளக்கை, தொழில் மூன்
றியற்றும் தொல் லோனை
பாட்டு 7.

தூண்டரு சுடரேகளா
நிழலமர்ந்த சோதியே
பாட்டு 12.

*நீ நடந்துபோக பாதை இல்லையே என்று கவலைப்படாதே. நீ நடந்தால் அதுவே பாதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறை மலர்க் குருந்தமேவிய
சீர் ஆதியே, செழுமலர்க்
குருந்த மேவியசீர் அருத்தனே
அருட்பத்து 1,9.

இடரே அகலக் களாநீழல
இருந்த கோவே 3
கருவை களாநீழல் அமர்ந்த
புண்ணியன் 17.
திருக்களா நீழல அமர்ந்
தருள் புரிந்த காரணனே 16.

சீதவார் புனல் நிலவிய வயல்சூழ்
திருப் பெருந்துறை சிவனே
செத்திலாப்பத்து 8.

வணங்கத்தலை வைத்து வார்
கழல் வாய் வாழ்த்த வைத்து
திருப்பூவல்லி 7

வணங் கெனத்தலை அளித்தனை,
நின்புகழ் வாழ்த்தென நாத் தந்தாய்,
இணங்கெனத் திருக்கூட்டமும்
காட்டிலை பாட்டு 28.

இரு வாசகங்களையும் ஒப்பிடுகையில் சிறப்பம்சங்கள் பொதுவாய் வரக் காணலாம். சைவ சமயிகளாகிய நாம் குட்டித்திருவாசகத்தைப் படித்துப் பாராயணம் செய்வோமாக.

சிறக்கத்தக்கது கருவையான் திருவடிநேயம்
மறக்கத் தக்கது மற்றுள சமயத்தின் மயக்கம்
துறக்கத்தக்க(து) இவ்வுடம்பை யான் என்று தொடர்பு
பிறக்கத்தக்கது சிவானந்த வாரியின் பெருக்கே.

-பாட்டு 89.

---

நம: பார்வதீ பதயே என்பது ஏன்? விளக்குகிறார் காஞ்சிப்பெரியவர். சிவன் கோயில்களில் "நம பார்வதீபதயே" என ஒருவர் சொல்ல, "ஹரஹர மஹாதேவா" என்று மற்றவர்கள் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். இதன் பொருள் என்ன? பார்வதிதேவிக்கு பதியாக (கணவராக) இருப்பவர் பரமசிவன். "பார்வதீபதி" என்கிற அவரே உலகுக்கெல்லாம் தகப்பனார். பெரிய தெய்வமானதால் அவருக்கு "மகாதேவன்" என்றும் பெயர்.

பூலோகத்தில் ஒரு குழந்தை அவரை "ஹர ஹர" என்று சொல்லி ஓயாமல் வழிபட்டு வந்தது. அந்தக் குழந்தைக்கு "ஞானசம்பந்தர்" என்று பெயர். இந்தக் குழந்தை ஊர் ஊராக "ஹர ஹர" நாமத்தைச் சொல்லிக்கொண்டு போவதைப் பார்த்து, எல்லா ஜனங்களும் "அரோஹரா" என்று கோஷம் போட்டார்கள். அந்தக் கோஷம் கேட்டதும், உலகத்தில் இருந்த கெட்டதெல்லாம் உடனடியாகக் காணாமல் ஓடிப்போய்விட்டது. வையத்தில் அதாவது உலகத்திலே கஷ்டமே இல்லாமல் போனது. "என்றைக்கும் இதே மாதிரி ஹர ஹர சப்தம் எழுப்பிக்கொண்டே இருக்கட்டும். அதனால், உலகத்தின் கஷ்டங்கள் எல்லாம் போகட்டும்" என்று சம்பந்தக் குழந்தை தேவாரம் பாடிற்று. "அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே" அரன் என்றால் ஹரன். ஹரன் என்றால் சிவன். இப்போதுதான் (பெரியவர்) "நம: பார்வதீபதயே!" என்று சொல்வேன். உடனே நீங்கள் அம்மையான பார்வதியையும் அவர் பதியான நம் அப்பா பரமசிவனையும் நினைத்துக்கொண்டு அன்றைக்கு அந்தக் குழந்தை சொன்ன மாதிரியே பக்தியோடு "ஹர ஹர மகாதேவா" என்று சொல்லவேண்டும். நம: பார்வதீ பதயே!.... ஒன்னும் கேட்கல... மனசுக்குள்ளேயே சொல்லிட்டேன் என சொல்லாதீங்க. வெட்கப்படாம நல்லா வாய்விட்டு சொல்லனும்... இப்ப மறுபடியும் நம: பார்வதீ பதயே! "ஹர ஹர மகாதேவா" ம்.... இப்படி வாய்விட்டு சொல்லி எல்லோரும் ஷேமமாய் இருக்கனும்.

*அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே. கோபத்தை வெளிப்படுத்துமுன் யோசிக்க மறந்துவிடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 63

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 ஓரிருநாள் ஒவ்வாமை ஒருபோதும் நோய்தராது
ஒவ்வாமை மேலோங்க தீராத நோய்பிடிக்கும்
தீராத நோய்தீர்க்கத் தேசமெலாம் அலைவதிலும்
ஒவ்வாமை தனை நாங்கள் ஒதுக்கிடலே நன்றாகும்.

02 நன்மைதனைப் பெற்றோரின் நாவிலே இருந்துநீர்
நன்றிவரும் என்றெண்ணி நாளெல்லாம் காத்திராதீர்
தன்படைப்பு ஒன்றிற்கு நீர்செய்த உதவிக்காய்
என்றென்றும் இறையுமைக்கு நன்றிசொல்வான் நன்மை செய்வீர்.

03 ஏணியென உங்களையே பாவித்து உயர்ந்தவர்கள்
கேணியிலே தள்ளுமாப்போல் கதைசொல்வார் கலங்காதீர்
ஆணிவேரை அறுத்துவிட்டே உச்சியேறும் மானிடர்கள்
நாணிப்பின் உமைப்பணியும் நாளும்வரும் காத்திருப்பீர்.

04 துக்கத்தில் துவழ்கின்ற காலத்தில் உங்களுக்கு
பக்கத் துணையிருந்தோர் தகுதியினைக் குடையாதீர்
எக்காலம் சென்றாலும் எப்படித்தான் வாழ்ந்தாலும்
முக்காலத் தெய்வமவர் முறைகாத்து உயர்ந்திடுவீர்.

05 திக்குத் திசைதெரியா திருந்ததொரு நேரத்தில்
தக்கதிசை காட்டியோரைத் தரணியிலே மறவாதீர்
வக்கற்றோர் வகையற்றோர் என்றவரை ஒதுக்கிவிட்டால்
துக்கத்தால் அவர்போடும் சாபத்தால் நீர் துவழ்வீர்.

06 அடுப்புக்குள் நெருப்பதுவும் எடுத்தவுடன் எரியாது
அடுத்தடுத்து ஊதிடத்தான் மிடுக்கோடு எரிதல்போல்
எடுத்தவுடன் வெற்றிகளும் எளிதினிலே கிட்டாது
தொடுத்துப்பல தோல்விவரும் தொடர்ந்தாலே வெற்றிவரும்.

*வருந்தாதே எதை இழந்தாலும். அது இன்னொரு வடிவில் வந்து சேரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 நிறைவேற்ற முடியாத கோரிக்கை ஒன்றதனை
இறையோடு பிறரிடமும் கேட்டவரைப் பகைக்காதீர்
குறைகூறும் உம்செயலால் நிறைகுடங்கள் தளம்பிப்பின்
நிறைவேற்ற முடிந்தவையும் முடியாமல் போய்விடலாம்.

08 எல்லோற்கும் இறைவனால் உணர்த்தப்படும் கல்வியுண்டு
இடையில் நாம் கற்பதெல்லாம் மேலதிகம் மட்டுமே
மேலதிகம் தனைப்பற்றி இறைகல்வி தனைவிடுப்போர்
இறைகல்வி மட்டுமுளோர் தன்னிலும் தாழ்ந்தவரே!

09 வாழ்வோற்கு வாழ்வதுவே வாழ்க்கையது ஆனாலும்
மாண்டபின்பும் வாழ்க்கையுண்டு என்பதையும் மறவாதீர்
தனக்கென்று வாழ்வதெல்லாம் தன்வாழ்வு சிறப்பதற்காம்
பிறர்க்கென்று வாழ்வதுவே மாண்ட பின்பும் வாழ்வதற்காம்.

10 நோய் உடலில் வந்துவிட்டால் இனங்கண்டு அதையறிந்து
வாய்த்ததோர் மருந்துண்டு மாற்றியதை வாழ்தல்போல்
பகையொன்றும் வந்துவிட்டால் காரணத்தைக் கண்டறிந்து
வகைசெய்வீர் பகைதீர அதிகலாபம் நட்பிலுண்டாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*உன் பலத்தோடு மோதுபவன் எதிரி. உன் பலவீனத்தோடு மோதுபவன் துரோகி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமிச போசனம் தெய்வத்தன்மையாகிய இரக்கத்தை கெடுப்பது மட்டுமல்லாது தொற்றா நோய்களுக்கும் காரணமாகின்றது.

– எஸ். ஜடா அவர்கள் –

மாமிசம் தூல சரீரத்திற்கு வியாதியை வருவிப்பதுபோல, சூக்கும சரீரத்துக்கும் வியாதியை வருவிக்கின்றது. அது கடும் உற்சாகத்தையும் மிருகத் தன்மையையும் உண்டாக்கின்றது. இவற்றால் கோபம், காமம், செருக்கு, மதுபானப்பிரியம் முதலிய தீய குணங்களுண்டாகின்றன. கோபம், காமம், செருக்கு தாவர போசனக்காரருக்கும் உண்டுதானே என்று எதிர் நியாயஞ் சொல்லலாம். ஆயினும் தாவரபோசனக்காரன் மாமிச போசனம் செய்தால் அவனுக்கு இந்த தீயகுணங்கள் அதிகப்படும். மாமிசம் உண்போன் அதைவிட்டால் இந்தத் தீயகுணங்கள் குறையும்.

குடிவகை பருகுவோர் பெரும்பாலும் மாமிசம் புசிக்கிறவர்களாய் இருக்கின்றார்கள்; மாமிசம் வெறித்தன்மை உள்ளதாகிய மதுபானத்திலே அது பிரியமுண்டாக்கின்றது. தம்முயிரைப் போலப் பிற உயிர்களை நினைக்கும் உத்தமர்கள் ஒரு காலத்தும் பிற உயிரைக் கொன்று மாமிசம் புசியார்கள். ஒரு மீன் அல்லது கோழியைக் கொல்லும்போது அது எவ்வளவு பாடு படுகின்றது. மாமிசத்தைப் புசிப்பவனுக்கு அது சற்றே சுவையாக இருக்கும். இந்த அற்பச் சுவைக்காக ஒரு உயிரை இவ்வளவாக வதைப்பவனிடத்து நல்ல குணமென்பது கடுகளவாவது இருக்குமா? இவனுக்கு நீதி ஏது? இரக்கம் ஏது?

எல்லா உயிர்களும் கடவுளுடைய குழந்தைகள். ஆதலால் நாம் கடவுளுக்காக எல்லா உயிர்களிடத்தும் அன்பு வைத்து, அவைகளுக்கு நன்மை செய்யவேண்டும். நன்மை செய்யாமல் விட்டாலும் தீமை செய்யாமலாவது இருத்தல் வேண்டும். ஒரு வைத்தியன் வியாதியை நீக்குவதற்காக (இன்னது செய்யலாம், இன்னது செய்யக்கூடாதென்று) விதிகள் சொல்லுவதுபோல், வைத்தியநாதராகிய இறைவன் நம்முடைய மும்மலங்களாகிய வியாதியை நீக்குவதற்காக விதிகள் செய்திருக்கின்றார்.

அம்மா வெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்ட கன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றாற் புசித்தவர்கென் சொல்லுவதே.

-பதி, பசு, பாச விளக்கம்.

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தன்னுயிர் நீக்கும் வினை"

-திருக்குறள்.

*நீ ஏழையாகப் பிறப்பது உன் தவறில்லை. நீ ஏழையாகவே சாவதுதான் உன் தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே.

-தாயுமானவர்.

மேலும் தாவர போசனத்தைக் காட்டிலும் மாமிச போசனத்தில் அதிகளவு கொழுப்பு இருப்பதால் உடலுக்கு தீமையே. உதாரணத்து தொற்றா நோய்களான நீரிழிவு, மாரடைப்பு, கொலஸ்ரோல், சிறுநீர் பிரச்சினை போன்ற நோய்களுக்கு நாம் உட்படவேண்டி வரும்.

ஒக்ஸ்போட் சர்வ கலாசாலை எம்.ஏ. பட்டம்பெற்ற ஜோன்வூட் என்பவர் "என்னுடைய அனுபவத்திலிருந்தும் அநேக வருஷகாலமாக வைத்தியசாலையில் அவதானித்த காரியங்களில் இருந்தும் நான் சொல்லக்கூடியது என்னவென்றால் மாமிசபோசனம் அவசியமற்ற உணவு இயற்கைக்கு மாறானது. சௌக்கியத்துக்குப் பழுதானது.

மாமிசம் புசிக்கின்ற ஒருவன் மாமிசத்தை விடுவானாயின் இன்னும் பத்து வருஷங் கூடுதலாகச் சீவிப்பான். அவனுக்கு வரக்கூடிய வியாதிகளும் குறைந்துபோகும்.

கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாதஞான தத்துவ முணர்த்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய்நர கடைவனற்றே.

-பதி, பசு, பாச விளக்கம்.

---

## வடக்கு திசையில் தலை வைத்து தூங்கக்கூடாது. ஏன்?

உலகம் அறிந்தது அறிவியல். நமக்கு இந்துமத பொக்கிஷம் பூமியானது சூரியனிடமிருந்து வெளிவரும் சக்திமூலம் காந்தசக்தியை அடைகிறது. பூமி மேற்கிலிருந்து கிழக்காக சுற்றும்போது, அதனால் உண்டாகின்ற மின்சார சக்தியானது, பூமியில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கிறது. அந்த சக்தி செல்லும் திசைக்கு வடக்கில் பூமியின் வடதுருவம் இருப்பதால் அது காந்தத்தின் வட துருவமாகிறது. இப்படி பூமியின் தென் துருவம் காந்தத்தின் தென் துருவமாகிறது. இதனால் ஒரு காந்தமாய் மாறுகிறது பூமி. இதனை நிருபிக்க ஒரு காந்த ஊசியைத் தொங்கவிட்டால் அது வடக்கு - தெற்காக நிற்கும். இதை இயற்பியல் மின்காந்தப்புலம், காந்த திசைகளின் ஈர்ப்பு மற்றும் எதிர்ப்புப் பற்றி விளக்குகின்றன. காந்த ஊசி வடக்குத் தெற்காக நிற்பதற்குக் காரணம், காந்தத்தின் வடக்கு பூமியின் தென் துருவத்தாலும், தெற்கு பூமியின் வடக்கு துருவத்தினாலும் இழுக்கப்படுதல் இதேதான். மனித உடலில் காந்த சக்தி உள்ளது. உடலில் இரத்தத்தில் முக்கிய பாகம் இரும்புச் சத்தாகும். மேலும் பகலில் உட்காரும்போதும், நடக்கும்போதும் அடையும் காந்த சக்தி உடலின் பல பாகங்களிலும் பரந்து விளங்கும். தூங்கும்போது தெற்கே தலை வைத்துக்கொண்டால், நமது வடதுருவமும் பூமியின் தென்துருவமும் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டு, உடலின் காந்த சக்தி கெடாமல் இருக்கும். ஆனால் வடக்கில் தலைவைத்துக்கொண்டால், பூமியின் வடதுருவம் நமது வடதுருவத்துடன் சேராது ஒன்றையொன்று தாக்கி, தொடர்ச்சியாக உடலுக்கு காந்த சக்தியை அளிக்காது. உடலுடைய இயற்கையான நிலை மாறுபடும். எனவேதான், வடக்குத் திசையில் தலை வைத்துத் தூங்கக்கூடாது. நம் முன்னோர்கள் சொல்வது பழைய பஞ்சாங்கம் என்று ஒதுக்கினால் பாதிக்கப்படுவது நாம்தான். இது ஓலைச்சுவடி என்ற நூலில் அழகாக விஞ்ஞானபூர்வமாக போட்டுள்ளனர். இது மட்டுமன்று நாம் அன்றாடம் செய்யவேண்டியவை செய்யக்கூடாதவைகள் அனைத்தும் அதில் அடங்கும்.

*தனக்கு நிகழும்வரை எல்லாமே வேடிக்கைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

(தொடர்ச்சி...

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

பிறப்பிலேயே கலந்து உயிரை ஆட்டிவைக்கின்ற கர்ம வினைப்பலனை பெரியோர்கள் சஞ்சிதம், பிராப்தம், ஆகாமியம் என்று மூன்றாகப் பிரித்து சொல்வார்கள். சஞ்சிதம் என்பது முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயன்கள் சேர்ந்து தங்கியுள்ள குவியல். பிராப்தம் என்பது சஞ்சிதக் குவியலிலிருந்து இப்பிறவியில் அனுபவிப்பதற்கு என்று முனைந்து நிற்கும் வினைப்பகுதி. ஆகாமியம் என்பது நிகழ்காலத்தில் செய்கின்ற வினையாகும். அதாவது பிராப்த வினையை நுகரும்போது நமக்கு ஏற்படுகின்ற விருப்பு வெறுப்புக்களால் புதிதாக நாம் செய்கின்ற "நிகழ்வினை" என்று ஞானிகள் இந்த மூன்றுவித வினைகளிலிருந்தும் விடுபட்டு ஜீவன் முக்தர்கள் ஆனதைப்பற்றி திருமூலர் பாடுகிறார்.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்

(தன்னை- தனது ஆன்ம சொரூபத்தை அறிந்திடும் - ஞானத்தால் உணர்ந்து தெளிகின்ற தத்துவ ஞானிகள் - மெய்யை அறிந்த பேரறிவாளர்கள்)

முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்

(முன்னை வினையின் முடிச்சை - அனாதி காலமாக தங்களை தொடர்ந்து பிணித்து வந்துள்ள சஞ்சித மூட்டையை அவிழ்ப்பார்கள் - அவிழ்த்து விடுவார்கள் அதாவது அந்த மூட்டையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வார்கள்.)

பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்

(பின்னை வினை - இனி தாம் செய்ய நேரிடும் கர்மங்களாகிய ஆகாமிய வினையை, பிடித்துப் பிசைவார்கள் அவை சேர்ந்து உயிருக்கு புதிய பாரமாகாமல் தேய்த்து அழித்துவிடுவார்கள்.)

சஞ்சித வினையின் முடிச்சை அவிழ்ப்பதோடு ஆகாமிய வினையையும் அழித்து விடுகின்றார்கள் ஆன்ம சொரூபம் கண்ட ஞானிகள். இது எப்படி அவர்களுக்கு சாத்தியமாகிறது என்றால்

சென்னியில் வைத்த சிவனரு ளாலே

(சென்னியில் வைத்த - தலையிலே சூடிக்கொண்ட சிவனருளாலே - மங்கள மூர்த்தியின் திருவருளாலே)

முனிவருடைய உபதேசம் என்னவெனில் இறைவனுடைய திருவருளை நாடிப்பெற்று ஆன்ம ஞானத்தைத் தேடிக்கொண்டால் முன்னைவினை பின்னை வினை எல்லா வினைகளும் நீங்கிவிடும் என்பதே. அனைத்துக்கும் வழி ஆன்ம ஞானமாகும். அதற்கு வழி இறைவனின் அருளை நாடுதல்.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்

*பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன்கேட்கும்போதுதான் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே.

தத்துவ ஞானிகள் யோகப் பயிற்சியினால் மனம், வாக்கு, காயம் மூன்றையும் அடக்கியாண்டு கர்மத்தின் பிடிப்பிலிருந்து தங்களை விடுவித்து ஞானமார்க்கத்தை சொன்னார்கள். இனிச் சாமானிய மக்களைப் பார்த்து வினையில் இருந்து மீள்வதற்குரிய கர்ம மார்க்கத்தை உபதேசிக்கிறார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்

(அறுமின்கள் - மனதிலிருந்து தகர்த்தெறியுங்கள்)

ஆசைதான் வினைக்கு வித்து. அதனால் ஆசையைக் களையுங்கள் என்கிறார் தவயோகி. இதுவே வழி என்பதற்காக இருமுறை சொல்கிறார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்

(ஈசனோடாயினும் - ஈசனிடத்திலுங்கூட ஆசை - பலனை நாடிச் செய்கின்ற பிரார்த்தனைகளை அறுமின்கள் - விட்டுவிடுங்கள்)

ஆசைகளைத் தீர்த்துக்கொள்ள வேறு வழிகளை நாடாமல் ஈசனையே பிரார்த்தித்து பெறலாம் என்று முயல்வதுங்கூட ஆசைகளைப் பெருக்கும். ஆனபடியால் அதுவும் வேண்டாம் என்கிறார். இதற்காகத்தான் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்கிறார்.

ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்

(ஆய் வரும் - முளைத்து தோன்றும்)

ஆசைகள் தியானிக்கத் தியானிக்கத் துன்பங்கள் வளர்ந்து பெருகும்.

ஆசை விட விட ஆனந்த மாமே.

ஆசை ஒவ்வொன்றாக விட்டோமானால் அப்படி அப்படியே ஆனந்தம் தோன்றி வளரும்.

ஆசையே துன்பமாக மாறுகிறது. இதனை விட்டொழிக்க வேண்டும். கடவுளிடத்திலும் எல்லாம் அவன் செயல் என்று ஒப்படைத்துவிடாமல் அங்கும் ஆசையின் வசத்தில் அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்பதும் தவறு என்கிறார் தவமுனி. ஆசை படிப்படியாக விடும்போது ஆனந்தம் படிப்படியாக உண்டாவதை தனது பாட்டின் கடைசி இரண்டு வரிகளிலும் உள்ள சொல்லடுக்குகள் உணர்த்துகின்றன.

இவ்வாறு வள்ளுவரும்,

யாதெனி யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

என்று அடுக்குத்தொடர் வைத்து சொல்கிறார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்த மாமே.

*தோல்வியை நேசி. வெற்றியின் விளிம்பு உன் விழியருகே தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜ மூர்த்தியின் ஆனந்தக் கூத்திலேதான் உலகின் தோற்றமும் இயக்கமும் மறைவும் எல்லாம் நடைபெறுகின்றன என்று உருவகித்தார்கள் ஞானிகள். அந்தக் கூத்தை அறிவதுதான் ஞானம். அது இறைவன் அருளினால்தான் வரவேண்டும்.

எல்லாம் தெய்வலீலை எல்லாம் ஆனந்தமயம் என்பது நல்ல சமயக்கொள்கை அதுபற்றி திருமூலர் பாடுகிறார்.

ஆனந்தம் ஆடரங்கு, ஆனந்தம் பாடல்கள்

(ஆடரங்கம் - நடன அரங்கம் பாடல்கள் - நடனத்துக்குரிய பாட்டுக்கள்)

இறைவனுடைய ஆனந்தமே நடன அரங்கம் ஆனந்தமே நடனமும்! அந்த நடனத்திற்கான பாடல்களும் ஆனந்தமயமே.

ஆனந்தம் பல்இயம், ஆனந்தம் வாச்சியம்

(பல்லியம் - வாத்திய கோஷ்டி வாக்கியம் - அபிநயம்)

ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துஉகந் தானுக்கே.

(அகில சராசரம் - உலகனைத்திலும் உள்ள அசையும் பொருள் அசையாப் பொருள் அதாவது சேதனம் அசேதனம் அனைத்தும். அகில சராசரம் ஆனந்தம் ஆக-இறைவனுடைய ஆனந்தக்கூத்தை உணர்ந்து அதோடு ஒன்றி இசைந்தார்களானால் அதனால் இறைவனுக்கும் சம்பூரண ஆனந்தம் உண்டாகும். அவன் லீலை பூரணமாகும். கூத்து உகந்தானுக்கே - நடனத்தை மகிழ்ந்து ஆடுகின்ற நடராஜமூர்த்திக்கு)

இறைவனுடைய ஆனந்தக் கூத்தின் பயனே உலகங்களின் தோற்றமும் இயக்கமும் மறைவும். அவற்றின் நன்மை தீமைகளை நாம் ஆராய்ந்து குழப்பிக்கொள்ளலாகாது. அவனுடைய ஆனந்தத்துக்காகவே அனைத்தும் நடைபெறுகிறது. இதைப் பாட்டின் இறுதி இரண்டு அடிகளில் முனிவர் சொல்கிறார்.

ஆனந்தம் ஆடரங்கு, ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்இயம், ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துஉகந் தானுக்கே.

நடராஜனுடைய கூத்தின் பெருமையையும் அதன் சம்பூரண வியாபகத்தையும் பாடுகிறார்.

வேதங்க ளாட மிகுஆ கமமாடக்

(வேதங்கள் ஆட - மறை நூல்கள் தத்தம் விதிக்கு உரிய முறையில் தொழில் செய்து இயங்கும்படியாக மிகும் ஆகமம் ஆட - பல பலவாக விளங்குகின்ற ஆகமங்களின் நெறி செயற்படவும்)

கீதங்களாடக் கிளரண்டம் ஏழாடப்

(கீதங்கள் ஆட - பண்ணோடு இசைந்த தோத்திரப் பாடல்கள் எழுந்து ஒலிக்க கிளர் அண்டம் ஏழாட - பரவி நிற்கின்ற ஏழு அண்டங்களும் சுற்றி சுழல)

பூதங்களாடப் புவன முழுதாட

(பூதங்கள் ஆட - நீர், நெருப்பு, காற்று, நிலம், வானம் ஆகிய ஐந்து பூதங்களும் அசைந்தாட புவனம் முழுதாட - உலகங்கள் அனைத்தும் ஆட)

***வாழ்க்கையில் திரும்பப் பெறமுடியாதவை உயிரும் நேரமும் சொற்களும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதங்கொண் டாடினான் ஞானானந் தக்கூத்தே

(நாதம் கொண்டு - நாதத்தோடு ஞானானந்தக் கூத்து ஞானமயமான இறைவனுடைய கூத்து)

வேதங்களாட மிகுஆ கமமாடக்
கீதங்களாட கிளரண்டம் ஏழாடப்
பூதங்களாடப் புவன முழுதாட
நாதங் கொண்டாடினான் ஞானானந் தக்கூத்தே.

ஞானிகள் கண்ட முடிவு என்னவெனில் இந்த உலகத்தின் தோற்றமும், நடையும் எல்லாம் இறைவனுடைய நிலையாகும். அதை உணராமல் அது இது என்று ஆராய்ச்சிகள் செய்வதில் பயனேதும் இல்லை. ஆராய்ந்து அறிய முடியாத இறைவனுடைய இரகசியத்தை வடமொழியில் "லீலை" என்றும் தென்னாட்டு மொழியில் "கூத்து" என்றும் சொல்வது மரபு. இறைவனை நடராஜ மூர்த்தியாக வழிபடும் இந்த உண்மையை மனதில் பதியவைக்கவே வடமொழியில் "லீலை" என்று சொல்லி நிறுத்தினார்கள். தென்நாட்டுக் கலைஞர்கள் அந்த தத்துவத்துக்கு இசைய இறைவனுக்கு நடராஜனாக ஒரு வழிபாட்டு உருவம் தந்தார்கள். இது தென்னாட்டின் பெருமை.

தத்துவங்களை மக்களின் உணர்வில் நிலைநிறுத்துவதற்காக வழிபாட்டுச் சடங்குகளும் அவற்றிற்கேற்ப வழிபாட்டு மூர்த்திகளும் அனைத்துக்கும் பொதுவான மரபாகும். சடங்குகள் வேண்டியதில்லை. மூர்த்திகள் வேண்டியதில்லை என்றெல்லாம் சிலர் கூறுவார்கள். சடங்குகளையும் மூர்த்திகளையும் நீக்கிவிட்டோமானால் தத்துவ உணர்வும் வரவர நைந்து போகும். இதை உணர்ந்துதான் முன்னோர் பல்வேறு சடங்குகளையும் பல்வேறு மூர்த்திகளையும் நமக்கு அமைத்துத் தந்துள்ளார்கள். (தொடரும்...

## சிவபுராணம் கூறும் வில்வ மகிமை

வில்வ இலை ரொம்பவே உயர்வானது. வில்வத்தோட பெருமைகளைப்பற்றி சிவபுராணம் விரிவாக சொல்லி உள்ளது. வில்வமரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வ மலரானது ஒரு லட்சம் தங்கபுஷ்பங்களுக்கு இணையானது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் அதோட சிறப்பு உங்களுக்குப் புரியுமே. அதைத் தவிர ஒரு வில்வ மரத்தை வீட்டுல வளர்த்தால் அஸ்வமேத யாகம் செய்த பலனும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலனும், கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் உலகில் உள்ள அத்தனை சிவாலயங்களைத் தரிசித்த பலனும் கிடைக்கும். அதைத்தவிர வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு அதற்கு நிர்மால்ய தோஷம் கிடையாது. அதைப் பறித்து எத்தனை நாள்கள் ஆனாலும் உலர்ந்து போனாலும்கூட பூஜைக்குப் பயன்படுத்தலாம். மற்ற மலர்களையோ இலைகளையோ அந்தமாதிரிப் பயன்படுத்தக்கூடாது. இது வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு.

*ஒருவர் துன்பப்படும்போது நிபந்தனை ஏதுமின்றி உதவுவதுதான் நட்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயத்தின் அருமை பெருமையை அறிய காலம் கனிந்துவிட்டது.

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

கல் தோன்றா மண் தோன்றா காலத்துக்கு முன் சைவசமயம் தோன்றியதென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சைவசமயம் எப்போது தோன்றியது எவரால் தோற்று விக்கப்பட்டது என்ற நிலையை யாரும் கண்டறியவில்லை. சைவசமயக் கடவுள் எப்படிப்பட்டவர், எத்தன்மையர் என்பதை திருநாவுக்கரசு நாயனார் கைலாயத் திருத்தாண்டகத்தில் "மூவாய் பிறவாய், இறவாய் போற்றி முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி" என அருளியுள்ளார். எனவே எமது கடவுளுக்கு மூப்பு இல்லை, பிறப்பு இல்லை, இறப்பு இல்லை எனக் கூறியது டன் முன்னமே தோன்றி முளைத்தாய் என அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். சைவ சமய ஐந்தாங் குரவரென கூறப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அருளிய சைவ வினாவிடையில் கடவுள் (சைவசமயக் கடவுள்) எப்படிப்பட்டவர் என்பதற்கு என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் எனக் கூறியுள்ளார். எனவே எமது சைவ சமயத்தை அழிக்கவோ, இல்லாதொழிக்கவோ யாராலும் முடியாதென்பதை படம்போட்டுக் காட்டியுள்ளனர்.

சைவசமயம் அன்று இந்தியாவில் அழிக்க சமணர்கள் திருஞானசம்பந்தருடன் அனல்வாதம் புனல்வாதஞ் செய்து தோல்வியடைந்தனர். அதுமட்டுமன்றி திருநாவுக்கரசரை ஏழு நாள் சுண்ணாம்பறையில் அடைத்து வைத்து, உணவு, நீர் கொடாதுவிட்டு ஏழாம் நாள் திறந்து பார்த்தபோது முன்னிலும் பூரிப்புடையவராகக் காணப்பட்டார். இதன்பின் அப்பரைக் கொல்வதற்கு நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்தனர். அதை அவர் உண்டும் இறவா திருப்பதைக் கண்டு மதங்கொண்ட யானையை அவர்மேல் ஏவிவிட்டனர். யானை பாகனைக் கொன்று அயலில் நின்றவர்களை துரத்தித் தாக்கி, அப்பரை வலம் வந்து வணங்கியது. இதனால் ஆத்திரமடைந்த சமணர்கள் கல்லோடு கட்டி கடலில் விட்டனர். கல் தெப்பமாக மாறி திருப்பாதிரிப்புலியூர் கடற்கரையை அடைந்து அப்பருக்குக் கட்டிய கயிற்றை அயலில் நின்றவர்கள் கழற்றிவிட அவர் பாதிரிப்புலியூரானைச் சென்று வழிபட்டார். இச்செயல்களை எல்லாம் அறிந்த அரசன் "தான் சமணர் சொல்லைக் கேட்டு உண்மையை அறியாது செய் தமைக்கு பிராயச்சித்தமாக கோவிலைக் கட்டுவித்தான். தானும் சைவ சமயத்தனாக மாறினான். சமணர் செய்கையினால் சமணசமயம் அழிந்தது. சைவசமயம் எங்கும் பரவியது. இந்த உண்மை எங்கும் பரவியது. சைவசமயம் யாராலும் அழிக்கமுடியாதென்பதை நிரூபித்துக்காட்டியது.

அன்று ஒருகால் உலகில் சமயச் சண்டைகள் ஏற்பட்டன. இதை உணர்ந்த பெரியோர்கள் சமயச்சண்டைகள் ஏற்படாவண்ணம் உலகில் உள்ள அறிஞர்கள் சமயங்களை ஆராய்ந்து சண்டைகளை நிறுத்த ஒரு பொதுக்கூட்டத்தை சிக்காக்கோவில் நடத்தத் தீர்மானித்து, உலகில் உள்ள எல்லா சமய அறிஞர்களையும் அழைத்தனர். அன்று சிக்காக்கோ நகரம் எல்லாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தவர்களும் கூடி தீர்மானம் எடுக்கவேண்டுமென்ற ஆர்வத்துடன் காணப்பட்டனர். கிறிஸ்தவ சமயம், புரட்டஸ்தான் சமயம், சமணசமயம், புத்த சமயம், இஸ்லாம் சமயம், சைவ சமயம் ஆகிய பிரதிநிதிகள் பேச நேரம் ஒதுக்கப்பட்டது. நேரசூசிப்படி சைவசமயம் பேச, வந்த விவேகானந்தர் அழைக்கப்பட்டார். தலைப்பாகையுடன் மேடைக்கு வந்த விவேகானந்தர் புன்முறுவலுடன் சபையை நோக்கி இரு கரம் கூப்பி "எனது அன்பான சகோதர சகோதரிகளே எனச் சொல்லிப் பேச ஆரம்பித்தார். இவரது வணக்க முகவுரையைக் கேட்டு சபையில் கரகோசம் எழுந்தது. கரகோசம் சபை மண்டபத்தை அதிரச் செய்தது. இவர் பேசியதுபோல் முன் பேசியவர்கள் அன்பான சகோதர சகோதரிகள் என்று பேசவில்லை. விவேகானந்தர் சைவசமயக் கருத்துக்களை வெளிப்படுத்தமுன் சபையோரை நோக்கி "கடவுள் இல்லையென்று சொல்பவர்கள் யாரும் இருந்தால் இங்கே வாருங்கள். கடவுளைக் காட்டுகிறேன் என்றார். ஒருவர் எழுந்து அவர் முன்னே நின்று கடவுளைக் காட்டுங்கள் என்றார். சொன்ன தாமதந்தான் விவேகானந்தர் அவர் உச்சந்தலையில் ஓங்கி அறைந்தார். அடி வாங்கியவர் Oh God எனக் கத்தினார். Oh God என நீயே சொல்லுகிறீர் என்று சொன்னதும். வந்தவர் திகைத்துவிட்டார். சபையிலுள்ளவர்களும் அவரின் திறமையையும் சமயப் பற்றையும் பேச்சிலிருந்து புரிந்துகொண்டனர். சபையில் சைவசமயமே எல்லாச் சமயங்களிலும் மேன்மையும் புகழுமுடையது என்பதை உணர்ந்து கொண்டனர்.

சைவசமயத்தின் அருமை பெருமையை உணராது உலகில் பல இடங்களில் சைவ சமய கோவில்களை சேதப்படுத்துகின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளில் சைவசமயப் பெருமையையும் அருமையையும் அறியாது செய்த பிழையை ஒருகால் உணரவேண்டிய நேரம் வரும். ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் ஒட்டுசுட்டான் சென்ற ஒல்லாந்தப் பிரதானிகள் மாடு புல் தின்னுமா எனக்கேட்டு, நாளை காலை வருவேன். கல்மாடு புல் தின்னாவிட்டால் கோவில் தரைமட்டமாகும் என்று கூறிச் சென்றான். அடுத்த நாள் காலை ஒல்லாந்தப் பிரதானி வந்தான். பூசாரியார் தட்டத்தில் அறுகம்புல்லுடன் வந்து தட்டத்தை நீட்டினார். என்ன அதிசயம் கல்மாடு பெரு வடிவம் எடுத்து நாக்கினால் அறுகம்புல்லை உண்டு சாணியும் போட்டது. இந்த அதிசயத்தைக் கண்ட பிரதானி நடுநடுங்கி ஓடிவந்து பூசாரியார் காலில் விழுந்து, தான் செய்த பிழையை மன்னித்துக்கொள்ளும்படி வேண்டினான். அன்று தொடக்கம் பிரதானி சைவக்கோவில்களை இடிப்பதை நிறுத்திவிட்டான். தான் செய்த பிழையை உணர்ந்து பிராயச்சித்தமாகக் கோவிலையும் புணருத்தாரணஞ்செய்து கொடுத்தான். ஐந்தாம் நூற்றாண்டளவில் இலங்கையில் இருந்து புறப்பட்ட புத்த பிக்குகளும், அரசனும், பேசமுடியாத மகளும், சிதம்பரம் சென்று மாணிக்க வாசகருடன் வாதிட்டு, பேசாமடந்தைகளாகி, அரசன்மகள் ஊமையை பேச வைத்து, மாணிக்க வாசகர் வினாக்களுக்கு விடைஅளிக்க வைத்துச் செய்த செயலை அரசன் உணர்ந்து சைவ சமயத்தவனாக மாறினான் என திருவாதபுராணம் கூறுகின்றது. இந்த உண்மையை சைவ சமயத்தவர் நன்கு அறிவர்.

சைவ சமயத்தின் அருமை பெருமையை அறிய உலக மக்களுக்கு காலம் கனிந்து விட்டது. இந்த அருமைச் செயலை அறிய மக்கள் எப்பொழுதும் ஆவலாக இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| இ. ராகுலன் | புத்தூர் | 1000. 00 |
| S. சிவானந்தன் | கனடா 1மூடை அரிசி | 2000. 00 |
| இ. சர்மிளா | கோப்பாய் | 500. 00 |
| திருமதி உ. பேரானந்தம் | தெல்லிப்பழை | 1000. 00 |
| செ. சபாரத்தினம் | இணுவில் | 1மூடை அரிசி |
| முருகேசு யோகசம்பந்தர் | பருத்தித்துறை | 20000. 00 |
| Dr S. சுதோகுமார் | கரவெட்டி | 3000. 00 |
| சி. விஷ்ணு | அல்வாய் | 5000. 00 |
| R. சகாஜன் | அமெரிக்கா | 1000. 00 |
| சி. சிவலிங்கம் | லண்டன் | 1000. 00 |
| திருமதி மகேந்திரன் | லண்டன் | 10 பவுண்ஸ் |
| S. சிவபாலன் | லண்டன் | 10 டொலர் |
| திருமதி ந. முருகேசு | ஏழாலை | 5000. 00 |
| இராஜலட்சுமி கமலக்கண்ணன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| K. சஜீவன் | பிரான்ஸ் | 2000. 00 |
| ந. சஸ்மிகன் | சுவிஸ் | 2000. 00 |
| திரு மனோகரன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| பா. மதிவதனி | தம்பசெட்டி | 1000. 00 |
| பா. ரவீந்திரன் | அளவெட்டி | 5000. 00 |
| ச. சஷ்டிபிரியா | கொழும்பு | 10000. 00 |
| ச. குலமணி | நவாலி | 5000. 00 |
| ஜெ. கல்யாணி | உடுவில் | 5000. 00 |
| வி. சானுஜன் | கனடா | 5000. 00 |
| கா. சிவபாக்கியம் | பளை | 5000. 00 |
| சி. கணேசன் | கொழும்பு | 1000. 00 |
| இ. கனகரத்தினம் | உடுப்பிட்டி | 200 கனேடியன் டொலர் |
| பா. லினுஷன் | ஜேர்மன் | 1000. 00 |
| கு. குருபரன் நினைவாக | உரும்பராய் | 5500. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |

*அறியாமையுடன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட அறிவுடன் ஒருநாள் வாழ்வது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| யோ. மதன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| நவதீபா கஜன் | கோண்டாவில் | பருப்பு, 2புட்டி அரிசி |
| ம. கர்னி | கொக்குவில் | 15000. 00 |
| செல்லம்மா கந்தையா நினைவாக | அச்சுவேலி | 20000. 00 |
| ச. ஞானசௌந்தலா | குடத்தனை | 15000. 00 |
| ஐ. ராசேந்திரம் | ஏழாலை | 10000. 00 |
| ர. விவின் | ஏழாலை | 10000. 00 |
| S. தர்மலிங்கம் | சித்தங்கேணி | 4000. 00 |
| கு. வரப்பிரியன் | கைதடி | 2000. 00 |
| கு. அனுருக்சி | கைதடி | 3000. 00 |
| ஸ்ரீராம் ரவீந்திரன் | நவிண்டில் | 15000. 00 |
| சி. லவீன் | உரும்பராய் | 5000. 00 |
| பூவேந்தன் பகல் பராமரிப்பு நிலையம் | சாவகச்சேரி | 15000. 00 |
| இ. ஜெயச்சந்திரன் | அளவெட்டி | 500. 00 |
| பா. செல்லையா | சரசாலை | 3000. 00 |
| திரு தியாகலிங்கம் | நல்லூர் | 5000. 00 |
| வி. பாக்கியமூர்த்தி | கரவெட்டி | 5000. 00 |
| இ. சிவகிருஷ்ணபவான் | அல்வாய் | 5000. 00 |
| செ. ரவீந்திரராஜா | கரவெட்டி | 4000. 00 |
| க. குணசிங்கம் | சாவகச்சேரி | 1000. 00 |
| திரு திருநாவுக்கரசு | உடுப்பிட்டி | 3000. 00 |
| S. தயா | உடுப்பிட்டி | 2000. 00 |
| கி. சிவலிங்கம் | கரவெட்டி | 500. 00 |
| திரு நித்தியானந்தன் குடும்பம் | வல்வெட்டி | 1500. 00 |
| திரு வர்ணகுலசிங்கம் | உரும்பராய் | 1000. 00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| R. ரதீத் | கொக்குவில் | 5600. 00 |
| க. வாசன் | தெல்லிப்பழை | 10000. 00 |
| சி. சுந்தரலிங்கம் | இடைக்காடு | 5000. 00 |
| வ. திவ்வியன் | இடைக்காடு | 5000. 00 |
| பி. ஆருஷன் | அல்வாய் | 5000. 00 |
| வ. ஏடன் | கரணவாய் | 1000. 00 |
| ப. மகேந்திரராஜா | காரைநகர் | 5000. 00 |
| ச. ஜெயசங்கரன் | அளவெட்டி | 1000. 00 |
| த. நாகம்மா | பண்டத்தரிப்பு | 5000. 00 |
| ச. சதீஸ் | புணாவில் (U.K) | 10000. 00 |

*உருவத்துக்குத்தான் முக்கியம் என்றால் யானை காட்டுக்கு ராஜாவாகி இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. சந்திரன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| ந. சிவபாக்கியம் | இணுவில் | 1100. 00 |
| ர. ரக்ஷன், ர. ருக்ஷிகா | தொண்டைமானாறு | 5000. 00 |
| கி. அகேஸ் | அச்சுவேலி | 5000. 00 |
| பா. சிவபாக்கியம் | ஏழாலை பருப்பு, 5k அரிசி, | 1000. 00 |
| ச. மனோன்மணி | நீர்வேலி | 1000. 00 |
| நவரத்தினம் ரகிதரன் | நீர்வேலி (பிரான்ஸ்) | 29400. 00 |
| கலாநிதி முரளிதரன் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| பு. கவிராஜ் | கொழும்பு | 2000. 00 |
| திரு கணேசநாதன் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| திரு பரமநாதன் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| ப. சுகந்தினி | கொழும்பு | 5000. 00 |
| ப. ரவிசங்கர் | கொழும்பு | 5000. 00 |
| லோ. தீபனா | சுவிஸ் | 1000. 00 |
| ரா. சுகர்ணா | கல்வியங்காடு | 1000. 00 |
| திரு குணரட்ணம் குடும்பம் | மானிப்பாய் 1புட்டி அரிசி, | 1000. 00 |
| தா. சிவதாசன் | அளவெட்டி | 15000. 00 |
| சற்குணச்செல்வம், அபிராமி, அர்ச்சுன் | நெதர்லாண்ட் | 10000. 00 |
| மு. மாசிலாமணி நினைவாக | மட்டக்களப்பு | 2000. 00 |
| பா. அட்சயன் | தாவடி | 5000. 00 |
| ஸ்ரீ விமலேஸ்வரி | சரசாலை 20k பருப்பு, 1மூடை அரிசி | |
| இ. வசந்தன் | நல்லூர் | 2000. 00 |
| சு. யோகராஜா | வட்டுக்கோட்டை | 15000. 00 |
| S. அரவிந்தன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| பா. அசோகன் | உரும்பராய் | 1000. 00 |
| சி. சிவகாந்தன் | உரும்பராய் | 1000. 00 |
| திரு ஸ்ரீநாதன் குடும்பம் | சுன்னாகம் | 1000. 00 |
| க. சகாதேவன் | நல்லூர் | 1000. 00 |
| சு. கந்தசாமி | கரவெட்டி | 1000. 00 |
| க. தெய்வேந்திரம் | அச்சுவேலி | 2000. 00 |
| சி. அப்புத்துரை | கோப்பாய் | 500. 00 |
| புவிதா செல்வநாயகம் | கனடா | 5000. 00 |
| தனேஷ் ஆகாஷ் | லண்டன் | 5000. 00 |
| ர. அபிஷனா | கொழும்பு | 2000. 00 |
| செ. சற்குணராஜா | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| வே. சடாட்சரமூர்த்தி | கொடிகாமம் | 1000. 00 |

*உலகில் தேடித்தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வி. திவ்வியநாதன் | லண்டன் | 5000. 00 |
| க. சஜீலன் | கல்வியங்காடு | 1000. 00 |
| அடியார் கிருஷ்ணபிள்ளை | கரவெட்டி | 20000. 00 |
| சி. சிவசக்தி | பொலிகண்டி | 8000. 00 |
| திரு சத்தியமூர்த்தி குடும்பம் | கொழும்பு | 500. 00 |
| சித்திராங்கனி குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| K. சாயீசன் | கொழும்பு | 1000. 00 |
| க. துஷாந்தன் | கோண்டாவில் | 3000. 00 |
| தே. வனிதா குடும்பம் | அச்சுவேலி | 3000. 00 |
| பூ. ஜெயதேவி நினைவாக | அச்சுவேலி | 3000. 00 |
| திரு தியாகராஜா P.M. குடும்பம் | கந்தர்மடம் | 10000. 00 |
| கி. சிவலிங்கம் | கரவெட்டி | 500. 00 |
| சி. தர்மராசா | இடைக்காடு | 10000. 00 |
| ஈஸ்வரி இராஜயோகா சிகிச்சை நிலையம் | இணுவில் | 2000. 00 |
| ர. சுவீட்சனன் (திரு வீடியோ) | அல்வாய் | 10000. 00 |
| திருமதி பிரகாயினி துஷ்யந்தன் | கைதடி | 5000. 00 |
| பா. பிறேமலதா | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| திருமதி ஞா. சறோஜினிதேவி (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) | யாழ்ப்பாணம் (கனடா) | 15000. 00 |
| திரு ரட்ணேஸ்வரன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| டே. செந்தூரன் | பருத்தித்துறை | 2000. 00 |
| க. சிவயோகானந்தன் | பிரான்ஸ் | 5100. 00 |
| திரு சத்திராஜன்<br>S. யதுகிஷன்<br>J. கஸ்தூரி<br>M. கல்யாணி | லண்டன் | 5000. 00 |
| சிவராஜா அருந்ததி | அவுஸ்திரேலியா (மலையக சிறுவர் இல்ல மாணவர்களுக்காக) | 25000. 00 |
| கு. பாஸ்கரன் | கனடா | 2000. 00 |
| நா. அர்ருவின் | இணுவில் | 5000. 00 |
| திரு சுசீந்திரன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| வே. தர்மராஜா | இணுவில் | 1000. 00 |
| கதிரவேலு சிவஞானம் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| ச. ராகவேந்தன் | பருத்தித்துறை (கல்விப்பணி) | 2000. 00 |
| திரு ஸ்ரீபவன் குடும்பம் | வவுனியா | 10000. 00 |
| ந. நவராஜசிங்கம் | கொக்குவில் | 2000. 00 |
| திரு ஸ்ரீதரன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு செல்வக்குமரன் குடும்பம் | ஆனைப்பந்தி | 1000. 00 |

(தொடரும்...

*வாழ்வது ஒரே முறை. அதை உனக்காக வாழ்ந்துவிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

இயற்கையின் நீண்ட பெரும்தாபமே உலகத்தின் தோற்றப்பாடு. இந்த இயற்கையான உலகமானது இறைமையின் தாக்கத்தையே முற்றுமுழுதாக உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே பரிநாமத்தின் முன்னெடுப்பினால் வார்த்தையில் அடங்கமுடியாத பலவகையான உயிர் இனங்கள் தோன்றலாயின. இந்த உயிர் இனங்கள் உலகை நீடித்து மேலோங்கி இயங்கவைப்பதையே நோக்கமாகக்கொண்டு உருவாக்கப்பட்டன. உலகை உயிர் இனங்கள் எழுச்சி அடையச் செய்வதில்லை என்றால் உலகம் என்றதொன்று தோன்றுவதற்கு அவசியமே இருந்திருக்க முடியாது. ஓர் அறிவு தொடக்கம் ஐந்து அறிவு வரையுள்ள உயிர் இனங்கள் தோன்றி வளர்ந்தாலும் அவற்றிற்கு தங்கள் தோற்றமோ பயன்பாடோ புரிந்துணர்வோ எதுவும் தெரிந்துகொள்ள முடியாது. ஏதோ மனிதன் பிறந்துவிட்டான் அவன் ஏனோ மரம்போல் வளர்ந்துவிட்டான் என்ற நிலைப்பாட்டில் தங்கள் இயல்பைக் கொண்டிருந்தன.

இதனால் உலகம் உய்திபெற்று நீடூழி வாழ்வதற்கும் ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான். அவனே அனைத்திற்கும் காரணம் என்ற உணர்வை ஏற்படுத்தும் பகுத்தறிவுகொண்ட மனிதனை இறைவன் உருவாக்கினான். இறைவனையும் அவன் அந்தரங்கங்களையும் மனதார ஏற்றுக்கொண்ட இந்த பகுத்தறிவாளன் இறைவனால் படைக்கப்பட்ட தாங்கள் அவன் அருளாலே தான் வாழ்வில் மேம்பாடு அடைய முடியும் என்ற எண்ணப்பாங்கில் மேலோங்கி நின்றான். இதனால் இறைவனையும் அவன் அரவணைப்பையும் தேடும் முயற்சியில் ஈடுபட்டான். இறைவன் எங்கே இருக்கின்றான்? எப்படி இருக்கின்றான்? இயற்கையே இறைவன் வடிவம் என்று கூறப்படுகின்றது. புல், பூண்டு, மரம், செடி, கொடி முதலான உயிருள்ள மற்றும் உயிரற்றவை எல்லாம் இறைவனின் கோலம் என்றால் உலகம் முழுவதையும் தாம் வணங்குவதா உள்ள நாள் முழுவதும் வணங்குவதா இறைவனை வணங்க ஒரு நேரகாலம் வேண்டாமா இது உருப்படுமா உசிதமாகுமா இப்படி ஒரு நியதி இருக்குமானால் உலகில் இறை என்றதொன்று இருக்குதென்பது மக்கள் மனங்களிலே இல்லாமல் போய்விடுமல்லவா. இந்த நிலையில்தான் இறைவனின் வெளிச்சம் உலக வாழ் மக்கள் மனங்களிலே ஒளிர்ந்துகொள்ளத் தலைப்பட்டது.

படைத்தவனின் பயன்பாட்டை பகுத்தறிவினால் புரிந்துகொள்ளும் மனித குலம் உய்யும்பொருட்டு, "ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க" என்று மாணிக்கவாசகரும், "அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்" என்று கச்சியப்ப சுவாமிகளும் "உய்வதனைத்திலும் ஒன்றாய் எங்கும் ஒரு பொருளானது தெய்வம்" என்று மகாகவி பாரதியும் பாடிச் சென்றனர்.

இதன் காரணமாக உலகமெல்லாம் நிறைந்தோங்கும் இறைவனை ஒருமுகப்படுத்தி அவன் அருளையும் ஆசியையும் பெற்று உய்யும்வண்ணம் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் எல்லாம் ஆலயங்கள் அமைத்து அவன் உருவங்களை பிரதிஷ்டை செய்து ஆசாரசீல

*தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ளுங்கள் வாழ்வு இனிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்காற்று முறைகளில் வேதமந்திரங்கள் ஓதி, அபிஷேகம் ஆராதனை விழாக்கள் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ மக்கள் வழக்கப்படுத்திக்கொண்டனர். இதையே கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று ஔவைப்பிராட்டியார் கூறிவைத்தார்.

கோயில் இல்லா ஊரில் குடியிருப்பதென்பது எப்போதும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. இதற்கு சான்றுகள் பல உண்டு. நாம் அன்றாடம் பயன்படுத்தும் துவிச்சக்கர வண்டிக்கு காற்று முக்கிய தேவையில் ஒன்றாகும். உலகம் முழுவதும் காற்று வியாபித்திருக் கின்ற போதிலும் அதை உள்வாங்கி ரியூப்பில் செலுத்துவதற்கு ஓர் கருவி (பம்) வேண்டும் அல்லவா. அதுபோல் நாமும் எமது துன்பச்சுமைகளை துடைத்தெறிந்து நல்வாழ்வை மேற் கொள்ள ஏகனாய் அனேகனாய் உலகமெங்கும் இயங்கிவரும் இறைவனை ஓர் உருவில் அமர்த்தி ஆலிங்கனம் செய்து அவன் அருளைப் பெறுவதற்கு ஊர்கள் தோறும் ஆலயங்கள் வேண்டும் அல்லவா.

நாம் எந்த ஊரில் எந்த இடத்தில் எந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் ஆலய மணியின் ஓசை கேட்டதும் அத்தனையும் நிறுத்தி ஆண்டவன் நினைவில் மூழ்கி அவன் நாமத்தைக் கூறி அழைத்து மனம் பூரிப்பு அடைகின்றோம். இதுமட்டுமல்லாமல் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது முதுபெரும் பழமொழி. நாம் புனிதம் பேணி ஆசாரசீலர்களாய் கோயிலுக்குப் போகும்போது கண்ணுக்கெட்டிய தூரத்தில் கோபுரத்தைக் கண்டதும் பரவசப்பட்டு அவற்றைத் தரிசிக்கிறோம். கோயிலும் இல்லாமல் கோபுரமும் இல்லாத ஊரில் நாம் இருக்க நேர்ந்தால் எந்தக் கோடியில் இருந்து அந்தக் கோடி புண்ணியத்தைப் பெற்றுக்கொள்வது.

மனம் ஒரு குரங்கு. அங்கும் இங்கும் எங்கும் அலைபாயும் தன்மைகொண்டது. ஆசை களால் தூண்டப்பட்டு அவதூறான நடத்தைகளிற்கு ஆளாக்குவது. இதைத் தவிர்த்து வைத்த கண் வாங்காமல் ஆண்டவனின் உருவங்களை அமைதியுடன் அலையவிடாது நெஞ்சில் நிறுத்தி மனதை ஒருநிலைப்படுத்த ஆலயங்களே துணைபுரிகின்றது என்றால் அது மிகையாகாது அல்லவா.

கடலில் மீன் பிடித்த கதிர்காமரை வரவழைத்து கச்சிதமாய் கதைகள் சொல்லி பூவரச மரத்தடியில் பூசை வழிபாடு ஆற்றுமாறு பூர்வீக வேல் ஒன்றை கையளித்தான் இறைவன். கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்றும் குடிகள் வாழும் இல்லங்களில்தான் கோயில்கள் வேண்டும் என்றும் வேல் அதனைக் கையளித்தான் சந்நிதி வாழ் வேல் முருகன்.

## கோவில்களில் கற்பூர தீபம் காட்டி வழிபடுவதன் பொருள் என்ன?

கடவுள் இருக்கும் அறையைக் கருவறை என்று சொல்லுகிறோம். கற்சுவரின் மத்தியில் கொலுவிருக்கும் இறைவனின் திருமேனியும் கல்லினால் செய்திருப்பதால் கரிய நிறத்துடனேயே இருக்கிறது. வெளிச்சத்தைக் காட்டி கடவுளை முழுமையாகத் தரிசிப்பதற்கு கற்பூர ஒளி நமக்கு உதவுகிறது என்பது பொதுவான விளக்கம். ஆனால் பூரணமான அருள்சக்தி ஒளிவடிவில் இருப்பதால், அந்த ஒளியைக் கற்பூரத்தின் பிரகாசத்தால் காண்கிறோம். அதே சமயத்தில் இறைவனது திருமேனியை அங்கம் அங்கமாகத் தரிசிக்கவும் முடிகிறது. மேலும் கற்பூரத்தின் சுடர் அணைந்தவுடன் காற்றில் கலந்து மறைந்துவிடுகிறது. அதேபோல ஒளியாகிய ஞானாக்கினியில் நமது அறியாமை எரிக்கப்பட்டு மறைந்துவிடுவதை கற்பூர தரிசனம் நமக்கு உணர்த்துகிறது.

*நாளைய அறுவடைக்கு இன்றே விதைப்பதுபோல் நாளைய வெற்றிக்கு இன்றே திட்டமிடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை மதிக்கும் இல்லறம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

ஒரு சைவ ஆலயத்தை புனிதமாக வைத்திருப்பது ஒவ்வொரு சைவப் பெருமகனதும் முக்கிய கடமையாகும். ஆலயத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் அந்தந்த ஆலயத்தைச் சேர்ந்த குருக்கள் ஐயாவினதும் ஆலய நிர்வாகத்தினதும் கடமை என்று எண்ணிவிடக் கூடாது. கோயில் என்பது ஊர் மக்கள் யாவருக்காகவும் அமைக்கப்பெற்றது அமையப்பெற்றது. எனவே அதன் புனிதத்தைப் பேணுவது ஊர் மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். நாம் ஆலயத்தின் புனிதம் பேண உதவுகின்றோமோ இல்லையா அதனை அசுத்தமாக்காவிட்டால் அதுவே பெரிய உதவியாக இருக்கும். இல்லறத்தார்க்கு இத்தகைய கடமைகளும் உண்டு.

தூய்மைக் குறைவுக்கெல்லாம் காரணமானது இல்லறம் என்று மகான்கள் பாடியிருந் தாலும், அதிலும்கூட ஒரு நெறியை ஏற்படுத்திக்கொடுத்து அதையே ஆத்மாவைத் தூய்மைப் படுத்துகின்ற ஒரு சமாச்சாரமாக ஆக்கி எமக்கு வேத தர்ம சாஸ்திரங்கள் தந்திருப்பது இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்ற முதுமொழியோடு ஒத்துப்போகின்றது.

சாதாரணமாக ஒருவனைக் காட்டுக்குப் போய் சந்நியாசியாக இரு என்று சொன்னால் அவன் செய்வானா? அது அவனுக்கு வேண்டாததொன்றாகத் தோன்றும்.

உலக வாழ்க்கையில் அடிபட்டுத்தான் அவனுக்குப் பக்குவம் உண்டாக வேண்டும்.

பிஞ்சாகக் கசக்கின்ற காலத்தில் கசந்து, வடுவாகத் துவர்க்கின்ற காலத்தில் துவர்த்து, காயாகப் புளிக்கின்ற காலத்தில் புளித்து, அப்புறம் தான் பழமாகப் பழுத்து பூரணமாகத்தான், சாதாரண மனிதர்களால் முடியும்.

நன்றாகப் பழுக்காத பழத்தை கம்புகொண்டு அடித்து பழுக்க வைக்க முடியாது.

அதைவிட்டு இயற்கை வேகத்தை மீறினால் இராமலிங்க சுவாமிகள் சொன்னபடி “வெம்பி விழ” வேண்டியதுதான். இதனால்தான் திருமணம் இல்லறம் எல்லாம் கிருஹஸ்த தர்மங்கள் எனக் கூறிவைத்துள்ளனர் பெரியோர்கள்.

அது மாத்திரமல்லாமல் பூர்வ கர்மங்களை அனுபவிக்க அநேக ஜீவன்கள் புவியில் பிறந்தாக வேண்டுமே! தாம்பத்திய வாழ்க்கை இல்லாமல் இது எப்படி முடியும்?

எனவே இல்லறம் தூய்மையானது. ஆனால் அங்கு இறைசிந்தனையும் அவசியம். பிரம்மச்சரியத்தில் ஒருவன் செய்யவேண்டிய சந்தியாவந்தனம் இல்லறத்திலும் தொடர வேண்டும்.

இல்வாழ்க்கையில் பூசை புனற்காரம் மந்திர ஜபம் புனிதம் ஆகியன ஓர் அளவு தன்னும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

காயத்திரி மந்திரம் ஜபம் எமக்கு மிகவும் நன்மைபயக்க வல்லது.

காயத்திரி என்றால் எவர்கள் தன்னை உச்சரிக்கின்றார்களோ அவர்களை ரட்சிப்பது என்று அர்த்தம்.

“சந்தஸ்” என்பது வேதம். வேத மந்திரங்களுக்கெல்லாம் தாய் ஸ்தானத்தை வகிப்பது “காயத்திரி” என, வேதமே சொல்கின்றது. 24 அட்சரங்கள் கொண்ட வேத மந்திரம் இதுவாகும்.

*சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தேகமே ஒரு ஆலயம் அதனுள் இருக்கும் ஜீவனே ஈஸ்வரனின் ரூபமுமாகும். எனவே மனிதனது உடம்பே ஒரு தேவ ஆலயம் என்னுமிடத்து அதனையும் யாம் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

ஊரில் ஆலயமும் வேண்டும். இல்லமும் வேண்டும். உலக காரியங்களுக்கு இல்லமும் ஆத்மீக காரியங்களுக்கு ஆலயமும் அவசியமாகின்றன. ஆலயங்கள் பாதுகாக்கப்பட வேண்டி யவை. எங்கெங்கு என்ன இருக்கவேண்டுமோ அவை அங்கங்கு இல்லாவிட்டால் எல்லாமே பாழாகிவிடும் என பின்வரும் பாடல் மிக அழகாகவும் தெளிவாகவும் இக்கருத்தை சொல்வதைப் பாருங்கள்.

"நீறில்லா நெற்றி பாழ் நெய்யில்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்..."

ஒரு சைவனுடைய நெற்றியில் திருநீறு மிளிர வேண்டும். அப்போதுதான் அவன் முகம் பொலிவடைகின்றது.

சைவ உணவில் நெய் அவசியம் வைக்கப்படல் வேண்டும். ஊர் ஒன்றுக்கு ஆறு அவசியம். ஆறு இல்லா ஊரின் அழகும் வளமும் குன்றிவிடும். எல்லாவற்றிற்கும் மேலாக "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனச் சொல்லி வைத்துள்ளனர் எமது முன்னோர். எத்தனை முக்கியம் வாய்ந்தது ஒரு ஊருக்கு ஆலயம்.

ஆலயங்களில் மந்திரங்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும். இதன் ஒலி காற்றில் பரவி ஊர் எங்கணும் ஒலித்துப் பரவ வேண்டும். அதனால் ஊரே புனிதம் அடைய வேண்டும். மந்திரசக்தி அக்கினி போன்றது. அஃது தீயவற்றைப் பொசுக்கி ஷேமத்தைத் தரவல்லது. காயத்திரி மந்திரத்தை ஒரு நெருப்புப்பொறி என்றும் கூறலாம். மற்றைய மந்திரங்கள் எல்லா வற்றிற்கும் சக்தியை அளிப்பது காயத்திரி மந்திரம். இம் மந்திரத்தைப் புனிதமாக, சிரத்தையோடு மனதை ஒருவழிப்படுத்தி, பொருள் உணர்ந்து நாம் ஜபிக்க வேண்டும்.

காயத்திரி மந்திரத்தை முறைப்படி ஜபித்தால்தான் மற்றைய மந்திரங்களும் சித்திக்கும் என்பது பெரியோர் வாக்கு.

எனவே இல்லறத் தளத்தைத் தர்ம தளமாக யாம் அமைப்போமேயானால் ஆத்மீக லட்சியம் சுலபமாக நிறைவேற வாய்ப்புகளுண்டு.

---

## ஏற்றம் தரும் ஐப்பசி ஏகாதசி விரதம்

**ஐப்பசி மாதத்தில் வரும் ஏகாதசிகள் சிறப்பு வாய்ந்தவையாகக் கருதப்படுகிறது. இந்த மாதத்தில் வளர்பிறையில் வரும் ஏகாதசியை, "பாபாங்குசா ஏகாதசி" என்று அழைக்கிறார்கள். ஐப்பசி மாதத்தில் வளர்பிறையில் வரும் ஏகாதசியான இது, நம்முடைய பாவங்களை அகற்றும் அங்குசம் போன்றது என்றால் மிகையல்ல. கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள், யாகங்கள், உயர்ந்த தானதர்மங்கள் முதலானவற்றால் என்ன பலன் உண்டாகுமோ, அவ்வளவு பலன்களையும் இந்த ஓர் ஏகாதசியே கொடுக்கும். இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள், எம வேதனையை அனுபவிக்கமாட்டார்கள் என்று கூறப்படுகிறது. இந்த விரதத்தைக் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் தெரியாமல், விதிப்படி இல்லாமல், ஊரார் மெச்ச வேண்டும் என்பதற்காகவோ அல்லது கபடமாகவோ கூட இந்த விரதத்தைக் கடைப்பிடித்தாலும், பலன் கிடைக்கும். அப்படியானால், இந்த விரதத்தை முறைப்படி செய்தால், அதனால் விளையும் நன்மைகளையும், மேன்மைகளையும் சொல்லவும் வேண்டுமா என்ன?**

***துன்பங்களை சாதிக்கத் தெரிந்தவனுக்கு தோல்வியே இல்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஆனந்த சாகரம்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## அனைத்தும் படைத்த அபிராமி

அம்பிகையை அகத்தியர் நவரத்தினமாலையில் வர்ணிக்கும்போது, "மூலக்கனலே சரணம் சரணம் முடியா முதலே சரணம் சரணம்" எனக் கூறுகிறார். இவ்வையகத்தின் தோற்றத்திற்கு மூலக்கனலாக இருப்பவர் தேவியாவர். முதலும், முடிவும் இல்லாத ஒரு நிரந்தர நிலைப்பாட்டைக்கொண்டவள். அம்பிகையின் சிறு சலனத்தினால் ஏற்பட்டது இவ் வையகம். அலகிலா விளையாட்டுடையவள்.

தனது லீலா விநோதங்களினால் பலவற்றைப் படைத்தாள். முதலில் வந்தவர்கள் முத்தேவர்களான பிரம்மா, விஷ்ணு, ருத்திரன். இவர்களுக்கு மூன்று சகோதரிகளைத் தோற்றுவித்து விஷ்ணுவிற்கு சகோதரியாகப் பார்வதியும், பிரம்மாவிற்கு சகோதரியாக லட்சுமியும், ருத்திரனுக்கு சகோதரியாகப் பார்வதியும் தோன்றி, லட்சுமி விஷ்ணு சக்தியாகவும், பார்வதி சிவசக்தியாகவும், சரஸ்வதி பிரம்மாவின் சக்திகளாகவும் விளங்கினர். இவை யாவும் அம்பிகையின் லீலைகளே.

"பூத்தவளே புவனம் பதினான்கையும் காத்தவளே" என அபிராமிப்பட்டர் பாடுகிறார். ஈரேழு புவனங்களையும் ஈன்ற பெருமாட்டியே அருள்கொண்டு ஈன்றதைப் போலவே அவற்றைப் பாதுகாத்தாயே பின்பு அப்புவனங்களை மறைத்து வைக்கும் அன்னையே, விஷம் அருந்தியதால் கறுப்பான கண்டத்தையுடைய சிவபெருமானுக்கு முன்பு தோன்றிய தத்துவமாக உள்ளவளே. இளமையால் என்றும் இருக்கும் திருமாலுக்குத் தங்கையே, பெரிய தவத்தை உடையவளே? நான் உன்னைத் தெய்வமாக வழிபடுவதை அல்லாமல் வேறு ஒரு தெய்வத்தை வழிபடுவது முறையாகுமா?

முத்தொழிலுக்கும் காரணமாக இருப்பவள் மூன்று தொழிலையும் செய்யும் தேவி சில சமயங்களில் சிவபெருமானைவிட பெரியவளாக இருப்பாள். சக்தி தத்துவத்திற்கு பின்பு சதாசிவ தத்துவம் தோன்றும். ஆகவே சதா சிவத்திற்கு சக்தி மூத்தவளாகிறாள். திருமூலரும், "தானே தலைவி எய்வு நின்ற தற்பரை" என்று அன்னையை பதினான்கு உலகங்களையும் படைத்தவள் என்கிறார். படைத்தவள் மட்டுமல்ல மறையச் செய்பவளும் அவளே. "திரேதா கைரீ" என லலிதா சகஸ்ர நாமத்தில் கூறப்பட்டுள்ளது. அம்பிகையின் பரிவார தேவதைகளில் "திரங்கணீ" என்ற தேவியின் மூலம் பக்தி இல்லாதவர்களுக்கு அம்பாளுடைய தோற்றம் தெரியாதபடி மறைத்துவிடுவாள். இவளுக்கு முதுமை என்பது கிடையாது. என்றும் பாலை (கன்னி)யாக இருப்பவள் இவள். "நித்யயௌவனா, வயோவஸ்தாபி வர்ஜிதா சப்த யௌவன ஸாலினீ, ஜராத் வாந்தர விப்ரபா" என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறார்.

வைஷ்ணவி, விஷ்ணுரூபினி என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறாள். எல்லாத் தெய்வங்களும் இவளுள் அடங்கும் என்பதால் வேறு தெய்வங்களை வழிபடவேண்டிய அவசியமில்லை

*கஷ்டங்கள் மட்டும் இல்லையென்றால் போராடும் எண்ணமே இல்லாமல் போய்விடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் அபிராமிப்பட்டர். இத்தேவியை வணங்குபவர் அனைத்து ஜீவர்களும், தேவர்களுமாவர்.

"வந்திப்பவர் உன்னை வானவர் தானவர்..."

மண்ணில் வாழ்பவர்களுக்கு அன்னையின் குளிர்ந்த திருவருள் மிக எளிதாகக் கிட்டுமாம். அன்னை அபிராமி கருணையே வடிவானவள். வானவரும், தானவரும், பிரம்மாவும், நாராயணரும் அம்பிகையின் அருளுக்கு ஏங்குகிறார்கள். சிவபெருமானே அம்பிகையின் அந்தரங்கத்தை நாடித் தவங்கிடக்கிறார். அப்படிப்பட்ட அன்னை தன்னை அண்டியவர்களுக்கு எளிமையாக அருள்புரிகின்றார். அதேபோல் அசுரர்களின் கொட்டத்தையும் அடக்கி ஒடுக்குகிறார்.

"தண்ணளிக் கென்று முன்னே பல கோடி..."

இன்னிசையாக விருந்தளிக்கும் இனிய சொற்களையுடையவளும், அழகான சியாமள நிற மேனியுடையவளுமான பச்சைக்கிளி அபிராமியே, உன்னுடைய குளிர்ந்த அருளைப் பெறவேண்டுமென்று, முற்பிறவிகளில் எண்ணற்ற தவங்கள் செய்த புண்ணியர்கள், இந்த உலக ஐஸ்வர்யங்களை மட்டுமா பெறுவார்கள். இந்திராதி தேவர்கள் வசிக்கின்ற சொர்க்க லோகம் தருகின்ற சங்கநிதி, பதுமநிதி, கற்பக விருட்சம் போன்ற செல்வங்களையும், பிறப்பு, இறப்பு இல்லாத சாயுஜ்ய பதவியையும் அல்லவா அடைவர்.

இறைவன் திருவருளைப் பெறுவதற்கு இந்த மனிதப்பிறவி ஒன்றுதான் தகுதி உடையது. புண்ணியம் செய்தால் சொர்க்கலோகம் கிட்டும். மறுபடியும் மண்ணில் பிறந்து முத்தி பெறலாம்.

எந்நேரமும் அம்பிகையையே தியானிக்கும் பட்டர் தேவியின் வாக்கு இனிமையையும், திவ்வியமானதோடு திகழும் திருமேனியையும், கேட்பவர்களுக்கு இன்னிசையாக விருந்தளிக்கும் இனிய சொற்களையுடையவளும், திருமேனிச் சோதியும் யாவற்றையும் அனுபவிக்கிறார்.

இந்தக் குணங்களை அனுபவிக்க பெறுதற்கரிய மனிதப்பிறவி வேண்டும். அன்னையிடம் இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்பதைவிட, "உனது அருள் வேண்டும்" என்றே கேட்க வேண்டும். அம்பிகையின் அருள்பெற பலகோடி தவங்கள் செய்யவேண்டும் என்கிறார். தவங்கள் என்றால் நற்செயல்கள் எனக் கொள்ளலாம். தவறு செய்தால் அன்னை தண்டிப்பாள். தண்டனை பெற்றபின் தூய்மைப்படுத்துவாள். "நல்லறம் செய்தால் அருள்மழை பொழிவாள்" நெல்லில் உள்ள உமியைப் போக்க உரலில் இட்டுக் குத்துவதைப்போல, பிறவியாகிய உரலில் இட்டுக் குத்தி அரிசியாக்கி, ஞானாக்கினியாகிய உலையிலே பக்குவப்படுத்தி உண்ணுகிறாள். தன்னோடு ஐக்கியப் படுத்துகிறாள். தண்டனை கொடுத்து திருத்துவது மறக் கருணையாகும். இதற்கு மாறாக வேண்டியதை வேண்டியபடியே பெறச்செய்து வாழ்வை நலப்படுத்தும் அவரது கருணை அறக்கருணையாகும். அறக்கருணை பெற்றவர்கள் இவ்வுலகில் நல்லவண்ணம் இன்பமாக வாழ்ந்து, பின் விண்ணளிக்கும் சொர்க்கமும் பெறுவார்கள். இந்திரலோக வாழ்வும், அதைவிட சிறந்த அழியா முத்தி வீடும் பெறலாம். பின்பு அன்னையோடு இணைந்து என்றும் ஆனந்தத்தில் திகழலாம். இவையெல்லாம் இறைவியின் கருணையே எனப் பட்டர் கூறுகிறார்.

*தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன்தான் மாமனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒளிமயமான அபிராமியே!**

அபிராமியின் அழகிலும் தேஜஸிலும் தன்னை ஆட்படுத்திக் கொள்கிறார் பட்டர். எம் பெருமாட்டியை தியானம் செய்பவர்களுக்கு அவள் ஒளிமயமாகக் காட்சியளிக்கிறாள். பரவொளியில் ஒளியாகிய அன்னை பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாசத்தில் பரந்து இருக்கிறாள். தியானிப்பவர்களின் மனதில் அதே ஒளியாகக் காட்சியளிக்கிறாள்.

"கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்"

பஞ்சபூதங்களில் முதலில் தோன்றியது ஆகாசம். பின் வாயுவும், அக்கினியும், நீரும், மண்ணும் தோன்றியது. இந்த ஐம்பூதங்களாக நிற்கும் அன்னை; ஞானம் இல்லாதவர்களுக்குப் பொருள்களாகவும், ஞானம் பெற்றவர்களுக்குப் பரம்பொருளாகவும் காட்சியளிக்கிறாள். இந்தப் பரத்திலேயே மறைந்தது இந்தப் பாற்பூதம். பரத்திலேயே விரிந்து கிடப்பதும் இவளே. ஆக எண்ணில் ஒன்றும் இல்லை, வெளியே என்றவர் "வெளிமுதற் பூதங்களில் விரிந்த அம்மே" எனக் கூறுகிறார். மகத்தான அன்னை தன்னையும் கருணைகொண்டு தன் அறிவிற்கு அகப்படும்படி வந்துவிட்டாள் என பட்டர் அன்னையின் கருணையை நினைந்து உருகுகிறார்.

அம்பிகையை புறத்தே தரிசித்து, அகத்தே தியானித்தால் பேரின்பம் பெறலாம். "வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து...."

அம்பிகையை மனதில் கொண்டு மகிழ்ந்து, அந்த ஆனந்தக் காட்சியைத் தியானம் செய்கிறார். அதனால் அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞ்ஞானம் பெறுகின்றார். வெளியே அவளைக் காண்பது அரிது. மனதிற்குள்ளேயே எளிதில் காணலாம். சாமானியர்களுக்கு உருவமாகக் காணப்படுபவள் தியானம் செய்தபின் ஒளியாகக் காணப்படுபவள். இவ்வாறு அம்பிகை ஒன்றையே கண்டு உண்முகக் காட்சியாக மாற்றும்போது உள்ளத்தில் ஒருமைப்பாடு உண்டாகிறது. தெளிவான ஞானம் மாறாமல் நிற்கும். அதனால் குழப்பமும், கவலையும் நீங்கி இன்பத்தில் திளைக்கலாம். மனதில் முழுவதும் அம்பிகையின் ஜோதி வடிவமே நிறைந் திருக்கும்போது வேறு உணர்ச்சிகளுக்கு இடமில்லை. அன்னையின் திருவுள்ளம் இருந்தால்தான் கண்ணிலே காணும் காட்சியோடு நின்றிராமல் உன் முகக் காட்சியின் அனுபவம் கிட்டும். இந்த அனுபவமே முடிவான பேரின்பமாகத் திகழ்கின்றது.

கடைக்கண் பார்வையினால் உலகாளும் நாயகியே
படைக்கின்ற பிரமன் தலைமேல் எழுதிய விதியை
துடைக்கின்ற பெருமாட்டியே காசி விசாலாட்சி
அடைக்கலமாய் உனை அடைந்தேன் அன்னை அபிராமியே.

அகிலமெல்லாம் வியாபித்து அருள்பாலிக்கும் அன்னையே
முகில் வண்ணன் தங்கையே மூகாம்பிகையே
மகிஷாசுரமர்த்தினி ஸ்ரீ மனோன்மணி அம்பிகையே
சிகி வாகனன் தாயே கடைக்கண் பாருமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியை நல்கும் விஜயதசமி

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி பூஜைகளைத் தொடர்ந்து, பத்தாவது நாள் விஜயதசமி ஆகும். நவராத்திரியின் பேறாகச் சகல வெற்றிகளையும் தரவல்ல ஒரு வெற்றித் திருநாளாக இந்நாள் எம்மத்தியில் அதீத நம்பிக்கை பெறுகிறது.

தமிழர் தம் பண்பாட்டின் ஆரம்பப் புள்ளியாகத் திகழும் "வித்தியாரம்பம்" விஜயதசமி யிலேதான் ஆரம்பிக்கப்படும். எழுத்தறிவூட்டும் முதற்சடங்காக இது அவரவர் வாழ்வில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஏடு தொடக்குதல் என்று பெற்றோரால் குருவானவரிடம் சென்று, தத்தம் பிள்ளைகளை ஒப்படைத்து, குழந்தைகளின் ஞானக்கண்ணைத் தொடுபுள்ளியாலும், பிள்ளையார் சுழி வரைபாலும் அகர இகர உகர எழுத்துக்களாலும் திறந்து, செவியிலே பிள்ளையாரின் தோத்திரப் பாடலை மூன்றுமுறை ஓதி, சரஸ்வதி கடாட்சம் வேண்டி நிற்பர். இதைவிட நாள் காரியங்கள் என விஜயதசமியன்று பாடசாலை, காரியாலயமாக, வர்த்தக, வீடு, குடும்ப, விவசாய கருமங்களும் புதிதாக ஆரம்பித்து வைக்கப்படும்.

ஆலயங்களிலும் வீடுகளிலும் வைக்கப்பட்ட ஓரடுக்கு, மூவடுக்கு, ஐவடுக்கு, ஏழடுக்கு, நவஅடுக்கு என்கின்ற நவராத்திரி கொலுவின் வடிவழகு சிலைகளுக்கு உயிரூட்டியவாறு பத்தாம் நாளன்று தனித்தனியாகப் பூஜை வழிபாடாற்றி, 2023 ஆண்டிலும் வீடும் நாடும் இன்பம் கொழிக்க வரம்வேண்டி கரங்குவிப்பர்.

மேலும் சரஸ்வதி பூஜை அன்று கும்பபீடத்தில் வைத்துப் பூஜை செய்யப்பட்ட புத்தகங்கள், தொழில் உபகரணங்கள், ஆயுதங்கள் மற்றும், சேவைகளுக்கான கணக்கு வழக்குப் பேரேடுகள் யாவற்றையும் நீறுபூசி, பொட்டிட்டு, பூவிதழால் மலரிட்டுப் புதியதாய் ஆரம்பிப்பார்கள். இதேநேரம் ஆலயங்களில் காலை முகூர்த்தவேளை வாழைவெட்டு மானம்பு நிகழ்வு நடைபெறும். இவ்வைபவமானது வீட்டிலும் நாட்டிலும் பீடித்துள்ள அசுரத்தனங்கள் கொடூரங்கள், பலாத்காரங்கள் யாவற்றையும் அழிப்பதற்காகவே நடாத்தப்படுகிறது. எழுந்தருளி யாக அம்பாள் குடை, ஆலவட்டம், மேளதாளம், வேத மந்திர அரோகர ஒலியோடு தரிசனம் கொள்ள, வாழை வெட்டு எனும் சங்காரம் நடைபெறும். இதற்கு அடையாளமாக வெட்டப்பட்ட வாழைத் தண்டுக்கு இரத்தநிறக் குங்குமம் கொட்டப்பட்டு கொடூரங்கள் அழிந்ததாகப் பாவனை செய்யப்படும்.

இதன் பிரகாரம் அடியார்களும் தம் பாவம் நீங்கிய தெளிவுடன், பிரசாதங்களை மருந்தாகக் கொண்டு அவல், கடலை, பொங்கல், வடை, பாயாசம், பஞ்சாமிர்தம், மோதகம், கரும்பு, கற்கண்டு வழங்கப்படும். விஜயதசமியானது வீடு நாடு சமூகம் யாவற்றிற்குமாக ஒரு விமோசனத்தைக் கொண்டுவரும் என்பது ஒரு ஐதீகமாகும்.

*உங்கள் குறைகளை நீங்களே அடையாளம் கண்டுகொள்வதுதான் வளர்ச்சியின் அடையாளம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள 1500 ஆலயங்களில் வாழைவெட்டு நிகழ்வு நடைபெறுகிறது. இந்நிகழ்வு இலங்கைக்கு விடிவைத் தரும் என நம்பலாம். நவதானியம் செழிப்பாக வளர்ந்து நல்ல வாழ்வுக்கு வழிசமைப்பதற்காய் எல்லோருக்கும் வழங்கப்படும். வெற்றிகளும், சித்திகளும் பூத்துக் குலுங்கட்டும்.

## கலையாத வாழ்வு வேண்டும்

விலைவாசியால் மக்கள் தத்தளிக்கும் நிலையிலே
விஜயதசமி வரமாகுது! இலங்கையில்
விரதமாயிருக்கும் நல்லடியார்கள் விரும்பிய
பொருள்களை வாங்க முடியவில்லை,
மலையெனக் கடலை பயறு அவல் இருந்தாலும்
மடியினில் காசுபணம் இல்லையே,
மலைமகள் அலைமகள் கலைமகள் மூவரும்
மனங்கொள்ள படையலில்லையே
தலையாய விரதமென தமிழர்கள் போற்றுவர்
தக்க வெற்றிகளை அள்ளித்தரும்,
தலையான கல்வியாம் ஆயகலை அனைத்தையும்
தப்பாமல் அள்ளித் தருமே,
கொலை, களவு, மது, மாது, தீண்டவிடாமல்
குலங்காக்கும் நல்ல விரதம்
குழந்தைக்கு அறிவூட்டி தொழிலுக்கு வழிகாட்டும்
கலையாத வாழ்வு வேண்டும்.

---

## மாவிலை! மாவிலை! மகத்துவம் நிறைந்த மாவிலை!

கோயில் சம்பந்தப்பட்ட எந்த விழாவை எடுத்துக்கொண்டாலும் சில பொருள்களுக்கு முக்கியத்துவம் தரப்படும் மஞ்சள், குங்குமம், விபூதி, மஞ்சள்தூள் கலந்த அரிசி (அட்சதை), தர்ப்பைப்புல், மாவிலை போன்றவை எல்லா சுபகாரியங்களிலும் பயன்படுத்தப்படும் பொருட்கள். பந்தலிலும் முகப்பிலும் குருத்தோலைத் தோரணங்கள் இடம்பெறும். வீட்டின் முகப்பில் மாவிலைத் தோரணம் கட்டாயம் இருக்கும். இதைக் கட்ட நேரமில்லாவிட்டாலும், ஒரு கொத்து இலையாவது சொருகி வைப்பர். பூஜைகள் செய்யும்போது கலச ஸ்தாபனத்துக்கு கலசத்தின் வாயிலில் தேங்காய் வைப்பதற்கு முன் மாவிலைகள் இட்டு அதன்மீது தேங்காயை வைத்துத்தான் சாமியை ஆவாஹனம் செய்வார்கள். பூஜை முடிந்தபின் மாவிலை நுனியால் கலசத்தில் உள்ள புனித நீரை பக்தர்கள்மீது தெளிப்பர். இப்படி விழாக்களில் முதன்மை இடம்பெறுவது மாவிலை. இதற்கு சமயரீதியான காரணம் உண்டு. மாவிலையின் நுனியில் லட்சுமிதேவி வசிக்கிறாள். அதனால்த்தான் அதிகம் முற்றாததும், நுனி உள்ளதுமான இலையை உபயோகிப்பர். மாவிலை கரியமில வாயுவை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டவை. மாசுபடும் சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துவன. மரம், செடி, கொடிகள் மரத்திலிருந்து வெட்டப்பட்ட பின்னரும் கூட மாசுக்கட்டுப்பாட்டு வாரிய பணியை மாவிலை தோரணம் செய்து வருகிறது என்கிறார்கள். அலங்காரத்துக்கு மட்டுமல்ல, ஆரோக்கியத்துக்கும் உதவும் மாவிலையை பயன்படுத்துவதே நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய துடைத்து.**

**பொருள் :** மெய்யுணர்ந்தவர்க்கு இவ்வுலகத்திலும் பார்க்க வீட்டு உலகம் கிட்டவாயிருக்கும். (353)

**ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**மெய்யுணர் வில்லா தவர்க்கு.**

**பொருள் :** ஐம்புலன்களையும் அடக்கித் தம் வசப்படுத்தியவர்களுக்கும் மெய்யுணர்வில்லையாயின் அதனால் பயனில்லையாகும். (354)

# நற்சிந்தனை

## *மறப்பேனோ குருநாதன் தன்னை*

## தம்பி கேளடா



தாவித்தாவிச் செல்லும் மனத்தைத் தம்பிகேளடா
கூவிக்கூவி யழைத்துக் கூடக் குடியிருத்தடா 01

சேவித்துஞ் சென்றிரந்துந் தம்பி கேளடா
சிவமேநா மென்றுதினஞ் சிந்தை செய்யடா 02

பாவித்தும் பாட்டிசைத்துந் தம்பி கேளடா
மூவிதமாம் ஆசைதன்னை முனிந்து வெல்லடா 03

வாவியாறு சேரிலங்கை நல்ல நாடடா
பாவியென்ற நாமந்தன்னைப் பகைத்து நில்லடா 04

தாவிமயி லேறும்வேலைத் துதித்துக் கொள்ளடா
நாவினில் நமச்சிவாயம் நவின்று நில்லடா 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/126/NEWS/2022

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org